
பக்கம் 06
இந்தியாவை ஒருபோதும் வெற்றி கொள்ள முடியாது


பக்கம் 07
நலத் திட்டங்கள்


பக்கம் 23
உலகக் கிண்ண மைதானங்கள் இன்னும் தயாராகவில்லை

உதயன்
UTHAYAN - A Lively National Tamil Daily
பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30
சுடர்: 29 கதிர்: 010 வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 20, வெள்ளி 06.12.2013


இடியுடன் கூடிய மழை
28C 24C

# அடுத்த பிரேரணையில் அமெரிக்கா அக்கறை

## கூட்டமைப்புடனான சந்திப்பிலும் அது குறித்தே ஆராய்வு

கொழும்பு, டிசெம்பர் 6

அடுத்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக மற்றுமொரு பிரேரணை சமர்ப்பிப்பதற்கு முன்னோடியாக, இங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்காகவே அமெரிக்க வெளிவிவகாரங்களைக் கையாளும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த டேமியன் நேர்பி தலைமையிலான மூன்று சிரேஷ்ட நிலை அதிகாரிகளும் வருகை தந்துள்ளதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைக்கு நேற்று வருகை தந்த அமெரிக்காவின் உயர் மட்ட அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஆகியோரையும், சிவில் சமூகத்தினரையும் சந்தித்தனர்.

அதன் பின்னர் நேற்றிரவு, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோரை இரவு உணவுடன் இரு மணி நேரம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் தற்போதைய நிலைமை குறித்தே சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. கடந்த இரு தடவைகள் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளமை மற்றும் அதனால் இங்கு எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

வடக்கில் மாகாண சபை அமைக்கப்பட்ட பின்னரும், இராணுவத்தினராலும், அரசாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் நில அபகரிப்புக்கள் தொடர்பில் பூரணமான தகவல்கள் அமெரிக்க அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன.

குறிப்பாக வலி.வடக்கில் இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களின் காணிகள் முடக்கப்பட்டுள்ளமை, மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளில் இராணுவத் தலையீடுகள் தொடர்பிலும் அவர்களுக்கு விளக்கப்பட்டது.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பிலும், தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை, காணாமற்போனவர்கள் பிரச்சினை ஆகியன

21 ஆம் பக்கம் பார்க்க

## துப்பாக்கிச் சூட்டில் பெண் காயம்

வவுனியா, டிசெ. 6

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் தனியாக இருந்த பெண் ஒருவர் மீது இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குறித்த பெண் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்திய சாலை விபத்துப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

21 ஆம் பக்கம் பார்க்க

# போரழிவு மதிப்பீடு குறித்து பொதுமக்கள் கடும் அதிருப்தி

## மனித உரிமைகள் குழுவிலும் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.6

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் போர் அழிவு தொடர்பான கணக்கெடுப்பில், மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமையால் பொது மக்களுக்கும் கணக்கெடுப்புக்குச் செல்லும் கிராம சேவையாளர்களுக்கும் இடையே வாக்கு வாதங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தக் கணக்கெடுப்புக் குறித்து மக்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான மட்டுப்பாடுகளுக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் நேற்று வியாழக்கிழமை முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நாடளாவிய ரீதியில், 1982 ஆம் ஆண்டுமுதல் 2009 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற போர்க்கால அழிவுகள் தொடர்பான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தக் கணக்கெடுப்புகளில் பல்வேறு மட்டுப்பாடுகள் விதிக்

21 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் இப்போதும் உயிராபத்தான சூழல்

## இதனால்தான் சந்தித்தவர்களின் விவரத்தை வெளியிட முடியாது என்கிறார் தீபக் ஒப்ராய்



யாழ்ப்பாணம்,டிசெ.6

வடக்கில் நான் சந்தித்த எல்லோரது விவரங்களையும் வெளியிட முடியாது. அதனால் அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படக் கூடிய சூழ்நிலையே அங்கு நிலவுகின்றது என்று கனேடிய வெளிவிவகார மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் நாடாளுமன்றச் செயலர் தீபக் ஒப்ராய் குற்றம் சாட்டியுள்ளார்.

பொதுநலவாய மாநாடு இடம்பெற்ற காலத்தில், இலங்கை அரசு வடக்குக்கான வான்வழிப் போக்குவரத்தை நிறுத்தி வைத்

21 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற் போனவர்களின் விவரங்களை மறைக்கச் சதி

### போரழிவு மதிப்பீடு குறித்துச் சாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.6

காணாமற் போனவர்கள் என்று எவரும் இல்லை என்ற வாதத்துக்கு வலுச் சேர்க்கவே தற்போது தொகை மதிப்பீடு திணைக்களத்தினூடாகக் கணக்கெடுப்பு முன்னெடுக்கப்படுகின்றது. ஒரு பக்கம் சர்வதேசத்துக்குக் கணக்கெடுக்கின்றோம் எனக் காட்டிக்கொண்டு மறுபுறம் கட்டுப்பாடு

21 ஆம் பக்கம் பார்க்க

# தொண்டுப் பணியாளர் கொலை; சர்வதேச விசாரணையே தேவை

## 'அக்ஷன் பார்ம்' அமைப்பு திட்டவட்டம்

கொழும்பு, டிசெ.6

இலங்கை அரசுடன் பல ஆண்டு காலமாக உள்ளக விசாரணைக்கு ஒத்துழைத்தோம். ஆனால் அதில் முன்னேற்றமில்லை. அதனாலேயே சர்வதேச விசாரணையைக் கோருவதாக 'அக்ஷன் பார்ம்' (பட்டினிக்கு எதிரான அமைப்பு) நிறுவனம் தெரிவித்துள்ளது.

'பல ஆண்டுகளாக இலங்கை அரசுடன் நாங்கள் ஒத்துழைத்து விட்டோம். தற்போது உள்நாட்டில் நடத்தப்படக் கூடிய எந்த ஒரு விசாரணையும், சாட்சி அளிப்பவர்களைப் பாதுகாக்கவும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்குத் தீர்வு வழங்கவும் போதியளவு சுயாதீனமாகவும், பக்கச்சார்பற்ற முறையி

21 ஆம் பக்கம் பார்க்க

## நாடாளுமன்றில் நேற்று ஐ.தே.க. குத்துக்கரணம்

### மன்மோகன் வருகையை எதிர்க்கவில்லையென மறுப்பு

கொழும்பு, டிசெ.6

"இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் இலங்கைப் பயணத்தை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கவில்லை" என எதிர்க் கட்சியின் பிரதம கொரடாவும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன் அமரதுங்க நேற்று சபையில் தெரிவித்தார்.

21 ஆம் பக்கம் பார்க்க

## கமலை இடைநிறுத்தியதாக ஈ.பி.டி.பி. நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.6

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் டானியல் றெக்ஷயன் படுகொலை தனிப்பட்ட முரண்பாடுகளின் காரணமாகவே நடந்துள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவருகின்றது. எனவே கொலையாளிகள் யார் என்பது தொடர்பாக நீதிமன்ற விசாரணைகள் முடிந்து தீர்ப்பு வழங்கப்படும் வரை எமது கட்சியின் உறுப்பினர் கந்தசாமி கமலேந்திரனை கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்து இடைநிறுத்தி வைக்க தலைமைப்பீடம் தீர்மானித்துள்ளதாக ஈ.பி.டி.பி கட்சியின் ஊடகப் பேச்சளர் சி.தவராசா அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

எமது கட்சியின் மூத்த உறுப்பினரும், நெடுந்தீவு பிரதேச

21 ஆம் பக்கம் பார்க்க

## போரழிவு கணக்கெடுப்பை மேற்பார்வை செய்யக் குழு

### தெற்கில் இருந்து வருகிறது

யாழ்ப்பாணம், டிசெ.6

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் போர்க்கால இழப்பீட்டுக் கணக்கெடுப்புக்கள் தொடர்பில் மேற்பார்வை செய்வதற்காகத் தென்னிலங்கையிலிருந்து விசேட குழுவினர் இரு வார காலத்தில் வட பகுதிக்கு வருகை தரவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக, உள்நாட்டுப் போரில் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், சொத்தழிவுகள் தொடர்பில் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிராம சேவையாளர்கள் ஊடாக வீடு வீடாக இந்தத் தகவல்கள் திரட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த நவம்பர் 28 ஆம் திகதி

21 ஆம் பக்கம் பார்க்க

## தந்தைக்கும் மகனுக்கும் நள்ளிரவு கோடரி வெட்டு

### வீடு புகுந்து கொள்ளையர்கள் அட்டகாசம்

யாழ்ப்பாணம்,டிசெ.6

ஆயுதங்களுடன் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் தந்தையையும், மகனையும் கோடரியால் வெட்டிக் காயப் படுத்தினர். அத்துடன் வீட்டிலிருந்த குடும்பப் பெண்ணையும் கடுமையாகத் தாக்கினார்கள். இதன் பின்னர் வீட்டுக்குள் நுழைந்த அவர்கள் அங்கு தேடுதல் நடத்தி எவையும் அகப்படாதமையால் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நள்ளிரவு உடுவில் லவ்லேனில் இடம்பெற்றது. இதில் செல்லத்துரை -சண்முகநாதன் (வயது -54), அவரது மகன் யதுஷன் (வயது -20) ஆகிய இருவருமே கோடரி வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளனர் அத்துடன் சண்முகநாதன் நாகேஸ்வரி (வயது -48) என்ற குடும்பப்

21 ஆம் பக்கம் பார்க்க

# பட்டயக் கணக்காளர் நிறுவனத்துடன் யாழ். பல்கலைக் கழகம் ஒப்பந்தம்

யாழ்ப்பாணம், டிசெ.6

மாணவர்களின் திறனை அதிகரிக்கும் நோக்கில் யாழ். பல்கலைக்கழகக் கணக்கீட்டுத் துறைக்கும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்துக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

யாழ்.பல்கலைக் கழகத்தில் நேற்று வியாழக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கல்வி சார்ந்ததும் தொழிற்தகைமை சார்ந்ததுமான இந்த இரண்டு நிறுவனங்களும் தமது கற்கை நெறிகள், நிகழ்ச்சித்திட்ட அமர்வுகள், பயிற்சிப் பட்டறைகள் என்பவற்றை முன்னெடுக்க முடியும். தமது கல்விசார் விரிவுரையாளர்களை வளவாளர்களாகப் பாவித்துச் செயற்பட முடியும்.



கணக்கியல் பட்டதாரிகளும், பட்டமேற் கல்வியைப் பெற்றவர்களும் பட்டயக் கணக்காளர் ஆவதற்கும், அதற்கு வேண்டிய விலக்களிப்புக்களைப் பெறவும் இந்த ஒப்பந்தம் வகைசெய்கிறது. தொழிற்தகைமை சார்ந்த பட்டயக் கணக்காளர் பரீட்சை எடுப்பதற்கு ஊக்கம் கொடுக்கும் இந்தச்செயல்முறைஉடனடிவேலை வாய்ப்பைப் பெற உதவும் எனத்தெரிவிக்கப்பட்டது.

வணிக நிர்வாக மாணிப்பட்டத்துக்கான கணக்கீட்டு நிபுணத்துவம், தொழில் அங்கீகாரம் ஆகியவற்றைப் பெறவும் இது உதவும். இதன்படி இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் தனது தொழில் சார் கற்கை நிகழ்ச்சித் திட்டத்துக்கான புலமைப் பரிசில்களையும் வழங்கவுள்ளமை பட்டதாரி மாணவர்களுக்கு நன்மை அளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் யாழ். பல் கலைக்கழக கணக்கீட்டுத் துறை தலைவர் எஸ்.பாலபுத்திரன், வணிக முகாமைத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் ரி. வேல்நம்பி, துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மற்றும் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தலைவர் சுஜீவா ராஜபக்ஷ, நிறுவன அதிகாரி அருமை அல்விஸ் ஆகியோர் உரையாற்றினர். (த-4)

# பால்மா, காஸ் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்படா

## நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் தெரிவிப்பு

பால்மாக்கள் மற்றும் சமையல் எரிவாயுகள் (காஸ்) ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்படாது என்று நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தார்.

பால்மாக்களின் விலைகளை அதிகரிக்குமாறு பால்மா உற்பத்தி நிறுவனங்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன. எனினும், இந்தக் கோரிக்கை அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

இதனால் பால்மா உற்பத்தி நிறுவனங்கள் பொதி செய்யப் பட்ட பைக்கற்றுக்களைப் பதுக்கி வைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக ரூமி மர்சூக் தெரிவித்தார்.

இந்த செயற்பாட்டின் மூலம் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலப் பகுதியில் பால்மாக்க ளின் விலைகளை அதிகரிக்க பால்மா உற்பத்தி நிறுவனங் கள் திட்டமிட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

வெலிசர பிரதேசத்தில் மறைத்துவைக்கப்பட்ட ஒரு தொகுதி பொதி செய்யப்பட்ட பால்மா பைக்கற்றுக்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

இது போன்று இன்னும் பல இடங்களில் பொதி செய்யப்பட்ட பால்மா பைக்கற்றுக்கள் மறைத்துவைக்கப்பட்டுள்ளன என்றும் இவை விரைவில் கண்டுபிடிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பால்மா தட்டுப்பாடு மற்றும் பால்மா பைக்கற்றுக்களைப் பதுக்கி வைக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் பற்றி 011-2399146 அல்லது 0717220444 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தனக்கு அறிவிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் நாட்டின் பல பாகங்களில் பால்மாக்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 1560 பேர் தொழிற்சந்தையில் வேலை கோரி விண்ணப்பம்

யாழ்ப்பாணம்.டிசெ.6

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடத்தப்பட்ட தொழிற்சந்தையில் ஆயிரத்து 560 பேர் வேலை வாய்ப்புக்காக விண்ணப்பித்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

யாழ்.மாவட்ட செயலக மனித வலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக தொழிற் சந்தை நடத்தப்பட்டு, இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தொழிற் சந்தை நடத்தப்பட்டது. இதில் 22 நிறுவனங்கள் பங்கெடுத்திருந்தன. இதில் வேலை வாய்ப்புக்காக ஆயிரத்து 560 பேர் அன்றைய நாளில் மட்டும் பதிவு செய்துள்ளனர். இவர்கள் தற்போது மேற்படி நிறுவனங்களால் நேர்முகத் தேர்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து 606 பேருக்குத் தொழிற்சந்தை ஊடாக வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# பூவரசங்குளம் ம.வி வளவில் தொடர்ந்தும் இராவணுவத்தினர்

## *முதலமைச்சரின் கடிதத்துக்கும் பதில் இல்லை*

யாழ்ப்பாணம்.டிசெ.6

வவுனியா, பூவரசங்குளம் மகா வித்தியாலய வளாகத்திலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் பிரேரணை தொடர்பில் இராணுவம் இதுவரை எது வித பதிலும் வழங்கவில்லை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற வடக்கு மாகாண சபையின் அமர்வில், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவினால் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டது.

வவுனியா பூவரசங்குளம் மகா வித்தியாலய வளாகத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட இந்தப் பிரேரணை சபையின் ஏகமனதான ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட பிரேரணை தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என முதலமைச்சரிடம் கேட்ட போது,

வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மேற்கோள்காட்டி, இராணுவத்தினருக்குக கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதற்கு இதுவரை பதில் எதுவும் கிடைக்கவில்லை.

மீண்டும் இராணுவத்தினருக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது -என்றார். (த-5)

# கனகபுரத்தில் நூலகம் திறப்பு

கிளிநொச்சி,டிசெ.6

கிளிநொச்சி கனகபுரத்தில் ஐந்து மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நூலகம் நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

'றீபில்டிங் ஸ்ரீலங்கா' என்னும் நிறுவனத்தினால் கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் ஐந்து மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த நூலகம் நேற்று முற்பகல் 9.30 மணிக்குதிறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் க.மோகனபவன், கரைச்சிப் பிரதேச சபையின் தலைவர் ந.வைகுந்தராஜா, பிரதேச சபைச் செயலாளர் இ.கிருஸ்ணகுமார், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

# நாளை மின் தடை

யாழ்ப்பாணம்,டிசெ.6

உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு மற்றும் கட்டமைப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை எழுதுமட்டுவாழ், மிருசுவில், உசன், கெற்பலி, விடத்தற்பளை, கைதடி, நாவற்குழி, கேரதீவு, நுணாவில், சாவகச்சேரி நகர்ப்பகுதி, மறவன்புலோ, திருநெல்வேலி மருத்துவபீடப் பிரதேசம், தலங்காவில், ஆனைப்பந்தி, பரமேஸ்வரா, கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படி, ஆஸ்பத்திரி வீதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

# பாதிப்படைந்த மாணவர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள்

## *யாழ்ப்பாணத்தில் சுனேத்திரா அறிவிப்பு*

போர் மற்றும் சுனாமியால் பாதிப்படைந்த மற்றும் மாற்றுத் திறன் கொண்ட மாணவர்களின் நலத்திட்டகள் 40 நிலையங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன என்று 'சுனேரா' நிறுவனத்தின் தலைவர் சுனேத்திரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

'சுனேரா' யாழ். நிலையத்தின் 'வண்ணச் சிறகுகள்' நிகழ்வு நேற்று வியாழக்கிழமை யாழ். திருமறைக் கலா மன்றத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் தொடக்கம் மாத்தறை வரையான பகுதிகளில் சிறுவர் நலத்திட்டங்களுக்காக 40 நிலையங்கள் செயற்பட்டுவருகின்றன. கடந்த இரண்டரை வருடங்களாக யாழ்ப்பாணத்தில் இந்த இல்லத்தின் சேவை இடம்பெற்று வருகின்றது. எமது நிறுவனத்தின் செயற்பாடு நன்மைதரக் கூடியதாக உள்ளது. இன்னும் பல சேவைகளை வழங்க நாம் தயாராகவுள்ளோம் - என்றார்.



இந்த நிகழ்வில் நிலையச் சிறுவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் யாழ். மாவட்ட நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா, வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் எஸ்.சிவராஜா மற்றும் சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-14)

# பீமரத சாந்தி நிகழ்வு

யாழ்ப்பாணம்.டிசெ.6

சிவஸ்ரீ சோ.இ பிரணதார்த்திஹரக் குருக்கள் சுகந்தி குந்தளாம்பிகை அம்மா தம்பதிகளின் எழுபதாவது அகவை பீமரத சாந்திநிகழ்வு இன்று காலை 8 மணிக்கு கோப்பாய் சைவ சமய அருள்நெறி மன்ற மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'தர்ம சாஸ்திரம் கூறும் வாழ்க்கை நெறி' வினா விடை தொகுப்பு நூலும் வெளியிடப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

# முதியோர் உதவுதொகை வவுனியாவில் திருட்டு

## *வவுனியா உப அஞ்சல் அலுவலகத்தில்*

வவுனியா,டிசெ.6

முதியோர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவான 75 ஆயிரம் ரூபா பணம் திருடர்களால் அபகரிக்கப் பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு வவுனியா கோவிற்குளம் உப அஞ்சல் அலுவலகத்தில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

நேற்று முன்தினம் வயோதிபர்களுக்கான மாதாந்த உதவித் தொகையாக வழங்கப்படும் பணம் உப அஞ்சல் அலுவலத்துக்குக் கிடைக்கப் பெற்றது. இந்தப் பணத்தை நேற்றைய தினம் வயோதிபர்களுக்கு வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் உப அஞ்சல் அதிகாரி அதனை அலுவலகத்தில் வைத்து விட்டு வீடு சென்றுள்ளார்.

நேற்றுக் காலை கடமைக்காக அலுவலகம் வந்த அவர் அலுவலகம் உடைக்கப்பட்டு அங்கிருந்த பணம் திருடப்பட்டிருந்ததை அவதானித்தார். உடனடியாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. அவ்விடத்திற்கு வந்த வவுனியா பொலிஸார் தொடர்ந்து விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆசிரியர் சங்க பொதுக் கூட்டம்

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். கிளையின் வருடாந்த பொதுக் கூட்டம் யாழ். மத்திய கல்லூரியில் நாளை சனிக்கிழமை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கூட்டத்தின் போது புதிய நிர்வாக சபைத் தெரிவும், வன்னி, வடமராட்சி, கிழக்கு மற்றும் தீவக வலயத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடவுள்ளது. (த-4)

## உடுவில் பிரதேச சபை கண்டனத் தீர்மானம்

*நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் கொலை குறித்து*

வலி.வடக்கு, டிசெ.6

நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளர் இனம் தெரியாதவர்களின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு உள்ளாகி படுகொலை செய்யப்பட்டுள்ளமையை வலி.தெற்கு உடுவில் பிரதேச சபை வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் கண்டனத் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளது.

வலி.தெற்கு பிரதேச சபையின் நவம்பர் மாதக் கூட்டம் தலைவர் தி.பிரகாஷ் தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் கடந்த 28 ஆம் திகதி கூடிய போது சபையின் உறுப்பினர்களால் ஏகமனதாக குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தவிசாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் இத்தகைய சம்பவங்களை குறிப்பாக இத்தகைய அநாகரிகப் படுகொலைகளை மனிதாபிமானமிக்க எவராலும் அனுமதிக்க முடியாது என்றும், எதிர்காலத்திலும் இத்தகைய கொலைகள் வன்முறைகள் இடம்பெறக் கூடாது என்பதற்காகவும் இத்தகைய தீர்மானம் மனிதாபிமான அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-86)

"-"

**வலி. தெற்கு பிரதேச சபை வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் கண்டனத் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளது.**

# பெண்களுக்கெதிரான வன்முறை நீதிகோரி மன்னாரில் பேரணி



மன்னார்,டிசெ.6

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் முகமாகவும், அவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளுக்கு நீதிகோரியும் நேற்று வியாழக்கிழமை மன்னாரில் விழிப்புணர்வு நிகழ்வும், எதிர்ப்புப் பேரணியும் இடம்பெற்றுள்ளன.

மன்னார் மாவட்ட மாதர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட பெண்கள் உரிமைக்கான செயற்பாட்டுக் குழுவினர் இணைந்து குறித்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

நேற்றுவியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் குறித்த நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதன்போது மன்னார் மாவட்டத்தில் பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவங்களின் பதிவுகளாக மீட்கப்பட்ட பெண்களின் 'ஆடைகள்' காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

அதனைத் தொடர்ந்து பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்கக் கோரிய பெண்கள் உரிமைக்கான செயற்பாட்டுக் குழுவினர் தயாரித்த மனு வாசிக்கப்பட்டு அங்கு வருகை தந்த மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மேல் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு மனு கையளிக்கப்பட்டது. மனு கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை சுட் டிக்காட்டி வீதி நாடகமும் இடம்பெற்றது.

இறுதியாக மன்னார் பஸ் நிலையத்தில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று ஆரம்பமாகி மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக மன்னார் மருத்துவமனைச் சந்தியைசென்றடைந்தது.

குறித்த நிகழ்வில் சட்டத்தரணி எஸ்.வினோதன், மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி பிரிமூஸ் சிறாய்வா, பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை அடிகளார், மன்னார் மாவட்ட மாதர் ஒன்றியத்தின் மாவட்ட இணைப்பாளர் மகாலட்சுமி குருசாந்தன், மட்டக்களப்பு கலாசர்ரக் குழுவினர், சமாதான அமைப்பின் தலைவர் பீ.ஏ.அந்தோனிமார்க், பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் என பல நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். (வ-12)

"-"

**நேற்றுவியாழக்கிழமை முற் பகல் 10மணியளவில் மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் குறித்த நிகழ்வுகள் ஆரம்பமாகின.**

## வடமராட்சி கிழக்கு மீனவர்கள் கடற்கொந்தளிப்பால் பாதிப்பு

*5 நாள்களாக தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை*

வடமராட்சி, டிசெ.6

வடமராட்சி வடக்கு, கிழக்கு பிரதேச கடல் கொந்தளிப்பால் கடந்த 5 தினங்களுக்கு மேலாக கடற்றொழிலுக்கு தொழிலாளர்கள் செல்லாததால் மீன் வகைகளை சந்தைகளில் பெறமுடியாத நிலைமை காணப்படுகிறது. இதனால் வருமானமின்றி கடற்றொழிலாளர் குடும்பங்கள் அன்றாட வாழ்க்கைக்கே கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இலங்கைக்கு தென்கிழக்கு வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள தாழமுக்கத்தால் இந்தப் பிரதேசங்களின் கடற் பகுதிகளில் கடற்கொந்தளிப்பும், கடும் காற்றுடன் இடையிடையே பலத்த மழையும் பெய்கிறது.

இதனால் தொழிலாளர்கள் கடலுக்குச் செல்லாமல் வீடுகளில் முடங்கியிருப்பதாக மீனவ சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மீன்பிடித் தொழில் இன்மையால் சந்தைகளில் மீன் வகைகளை நுகர்வோர் பெற்றுக் கொள்ள முடியவில்லை. மாறாக ஆங்காங்கே கருவாடு விற்பனை செய்யப்படுகின் றது.

அதன் விலையும் அதிகரித்துள்ளது. மீன் வகைகள் கிடைக்காமையால் புலால் உண்போர் கருவாடு, கோழி இறைச்சி வகைகளைக் கொள்வனவு செய்து வருகின்றனர். அத்துடன் மரக்கறி வகைகளின் விலைகளும் அதிகரித்துள்ளன. (வ-8)

# பாதீனிய ஒழிப்பு வடக்கில் தீவிரம்



கோப்புப் படம்

யாழ்ப்பாணம், டிசெ.6

வடக்கு மாகாணத்தில் பாதீனியப் பரம்பல் அதிகரித்துள்ளதை அடுத்து பாதீனிய ஒழிப்பு மாதமாக இந்த மாதத்தைப் பிரகடனப்படுத்தி கடந்த முதலாம் திகதி புத்தூர் நிலாவரைப் பகுதியில் இது தொடர்பான செயற்பாடுகளை வடமாகாண முதலமைச்சர் ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் அடுத்து வடக்கில் மும்முரமாக பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் பாதீனியச் செடிகளைப் பிடுங்கி அழிக்கும் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

மாநகர சுகாதார பொறுப்பதிகாரி எஸ்.ரகுமார் தலைமையில் பாதீனிய ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நல்லூர் பிரதேச சபை, கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலய சூழலில் பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகையை இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பித்து வைக்கவுள்ளது.

நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய, நீர்வளம், கால்நடை சுற்றுலாத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்வார்.

நல்லூர் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பொதுமக்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, நாளை சனிக்கிழமை வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் இடம்பெறும் என்று வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.உதயகுமார் தெரிவித் தார்.

பாதீனிய ஒழிப்பு தொடர் பான கலந்துரையாடல் கோப் பாய் பிரதேச செய லகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இதில் உரையாற்றிய பிரதேச சபைத் தவிசாளர் நாளைசனிக்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராயிலும், கோப்பாயில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை நீர்வேலியிலும், எதிர்வரும் 10ஆம் திகதி புத்தூரிலும் அச்சுவேலியில் எதிர்வரும் 11ஆம் திகதியும் பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்-என்றார். (வ-7-17)

## மொழியைப் பாதுகாப்பது தமிழரின் வரலாற்றுக் கடமை

*வடமாகாண கல்வி அமைச்சர் அறைகூவல்*

அக்கராயன், டிசெ.06

தமிழ் மொழியைப் பாதுகாக்க வேண்டியது தமிழர்களின் வரலாற்றுக் கடமையாகும்.

இவ்வாறு வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார். கிளிநொச்சியில் கடந்த 02 ஆம் திகதி தமிழ்ச் சங்கம் நடத்திய 11 ஆவது திருக்குறள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரை யாற்றுகையில்;

தமிழர்களுடைய பெரிய பலமாகத் தமிழ் மொழி விளங்குகின்றது. ஆனால் எமது மொழியில் எம்மை அறியாமலேயே பிறமொழிக் கலப்பு ஏற்பட்டு வருகின்றது. தொடர்பு சாதனங்கள் அனைத்திலுமே தமிழ் மொழியில் பிறமொழிகள் கலந்து இருப்பதை அவதானிக்க முடிகின்றது. நான் ஆற்றுகின்ற இந்த உரையில் கூட எத்தனையோ ஆங்கிலச் சொற்கள் தமிழுடன் கலந்துள்ளதைக் காண முடியும்.

ஆனால் தமிழ் மொழியில் பிறமொழிகள் கலக்காமல் இருப்பதற்கு நாம் பாடுபட வேண்டும். இதில் நாம் தவறுவோமானால் தென்னிந்தியாவில் ஆங்கிலம் கலந்த தமிழ் மொழி காணப்படுவது போன்று எமது நாட்டிலும் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளது. கிளிநொச்சியில் தமிழ்ச் சங்கம் போன்று பல அமைப்புக்கள் தமிழ் மொழியைப் பாதுகாக்க முன்வர வேண்டும் எனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் வே.இறைபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மருத்துவர் ச.முருகானந்தன், கிளிநொச்சி மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் நா.சோதிநாதன், திருமதி கருணாதேவி செல்வராசா, கலாபூஷணம் கனக மகேந்திரா, பளை மத்தியகல்லூரிஅதிபர்எஸ்.பாலகிருஷ்ணன், ஜெகதீஸ் வரன், புஸ்பவதி தம்பதிகள் ஆகியோருக்கு வடமாகாணக் கல்வி அமைச்சர் 'தமிழ் எழில்' விருது வழங்கி மதிப்பளித்தார்.

அத்துடன் தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (க-18)

## மரண அறிவித்தல்

### செல்வி சந்தியாப்பிள்ளை திரேசம்மா



உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சந்தியாப்பிள்ளை திரேசம்மா நேற்று (05-12- 2013 வியாழக்கிழமை காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலம் சென்றவர்களான விறிசித்தம்மா பிலோமினா மற்றும் சூசைப்பிள்ளை (நியூஸி லாந்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான லூர்த்தையா, இறப்பியேல்பிள்ளை, மற்றும் றஞ்சிதம் (நியூஸி லாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அல்போன்சா, தேவராசா (ஜேர்மனி), ஞான உதயதாசன் (ஜேர்மனி), சாந்தி, சுலோஜினா, இருதராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சிறியதாயரும், சப்சிங், சுமித்திரா (ஜேர்மனி), சகாயராணி (ஜேர்மனி), அன்ரனி டெறிங்ரன், சியாமளா (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜிவன் பிரான்ஸ்), சுதர்னா, ரவிக்குமார், சுலக்ஷன், நிருபா, நிரூசன், நிக்கொம் (ஜேர்மனி), வினோத் (மலேசியா) கனிஸ்ரன், கமில்ரன், அஜித், ரவினா, றொஷனா,றெமின் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ரஜீவன் றெக்சனா றிசானா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2013) வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு காக்கைதீவு சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுககொள்ளவும்.

தகவல்:
பேரமக்கள்

### கஜமுக சூரசங்காரம்

யாழ்ப்பாணம்.டிசெ. 6 சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் பெருங்கதை கஜமுக சூரசங்கார நிகழ்வு எதிர் வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை3.30மணிக்கு கஜமுக சூரசங்காரமும் தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகமும் பூஜையும் இடம் பெறும்.

கடந்த மாதம் 18 ஆம் திகதிபெருங்கதைஆரம்பமாகி இடம் பெற்று வருகின்றது. (ஐ)

## மரண அறிவித்தல்

### அப்புக்குட்டி சிவராஜசிங்கம்

தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி சிவராஜசிங்கம் (நெவின்ஸ் உரிமையாளர், முன்னாள் மல்லிகா ஹாட்வெயார் ஸ்ரோர்ஸ், கொழும்பு - 12) நேற்று முன்தினம் (04.12.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அற்புதத்தின் கணவரும் லெனின்ராஜ், ஜெயராஜ் (YFC&LPF), லவன்ராஜ் (ஜேர்மனி), சுகுணராஜ் (BTTB), ராஜ்கண்ணா (Charm Advertising) ஆகியோ ரின் தகப்பனாரும் எமிலி, வள்ளி, சசிகலா,நெலுனிகா, சங்கீதா ஆகியோரின் மாமனாரும் ஜோயல், அயலீன், கேனாஷ், அக்ஷா, மெலனி, அந்தனி, சந்தோஷ் ஆகியோரின் பாட்டனா ரும், காலஞ்சென்ற சிவரூபலீலா மற்றும் சிவஞானசுந்தரம், சிவமங்கையர்க்கரசி, காலஞ் சென்ற ஜெயசிங்கம் மற்றும் ஜெயமணிதேவி காலஞ்சென்ற சிவஞானசுப்பிரமணியம் மற்றும் முத்துலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.12.2013) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிமுதல் இல. 235, மாதம்பிட்டிய வீதி, மஹாவத்த, கொழும்பு - 14 இல் உள்ள Supereme Parlour இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை 07.12.2013 சனிக்கிழமை காலை மு.ப. 10.30 மணிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு மாதப்பிட்டிய பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 80, walls lane,
Colombo - 15

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தப்பிள்ளை வேலுப்பிள்ளை

(முன்னாள் பலநோக்குகூட்டுறவுச் சங்க பணியாளர் தெல்லிப்பழை)



விழிசிட்டி தெல்லிப்பழை மேற்கு தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் இந்து மகாவித்தியாலயப் பாடசாலை வீதி கோண்டாவிலை தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்ட கந்தப்பிள்ளை வேலுப்பிள்ளை நேற்று (05.12.2013) வியாழ்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - இளையப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம் தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற செல்வநாயகியின் அன்புக்கணவரும் மகேஸ்வரன் (ஜேர்மனி), பரமேஸ்வரன் (பொறியியலாளர் - கனடா), அம்பிகாதேவி, சிறிதரன் (கோட்டக்கல்விப்பணியாளர் - சண்டிலிப்பாய்), கங்காதரன், யோகேஸ்வரி (பலநோக்கு கூட்டுறவுச்சங்க கணக்கு பதிவாளர் சுன்னாகம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் தயாளினி (ஜேர்மனி), ஜிவ்வியா (கனடா) ,மனோகௌரி, சனாதனி ( ஆசிரியை யா/ அருள்நந்தி வித்தியாலயம் - தோப்பு அச்சவேலி) காலஞ்சென்ற விமலதாசன் ஆகியோரின் அன்பு மாமனும் தர்சன், விதுனன் (ஜேர்மனி), சௌமியா, அக்சலா (கனடா), கஜீவன், பைரவி, கஜானன, சங்கவி ,கவிகரன், வைசாலினி, திவ்வியகுமரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற வன்னித்தம்பி தங்கம்மா ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தையா Dr.சிவசுப்பிரமணியம் (ENT) மீனாம்பிகை மற்றும் முருகையா (இங்கிலாந்து) காலஞ்சென்ற சண்முகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்து பாடசாலை வீதி,
கோண்டாவில மேற்கு கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### பிரான்சிஸ் மெண்டிஸ் பெலோ



யாழ்ப்பாணம் பாஷையூரைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் மெண்டிஸ் பெலோ (30.11.2013) அன்று ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்ஸிஸ் - திரேஸ்மலர் தம்பதியரின் மூத்தபுதல்வனும் இளவாலையைச் சேரந்த காலஞ்சென்ற அந்தோணிப்பிள்ளை மற்றும் லூர்துமேரி தம்பதியரின் மருமகனும் மரியராணியின் (ரதி) அன்புக்கணவரும் ஸ்ரெபான், ஸ்ரெலானி ஆகியோரின் அன்புத்தந்தையும் குயின்ரஸ், ராஜினி, கலாஜினி, பிளேசியஸ், டெனிசியஸ், றொஜின், டொறின் ஆகியோரின் சகோதரரும் பெர்ணன்டோகுமாரி, குகதாஸ், உதயராணி, அமுதா, யூட்றெறன்ஸ் மற்றும் பாப்பா, மனோ ரவி, ரஜனி காலஞ்சென்ற ஜெசி மற்றும் நில்மினி, ஜெனோ ஆகியொரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (06.12.2013) வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (07.12.2013) சனிக்கிழமை பாஷையூர் புனித அந்தோணியார் தேவாலயத்தில் காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P : 021 5681817

தகவல்:
ராஜினி பெர்ணான்டோ (சகோதரி)

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் துரைசாமி (கனகலிங்கம் - ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் துரைசாமி (கனகலிங்கம்) நேற்று (05.12.2013) வியாழ்கக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - முத்தம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற கமலாவதியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற பொன்னையா - நாகம்மா தம்பதியரின் மருமகனும் மகேந்திரன் றவீந்திரன் நரேந்திரன் (ஆஸ்திரேலியா), பாலா (ஜேர்மனி) காலஞ்சென்ற இந்திரா, சுரேந்திரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் அனசூயா, கௌரிநாயகி, பத்மஜா, மேனகா ஆகியோரின் அன்புமாமனும் செந்தூரன் ,லலிதா , கிருஷ்ணா, ஆதவன் ,கௌசிகா ஆகியோரின் அனபுப்பேரனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் பொன்னையா ,சுப்பையா மற்றும் கனகரட்டினம் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற பாலசிங்கம் ,பத்மநாதன் ராஜசிங்கம் மற்றும் சபாரட்டினசிங்கம், பாக்கியநாதன் ஆகியோரின் அன்புமைத்துனுரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2013) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாரந்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிலித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P : 021 3214423

தகவல்:
திருமதி. R.கந்தப்பா (சதா -ஓய்வு பெற்ற சமூக சேவை உத்தியோகத்தர் ) தமையனார் மகள்.

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி தில்லைநாதன்

(காந்தி, இளைப்பாறிய நெடுந்தீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்)

நெடுந்தீவு மேற்கு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 309 கரும்புள்ளியான் நட்டாங்கண்டலை வதிவிடமாகவும்கொண்ட சின்னத்தம்பி தில்லைநாதன் (காந்தி) கடந்த 03.12.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பராசக்தி தம்பதியரின் அன்புமகனும் சுப்பிரமணியம் -வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும் கமலாவதியின் அன்புக்கணவரும் பகீர்தரன், வாகீஸ்வரன், திருவேணி (பிரான்ஸ்), சிறி நமணன், திலகவேணி (கனடா), மயூரன், விஜயவேணி ஆகியோரது பாசமிகு தந்தையும் கிருஸ்ணவேணி, நிருஜா, ரதிஸ்வரன் (பிரான்ஸ்), ஜெயக்குமார் (கனடா) ஆகியோரது மாமனும் பாலசிங்கம் காலஞ்சென்ற லோகேஸ்வரி , மகாதேவன், சண்முகநாதன், சிற்சபாநாயகி, கருணாமூர்த்தி (சுவிஸ்), வசந்தகுமாரி, உதயகுமார் (கனடா) ஆகியோரின் உடன் பிறப்பும் காலஞ்சென்ற குமாரசாமி வேலுப்பிள்ளை பரமானந்தம், சபாரத்தினம், பரமேஸ்வரி, சிவலிங்கம், தர்மராஜா (சுவிஸ்), காலஞ்சென்ற பத்மராணி, பரமதாஸ் (அமெரிக்கா) காலஞ்சென்ற கிருஸ்ணகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.11.2013) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலியாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 309 கரும்புள்ளியான் நட்டாங்கண்டல்.

தகவல்:
குடும்பத்தினர். தோ.பே. 077 3101110, 077 3262057

## ஆலயங்களை உடைத்துத் திருட்டு

வரணி, டிசெ.6

மிருசுவில் பிரதேசத்தில் கடந்த ஞாயிறு இரவு இரண்டு இந்து ஆலயங்கள் உட்பட நான்கு இடங்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளதுடன் பெறுமதியான உடைமைகளைத் திருடிச் சென்றுள்ளனர்

மிருசுவில் பெரிய நாவலடி ஞான வைரவர் ஆலயத்தின் கூரையைப் பிரித்து திருடர்கள் ஆலயத்துக்குள் நுழைந்து விக்கிரகத்தின் முக அங்கி, நகை உட்பட பாத்திரங்களையும் திருடியதுடன் உள்ளிருந்தே கதவைத் திறந்து வெளியேறியுள்ளதாகக் கூறப்பட்டது.

தவசிக்குளம் பகுதியில் உள்ள நாச்சிமார் கோயிலிலும் அன்றைய தினம் கதவு உடைக்கப்பட்டு பெறுமதியான ஆலய உடைமைகள் திருடப்பட்டுள்ளன. பெரிய நாவலடிப் பிரதேசத்தில் சி.ரவீந்திரனின் வீட்டை உடைத்து ஏழாயிரம் ரூபா பணம், நகைகள் அடங்கிய கைப் பை ஒன்றும் களவாடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. அதே இடத்தில் கடை ஒன்றும் உடைக்கப்பட்டு பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன. இதன்போது திருடப்பட்ட பொருள்களின் விபரம் தெரியவரவில்லை. சம்பவங்கள் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடங்களுக்குச் சென்று பார்வையிட்டதுடன் மோப்ப நாயையும் வரவழைத்து திருடர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (வ-122)



உலக உணவு நிறுவனத்தின் வேலைக்கான உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் கோப்பாய் கைதடி வீதியில் காணப்படும் பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்யும் பணி தற்போது இடம்பெற்று வருகின்றன. திட்டத்தில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட பயனாளிகள் கலந்துகொண்டு துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டுள்ளதைக் காணலாம். (ஒ-7)

## சபைக்குட்பட்ட வீதிகளுக்கு பெயர்ப்பலகை பொருத்துக

*மாநகர சபைக் கூட்டத்தில் உறுப்பினர் கோரிக்கை*

கொழும்புத்துறை, டிசெ.6

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் பெயர்ப்பலகைகள் பொருத்தப்படாது காணப்படும் வீதிகளுக்கு விரைவில் பெயர்ப்பலகைகள் பொருத்தும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். வீதிகளின் பெயர்கள் குறிக்கப்படாமையால் மக்கள் தமது போக்குவரத்து தொடர்பாடல்களில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற போது மாநகரசபை உறுப்பினர் அ.கொர்னேலியஸ் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

போர் முடிவடைந்து மாநகர சபைத் தேர்தல் நடைபெற்று 4 வருடங்கள் கடந்த நிலையிலும் போராலும் வேறு காரணங்களாலும் அழிவுற்றுச் சேதமடைந்த வீதிகள், சிறு ஒழுங்கைகளின் பெயர்ப் பலகைகள் பெரும்பாலும் இதுவரை சீர்செய்யப்பட வில்லை. இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் சபையில் எடுத்த தீர்மானத் தின்படி யாழ்.ஆயர் இல்ல வீதியையும் புனரமைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.


இதேவேளை-ஆளும் கட்சியில் உள்ள ஓர் உறுப்பினர் குறுக்கிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் உறுப்பினர்களையும் அநாவசியமாக விமர்சித்து குற்றஞ் சாட்டிய போது சக உறுப்பினர்கள் கூட்டமைப்பை அநாகரிகமான முறையில் தாக்கிப் பேச வேண்டாம் என்று கடிந்து கொண்டனர். முதல்வர் எந்த வித பதிலும் கூறாது கூட்டத்தை நிறைவு செய்தார். (வ-135)

# இந்து ஆலய அழிப்பை கண்டித்து விசேட பூசை

வலி.வடக்கு, டிசெ.6

இந்து ஆலயங்களில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தவும் இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டு அழிக்கப்படுவதைத் தடுக்க இறையருள் வேண்டியும் சுன்னாகம் கதிர மலை சிவன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை வேண்டுதல் நிகழ்வுகள் இடம்பெற்றன. சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுமார் ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட அடியவர்கள் காலை முதல் மாலை வரை கலந்து கொண்டனர்.

நிகழ்வில்கலந்துகொண்ட அடியவர்கள் வாசலில் வைக் கப்பட்டிருந்த கொப்பிகளில் நமச்சிவாய மந்திரத்தை பல தடவைகள் எழுதியதுடன் விசேட நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர். காலையில் வேத பாராயணம் மற்றும் அரிசிமா அபிஷேகத்துடன் ஆரம்பமாகிய நிகழ்வில் தொடர்ந்து திருமறைப் பாராயணம், மஞ்சள்மா அபிஷேகம், நாதஸ்வரம், தவில் சமர்ப்பணம், பால் அபிஷேகம், நாட்டியாஞ்சலி, பன்னீர் அபிஷேகம், பஜனை மந்திர பாராயணம் , தியானம் என் பன இடம்பெற்றன. பின்னர் சுவாமி மற்றும் ஆராதிக்கப் பட்ட லிங்கங்கள் உள்வீதி வலம் வரும் நிகழ்வும் இடம் பெற்றது. இதில் நூற்றுக்கணக்கான அந்தணர்கள் கலந்து கொண்டதுடன் பூசை வழிபாடுகளிலும் ஈடுபட்டனர். இந்த நிகழ்வுகளில் பிரதேச சபைகளின் தலைவர்களான வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் தி. பிரகாஷ், வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாக ரஞ்சினி ஐங்கரன், வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ. சுகிர்தன் மற் றும் வடமாகாண சபையின் உறுப்பினர்களான எஸ்.சுகிர் தன், பா.கஜதீபன் பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் உட்பட மற்றும் இந்து சமய அமைப்புக்களின் பிரதி நிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-86)



*சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசைகள்...*

## ஆதனவரி செயற்பாடுகள் கணினி மயம்

வலி.வடக்கு, டிசெ,6

வலி.தெற்கு பிரதேச சபையின் ஆதனவரிச் செயற்பாடுகள் யாவும் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

வலி.தெற்கு பிரதேச சபையின் உப அலுவலகங்களான ஏழாலை, சுன்னாகம், மருதனார்மடம் ஆகிய மூன்று உப அலுவலகங்களினதும் ஆதனவரிப் பணிகள் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளதன் மூலம் காணிகளின் உரிமையாளர்களுக்கு பணிகள் இலகுவாக்கப்பட்டுள்ளதாகவும் எதிர் காலத்தில் ஆதனவரி செலுத்துவோர் தமது காணிகளுக்கான வரிகளை வலி.தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட எந்தவொரு உபஅலுவலகத்திலும் செலுத்தக்கூடிய வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-86)

## பாதீனியக் களைகளைக் கட்டுப்படுத்தி முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்குக

*மாவட்டச் செயலர்களுக்கு அறிவுறுத்தல்*

யாழ்ப்பாணம், டிசெ.5

பாதீனியக் களைகளைக் கட்டுப்படுத்துவதற்கான அறிவித்தலை கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத் தர்கள், பிரதேச கிராம மட்டத் தில் இயங்கும் அமைப்புகள் ஊடாக வழங்கி அது தொடர்பான முன்னேற்ற அறிக்கையை மாதந்தோறும் 5 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பி வைக்குமாறு மாவட்டச் செயலர்களுக்கு கால்நடை அபிவிருத்தி கமநல சேவைகள் நீர்ப்பாசனம் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் யூ.எல். எம்.ஹால்தீன் அறிவித் துள்ளார்.



பாதீனியக் களைகளைக் கட்டுப்படுத்துவதற்காக தத்தம் பகுதி பிரதேச செயலர்களுடன் தொடர்ச்சியான செயற்பாட்டை முன்னெடுத்து தங்கள் மாவட் டத்தில் பாதீனியம் அற்ற நிலையைப் பேணும் வகை யில் பாதீனிய ஒழிப்பு மாத மான இந்த மாதத்தில் அவற்றை அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மாகாண அமைச்சின் செய லாளர் கேட்டுள்ளார். (வ-7)

## நேபாள பயிற்சிப் பட்டறையில் யாழ். மாவட்ட சிறுமி பங்கேற்பு

யாழ்ப்பாணம், டிசெ. 06

'சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும் அதற்கான படிநிலைகளிலும் சிறுவர்களதும் இளைஞர்களதும் பங்களிப்பு' என்ற தொனிப்பொருளில் நேபாளத்தில் நடைபெறவுள்ள பயிற்சிப் பட்டறைக்கு இலங்கையில் இருந்து இரு சிறுவர்கள் பங்கேற்க தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். சிறுவர் உரிமைகள் பரிந்துரைத்தல் வலையமைப்பின் ஊடாக மகேந்திரராசா தயானி (யாழ்ப்பாணம்), பயகல கோடே (காலி) ஆகிய இரு சிறுவர்களுமே பயிற்சிப் பட்டறைக்கு தெரிவானவர்கள் இவர்கள் வலயமைப்பின் உத்தியோகத்தர்களான ந.ரஞ்சிதமலர், நிராசா பெரஹறா ஆகியோருடன் நாளை நேபாளத்துக்கு பயணமாக உள்ளனர்.

இந்தப் பயிற்சிப் பட்டறைப் பயணத்துக்கான அனுசரணையை சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் வழகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ங)


# இந்தியாவை ஒருபோதும் வெற்றி கொள்ள முடியாது

## பாக். பிரதமருக்கு மன்மோகன் சிங் பதிலடி

புதுடில்லி, டிசெ.6
இந்தியாவைப் போரிட்டு வெற்றி கொள்வது என்பது பாகிஸ்தானால் முடியாது. என் வாழ்நாளில் இந்தியாவுடனான எந்தப் போரிலும் பாகிஸ்தான் வெற்றி கொள்வதற்கான வாய்ப்பு இல்லை என்று தெரிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வுவொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது, "காஷ்மீர் பிரச்சினையால் இந்தியாவுடன் போர் மூளும் அபாயம் காணப்படுகின்றது. எனது வாழ்நாள்களுக்குள் சுதந்திரக் காஷ்மீரைக் காண விரும்புகின்றேன்" என்று தெரிவித்திருந்தார்.

அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இவ்வாறு பதிலடி கொடுத்துள்ளார். "இந்தியா அனைத்து வல்லமையுடனும் இருக்கின்றது. எம்முடன் போரிட்டு வெற்றி கொள்வது என்பது பாகிஸ்தானால் முடியாது. எனது வாழ்நாளில் இந்தியாவை பாகிஸ்தான் போரிட்டு வெற்றி கொள்வதற்கான வாய்ப்பே இல்லை" என்று தெரிவித்துள்ளார் பிரதமர் மன்மோகன் சிங்.




அதேவேளை, இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் தரப்பில் இருந்து இந்திய இராணுவத்தின் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் அண்மைக்காலத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. இராணுவ ரீதியாக அதற்குப் பதிலடி கொடுக்குமாறு வலியுறுத்தி வரும் பிரதான எதிர்க்கட்சிகள், இந்திய மத்திய அரசு இந்த விடயத்தில் பின்னடிக்கின்றது என்று குற்றஞ்சாட்டி வருகின்றன. (ற)

# தமிழக மின் வெட்டுக்கு காரணம் மத்திய அரசல்ல

## ஜி.கே.வாசன் தெரிவிப்பு

சென்னை, டிசெ.6
தமிழக மின் தட்டுப்பாட்டுக்கு இந்திய மத்திய அரசே காரணம் என்ற தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் குற்றச்சாட்டை இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் மறுத்துள்ளார்.



மத்திய அரசுக்குச் சொந்தமான பொது நிறுவனங்களில் தொடர்ந்து மின் உற்பத்தி குறைந்திருப்பது தமிழகத்தை இருளில் மூழ்கடிக்கத் திட்டமிட்ட சதியோ என்று மக்கள் சந்தேகம் கொள்ள நேரிடும் என்று அண்மையில் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எழுதிய கடிதத்தில் முதல்வர் ஜெயலலிதா கூறியிருந்தார்.

இந்த நிலையில், முதல்வர் ஜெயலலிதாவின் குற்றச்சாட்டை மறுத்துள்ள மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன், தமிழகத்துக்கு மின்சாரம் வழங்குவதில் மத்திய அரசு பாரபட்சம் காட்டவில்லை என்று தெரிவித்துள்ளார். (ற)

# வாய்க்காலில் வந்த பணம்: அள்ளிச் சென்றனர் மக்கள்

## சென்னையில் பரபரப்பு

சென்னை, டிசெ.6
சென்னைக்கு அண்மித்த பகுதி ஒன்றில் உள்ள கழிவு நீர் வாய்க்காலில் கட்டுக் கட்டாகப் பணம் மிதந்து வந்தது. அதைக் கண்ட மக்கள் போட்டி போட்டு அள்ளிச் சென்றனர்.

நேற்றுமுன்தினம் காலை அந்த கழிவு நீர் வாய்க்காலில் கட்டுக்கட்டாகப் பணம் மிதந்து வருவதை அந்தப் பகுதி மக்கள் அவதானித்தனர். அதைக் கண்ட மக்கள் போட்டி போட்டுக் கொண்டு பணத்தை அள்ளத் தொடங்கினர்.

தகவல் அறிந்த பொலிஸார் அந்தப் பகுதிக்கு விரைந்தனர். பொலிஸாரைக் கண்ட மக்கள் கிடைத்தவரை லாபம் என்று கையில் அகப்பட்ட பணத்துடன் அங்கிருந்து தப்பியோடி விட்டனர்.

அதன்பின்னர் துப்புரவுப் பணியாளர்கள் உதவியுடன் அந்தக் கால்வாயைச் சல்லடை போட்டுச் சலித்த பொலிஸாருக்கு 5 ஆயிரம் ரூபா மட்டுமே கிட்டியது.

கழிவு வாய்க்காலில் எப்படி அந்தப் பணம் வந்தது என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள பொலிஸார், பொது மக்கள் கொண்டு சென்ற பணத்தின் அளவையும் கணக்கிட முடியவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். (ற)

# மூன்று மாநிலங்கள் பா.ஜ.க. வசமாகும்

## தேர்தலுக்குப் பின்னரான கருத்துக் கணிப்பில் தகவல்

புதுடில்லி, டிசெ.6
புதுடில்லி, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், மீசோரம் ஆகிய 5 மாநில சட்டமன்றத் தேர்தல் நடந்து முடிந்து விட்ட நிலையில், தேர்தலுக்குப் பிந்திய கருத்துக் கணிப்புகள் வெளியாகியுள்ளன.

5 தனியார் நிறுவனங்கள் நடத்திய தேர்தலுக்குப் பின்னரான கருத்துக் கணிப்பில், 3 மாநிலங்களில் பா.ஜ.க. பெரும்பான்மையாக வெற்றி பெறும் என்றும் புதுடில்லி சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. அதிக இடங்களை கைப்பற்றும் என்றும் தெரியவந்துள்ளது.

மத்தியப் பிரதேசத்தில் தேர்தல் நடைபெற்ற 230 தொகுதிகளில் 114 இடங்களை பா.ஜ.க. கைப்பற்றும் எனவும் காங்கிரஸ் 77 இடங்களைப் பெறும் எனவும் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை கருத்துக் கணிப்புகள் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திக் விஜய் சிங், கருத்துக் கணிப்பு முடிவுகளைத் தூக்கிக் குப்பையில் வீசவேண்டும் என்று காட்டமாகக் கருத்து வெளியிட்டுள்ளார். (ற)





5 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இனுவில் கிழக்கு, அங்களப்பாயைச் சேர்ந்த
சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள்
வடிவாம்பிகை தம்பதியரின் ஏக புத்திரி
செல்வி சிந்ருஜா (சிந்து)
தனது ஐந்தாவது பிறந்ததினத்தை இன்று
(06.12.2013) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில்
வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை
அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, பெரியப்பாமார்,
பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார்,
அண்ணாமார், அண்ணிமார், அக்காமார், தம்பிமார், தங்கைமார்,
மச்சான்மார், மச்சாள் மார், லண்டனில் இருக்கும் தரன்
அண்ணா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் பல்கலையும்
பெற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ
அன்னை இனுவை சிவகாமி அம்மனைப்
பிரார்த்தித்து நிற்கின்றனர்.
"ஸ்ரீவித்யா", இனுவில் கிழக்கு, இனுவில், சுன்னாகம்.
(40850)(2.6.3)

## மோடிக்கு விசா வழங்குமா அமெரிக்கா?

குஜராத்தில் கடந்த 2002ஆம் மூண்ட இனக்கலவரங்களை மோடி தடுக்கத்தவறி விட்டார் என்று தெரிவித்து அமெரிக்கா அவருக்கு விசா அளிக்க மறுத்து வருகிறது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க வெளியுறவுத் துறை துணை அமைச்சர் நிஷா தேசாய் பிஸ்வால், "விசாவுக்கு யார் விண்ணப்பித்தாலும், அவர்களது விண்ணப்பங்கள் ஒவ்வொன்றின் மீதும் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்" என பதில் அளித்துள்ளார். (ற)



ஆந்திர மாநிலத்தைப் பிரித்து தெலுங்கான மாநிலத்தை வேறாக்கும் இறுதிக் கட்ட முயற்சிகளை இந்திய மத்திய அரசு மேற்கொண்டு வருகின்றது. இந்தநிலையில் புதிதாக உருவாக்கப்படவுள்ள தெலுங்கானா மாநிலத்துக்குப் புதிதாக இரண்டு மாவட்டங்களை இணைப்பதற்கு மத்திய அரசு தீர்மானித்துள்ளது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள தெலுங்கான ராஷ்ட்ரிய சமிதி கட்சி 10 மாவட் டங்களில் கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தது. கடையடைப்புப் போராட்டத்தால் நேற்றுமுன்தினம் ஹைதராபாத் உட்பட 10 மாவட்டங்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக முடங்கியது. கடையடைப்புப் போராட்டத்தை அடுத்து அந்த மாநிலங்களில் இராணுவமும் பொலிஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.





அகவை 60 இல்
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
ஆசிரியர் ஏணியும் தோணியும் போன்றவர்...
வே.கனகசபாபதி (B.A.Hons, Dip.in.Edu)
ஆசிரியர், யாழ்.புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலயம்)
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடியவர்,
இன்று தன் விழுதுகளின் நிழலில்
இளைப்பாறும் நேரமிது...!
Congratulations
Best Wishes
30 வருடம் ஆசிரியராகப் பணியாற்றி
இன்று (06.12.2013) வெள்ளிக்கிழமை பணியிலிருந்து
ஓய்வுபெறும் எமதன்புத் தந்தை
இனிவரும் காலங்களிலும் வளமோடு மேன்மேலும்
சிறந்திருக்க (09.12.2013) அகவை 60இல்
அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம். மனைவி, பிள்ளைகள்.
74, தாயகம், ஆறுகால்மடம், மானிப்பாய்.
(40849)(7.6.3)

# பேரறிவாளனுடைய வாக்குமூலத்தை திருத்தியவர் மீது விசாரணை தேவை

## சென்னை தடா நீதிமன்றில் மனுத் தாக்கல்

சென்னை, டிசெ.6
முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றச்சாட்டப்பட்டுள்ள பேரறிவாளனின் வாக்குமூலத்தைத் தாம் திருத்தினார் என்று ஒப்புக்கொண்டுள்ள சி.பி.ஐ. முன்னாள் அதிகாரி தியாகராஜனிடம் விசாரணை நடத்த வேண்டும் என்று சென்னை தடா நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட பேரறிவாளனுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன், அவர் தற்போது வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் அவரிடம் வாக்குமூலம் பெற்ற சி.பி.ஐ. முன்னாள் அதிகாரி தியாகராஜன், வாக்குமூலத்தில் திருத்தங்களை மேற்கொண்டேன் என்று பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.


அதையடுத்து தியாகராஜனிடம் அதுகுறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று தெரிவித்து சென்னை தடா நீதிமன்றத்தில் மனுத் தாக் கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவில், "பேரறிவாளனின் வாக்குமூலத்தில் குண்டுவெடிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட பற்றரியை ஏன் வாங்கி வரச் சொன்னார்கள் என்று தனக்கு தெரியாது என்று அவர் தெரிவித்திருந்தார். ஆனால் தனக்கு தெரியாது என்று பேரறிவாளன் கூறியதை தியாகராஜன் வாக்குமூலத்தில் சேர்க்காமல் திருத்தம் செய்துள்ளார். அதனை அவரே தெரிவித்துள்ளார். அவரிடம் அதுகுறித்து விசாரணை நடத்த வேண்டும். தடா நீதிமன்ற நீதிபதி தியாகராஜனிடம் இரகசியமாக வாக்குமூலம் பெற வேண்டும்" என்று கோரப்பட்டுள்ளது.

மனு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் நடைபெற்றது. குறித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதா என்பது குறித்து எதிர்வரும் 17 ஆம் திகதி முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்து வழக்கை நீதிபதி ஒத்தி வைத்தார். (ற)

## ஐ - போன் இல்லையே கவலைப்படுகிறார் பராக் ஒபாமா

வொஷிங்டன், டிசெ.6
"என்னால் ஒரு ஐபோன் கூட வைத்துக்கொள்ள முடியவில்லையே" என்று கவலைப்படுகின்றார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.
ஒபாமா எப்போதுமே கருப்பு நிறத்திலான, பெரியளவு பிளாக் பெர்ரி கைப்பேசியையே பயன்படுத்திவருகிறார்.
ஒபாமா அதுகுறித்துக் கூறும்போது, "பாதுகாப்பு காரணங்களுக்காக நான் ஐ-போன் வைத்துக் கொள்ள அனுமதி இல்லை. எனவேதான் பாதுகாப்பு மிகுந்த பிளாக்பெர்ரியைப் பயன்படுத்துகிறேன். எனது மகள்மார் சாஷாவும், மலியாவும் தமது ஐபோன்களுடன் தான் நாளில் பாதியைச் செலவிடுகிறார்கள். எதையாவது அதில் நோண்டிக் கொண்டே பாதி நேரத்தை அதிலேயே கழிக்கிறார்கள். நான் வேடிக்கை பார்க்க மட்டுமே முடிகிறது" என்று தெரிவித்துள்ளார்.
ஏனைய கைத்தொலைபேசிகளை விட பிளாக்பெர்ரிதான் பாதுகாப்பானது. பிளாக் பெர்ரியின் உள்ளே புகுவது கொஞ்சம் கஷ்டமானது என்பதால் வெள்ளை மாளிகை பாதுகாப்பு அதிகாரிகள், பிளாக் பெர்ரியை அதிகாரப்பூர்வ தொலைபேசியாகப் பயன்படுத்துகின்றனர். (ற)



கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு பிரான்ஸில் அமைக்கப்பட்டிருக்கும் மின்குமிழ் அலங்காரத்தைப் பெருந்தொகையான மக்கள் பார்த்து மகிழ்ந்தனர்.

## வீடுகளின் மீது விழுந்த சீன விண்கல பாகங்கள்

பீஜிங், டிசெ.6
சில நாள்களுக்கு முன்னர் சந்திரனை ஆராய்வதற்காக சீனாவால் அனுப்பப்பட்ட விண்கலத்தின் கழிவுப் பாகங்கள் வீடுகளின் மீது விழுந்ததால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன என்று கூறப்படுகின்றது.
சீனா முதன்முதலாக விண்ணுக்குச் செலுத்திய ஆளில்லாத விண்கலம் சில நாள்களுக்கு முன்னர் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது.
எனினும் அதன் கழிவுப் பாகங்கள் திட்டமிட்ட பகுதிகளில் விழாது மக்கள் குடியிருப்புகள் உள்ள பகுதிகளில் வீழ்ந்துள்ளன. அதனால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. சேதமடைந்த வீடுகளுக்கான இழப்பீடு வழங்கப்படும் என்று சீன விண்வெளி ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. (ற)

# மன்னரின் பிறந்த நாளால் ஓய்ந்தன ஆர்ப்பாட்டங்கள்

## *அமைதியாகின தாய்லாந்து நகரங்கள்*

பாங்ஹொக், டிசெ.6
தாய்லாந்து மன்னரின் பிறந்த நாளை முன்னிட்டு அங்கு அரசுக்கு எதிராக நடை பெற்று வரும் தொடர் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. அதனால் பல நகரங்களில் அமைதி நிலவுகிறது.
பிரதமர் யிங்லக் ஷினவத்ரா தலைமையிலான அரசு பதவி விலக வேண்டும், உடனடியாகப் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த இரு வாரங்களாக எதிர்க்கட்சிகள் போராட்டங்களை நடத்தி வருகின்றன.
அதன் தொடர்ச்சியாக போராட்டக்காரர்கள் பிரதமர் அலுவலகத்தை நோக்கி நேற்றுமுன்தினம் பேரணியாகச் சென்றனர். வழக்கமாக ஆர்ப்பாட்டக்காரர்களை தடுத்து நிறுத்துவதுடன், கண்ணீர்ப் புகை குண்டுகளையும் தண்ணீரையும் பீய்ச்சி அடிக்கும் பொலிஸார், அங்கிருந்த தடுப்புகளை நீக்கியதுடன் போராட்டத்துக்கு அனுமதி வழங்கினர். அத்துடன் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கைகுலுக்கினர்.



தாய்லாந்து மன்னர் பூமிபால் அதுல்யதேஜின் 86ஆவது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படவுள்ளது. அதன் அடிப்படையில்தான் போராட்டக்காரர்களை பொலிஸார் தடுக்க முற்படவில்லை என்று கூறப்படுகிறது. மன்னருக்கு மரியாதை செலுத்தும் வகையில் போராட்டக்காரர்களும் ஆர்ப்பாட்டத்தை தற்காலிகமாக கைவிட்டுள்ளனர்.
மன்னரின் பிறந்த நாளை முன்னிட்டு போராட்டம் கைவிடப்படுவதாக தெரிவித்துள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள், அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களை பிரதமர் பதவியில் அமர்த்துவதற்கு வழிவகுக்கும் அரசியலமைப்பு சட்டத்தின் 7ஆவது பிரிவை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். (ற)

# பிழையான தகவல்களை வழங்குகின்றார் ஜோ பிடன்

*சீன அரச ஊடகம் விசனம்.*




பீஜிங், டிசெ.6
அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜோ பிடன் சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில் அந்நாட்டு அரச ஊடகம் அவர் மீது கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.
சீனாவால் அறிவிக்கப்பட்டிருக்கும் வான் பாதுகாப்பு மண்டலம் தொடர்பாக ஜோ பிடன் பிழையான தகவல்களை வெளியிட்டு வருகின்றார் என்று அந்த ஊடகம் விசனம் வெளியிட்டுள்ளது.
சீனா சென்றுள்ள ஜோ பிடன் சர்ச்சைக்குரிய வான் பாதுகாப்பு மண்டலம் தொடர்பாக சீன ஜனாதிபதி ஜீ-ஜின்பிங் மற்றும் பிரதமர் லீ-கெஜ்ஜியாங் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (ற)

## முஷாரப்பின் தலைக்கு 200 கோடி ரூபா

இஸ்லாமாபாத், டிசெ.6
முஷாரப் தலைக்கு ரூபா 200 கோடி பரிசு தரப்படும் என்று அறிவித்துள்ளார் அந்நாட்டுப் பழங்குடியினர் தலைவரின் மகன் ஒருவர்.
பாகிஸ்தானில் முஷாரப் ஜனாதிபதியாக இருந்தபோது 2006 ஆம் ஆண்டு பலுசிஸ்தான் பிராந்தியத்தின் பழங்குடி தலைவரான அக்பர்கான் புக்தி இராணுவத் தாக்குதலில் உயிரிழந்தார். அவரை ஜனாதிபதி முஷாரப் தான் திட்டமிட்டுக் கொன்றார் என்று கூறப்படுகின்றது.
இந்தநிலையில் அக்பர்கான் புக்தியின் 4ஆவது மகன் தலால் அக்பர்புக்தி முஷாரப்பை கொன்று அவரது தலையை கொண்டு வருபவர்களுக்கு ரூபா 200 கோடி பரிசும், 200 ஏக்கர் விவசாய நிலமும் தரப்படும் என்று அறிவித்துள்ளார். (ற)

**Post of Chief Pharmacist**

Vacancy for full time Chief Pharmacist exists for immediate employment in a modern multis peciality hospital. Applications are invited from qualified and experienced pharmacist with SLMC registration
Those interested are requested to send their application so as to reach the undersigned on or before 13 th December 2013
Director Human Resources
Northen Central Hospitals (pvt) ltd
342, Palaly Road, Jaffna (சி/14275)(3.6.4)



முதலாவது வர்த்தகச் செய்மதியை அமெரிக்க விண் வெளி ஆய்வுத் தொழில்நுட்பக் கூட்டுத்தாபனம் வெற்றிக ரமாக விண்ணுக்குச் செலுத்தியுள்ளது. உலகத் தொலைக் காட்சி மற்றும் தொலைத்தொடர்பு செய்மதிகளுக்கான சந்தைவாய்ப்புக்களில் பெரும் மாற்றங்களை ஏற்படுத் தும் முயற்சியாக, இந்தியா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளை தளமாக கொண்ட அதிகரித்துவரும் வாடிக்கையாளர்களை இலக்காக கொண்டே இந்த செய்மதி விண்ணுக்குச் செலுத்தப்பட்டது என்று அமெரிக்க விண்வெளி ஆய்வுத் தொழில்நுட்பக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் புளோரிடாவிலுள்ள ஏவுதளத்தில் இருந்து இந்த செய்மதி விண்ணுக்குச் செலுத்தப்பட்டது.(ற)

LOLC
மாபெரும் வாகனச்சந்தை கிளிநொச்சியில்
LANKA ORIX FINANCE
LOLC மைக்ரோ கிறெடிட்
உங்களுக்கு உகந்த வகையில் உபயோகிக்கப்பட்ட அநேகவிதமான மோட்டார்சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், உழவு இயந்திரங்கள் டிமோபட்டா உள்ளடங்கலாக 50 வாகனங்கள்,அவ்விடத்திலேயே கொள்வனவு செய்யக்கூடியதொரு அரிய சந்தர்ப்பம்.
2013 டிசெம்பர் மாதம் 09ம் திகதியிலிருந்து
2013 டிசெம்பர் மாதம் 20ம் திகதி வரை.
A-9 ,கண்டி வீதி,கரடிப்போக்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள வாகன தரிப்பிடத்தில்
(C/14128)
தொடர்புகளுக்கு
மயூரன் - 0776 50 68 39
சந்திமா - 0665 11 80 80

தினசரி
கொழும்பு — சென்னை — கொழும்பு
மிகக் குறைந்த விலையில் விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ள......
AIR - INDIA express




✔ Baggage allowance 37 kgs.
✔ Complementary Meals provided
✔ Groups fares offer only over 10 passengers.
Contact for further information:
World of Hayleys
47, Stanley road, Jaffna.
Ph: 021 2221878, 0777730818
or nearest Travel agents
108, YMBA Building, Sir Baron Jayathilake Mawatha, Colombo 01.
011 2168083/ 011 2168082/ 011 2168081
www.airindiaexpress.in

## பறந்தன கூரைகள்

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் மூன்று மாடிக் கட்டடக் கூரையின் கூரைத் தகடுகள் நேற்று வீசிய கடும் காற்றால் தூக்கி வீசப்பட்டன. இந்தச் சம்பவத்தில் மாணவர்களின் 3 சைக்கிள்கள் சேதமடைந்தன.

பாடசாலை முடிவடைந்து வீடு செல்ல ஆயத்தமான நேரம் கடும் காற்றுடன் மழை பெய்ததால் மாணவர்கள் கட்டடங்களினுள் ஒதுங்கி நின்ற போதே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (எ-402)

## பராமரிப்பின்றி விளையாட்டு மைதானம்



அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானம் நீண்ட காலமாக பராமரிப்பின்றிக் காணப்படுகிறது.

விளையாட்டு மைதானத்தில் மாடுகள் உட்புகுந்து மைதானத்தைச் சேதப்படுத்துவதுடன், விளையாட்டு வீரர்கள் விளையாடுவதற்கும் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

விளையாட்டு மைதானத்தில் பல தடவைகள் மரக்கன்றுகள் நடப் பட்டாலும் மாடுகளின் நடமாட்டத்தால் அந்த மரக்கன்றுகள் அழிந்துள்ளன.

இந்த அழிவிலிருந்து தப்பிய மரக்கன்றுகளைக் கூட தற்போதும் மாடுகள் அழித்து வருகின்றன. இதனைப் பராமரிப்பதற்குக் கூட ஒருவர் இல்லாத நிலையே இன்று காணப்படுகின்றது.

மாடுகளின் நடமாட்டத்தால் மைதானத்தின் சமச் சீர் பாதிக்கப்படுவதால் விளையாட்டு வீரர் கள் பயிற்சி பெறுவதற்கு சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

இந்த விடயம் குறித்து அட்டாளைச்சேனை பிரதேசசபைக்கு பல தடவைகள் அறிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை என்று விளையாட்டு வீரர்கள் கூறுகின்றனர். (ச)

## 10 ஆயிரம் பனம் விதைகள் நடும் திட்டம்

வவுனியா, டிசெ.6

வவுனியா மாவட்ட பனை அபிவிருத்திச் சபையால் இந்த வருடம் 10 ஆயிரம் பனம் விதைகள் நடும் திட்டம் பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சபையால் வருடந்தோறும் பனம் விதை நடும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த வருடம் பாடசாலைகள், பொது இடங்களில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப் படுகின்றது. (எ-421)

# ஜோன் அமரதுங்கவின் கூற்று கண்டிக்கத்தக்கது

### இனவாதம் கக்குவோர் பட்டியலில் ஐ.தே.கவும்; தமிழர்கள் கவலை, விசனம் என்கிறார் மனோ

கொழும்பு.டிசெ.6

இலங்கை அரசு விரும்பினாலும் கூட, இந்திய மத்திய அரசு இலங்கையில் ஒரு தமிழ்த் தனிநாடு உருவாவதை ஆதரிக்காது என்பது குழந்தைக்கு கூடத் தெரியும். எனவே மன்மோகன் சிங் வடக்குக்கு செல் வது தனி நாடு அமைக்கவா என்ற ஜோன் அமரதுங்கவின் கூற்று, விடயம் தெரியாத சிங்கள மக்களை தூண்டிவிடும் அப்பட்டமான இனவாதக் கூற்று என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தைப் பிரித்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனின் அழைப்பை ஏற்று வடக்குக்கு செல்வது தனிநாடு அமைக்கவா என்று கேள்வி எழுப்பி, இந்தியப் பிரதமரின் உத்தேச வடக்குப் பயணத்தை தாம் எதிர்ப்பதாக, நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இதன்மூலம் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனிடம் குறைகண்டு இனவாதம் பேசும் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச, குணதாச அமரசேகர ஆகியோரின் பட்டியலில் ஐ.தே.கவின் பிரதான அமைப்பாளர் ஜோன் அமரதுங்கவும் இணைந்து கொண்டுள்ளார்.

அவரது கருத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஐ.தே.கவின் இந்தக் கருத்து தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளையும், தமிழ் சிவில் சமூகத்தையும் விசனப்படுத்தியுள்ளது.

ஐ.தே.க சிங்கள வாக்குகளைப் பெறவேண்டும் என்பது உண்மை. அதைத்தான் நானும் நீண்ட காலமாகச் சொல்லி வருகிறேன். ஆனால் அதற்கு வழிஇதுவல்ல. மஹிந்தவைப் பின்பற்றுவதன் மூலமாக சிங்கள வாக்குகளை ஐ.தே.க பெறமுடியாது.

ஆகவே இப்படியே போனால் சிங்கள வாக்கும் இல்லை. சிறுபான்மை வாக்கும் இல்லை என்ற நிர்க்கதி நிலைக்குத்தான் ஐ.தே.க. தள்ளப்படும்.

விக்னேஸ்வரன் இந்தியப் பிரதமருக்கு விடுத்த சம்பிரதாய அழைப்பில். இலங்கை வரும் போது யாழ்ப்பாணத்துக்கு வாருங்கள் என்று சொல்லியிருந்தார். டெல்லியிலிருந்து நேரடியாக பலாலி விமான நிலையத்தில் வந்து இறங்குங்கள் என்று அழைக்க வில்லையே.




இந்த விசேட அழைப்புக்கு காரணம், வடக்கு இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையே மாகாணம் என்பதும், வடக்குத் தேர்தல் நடைபெற இந்தியாவின் அழுத்தம் முதலிடம் வகித்தது என்பதும் தான்.

இதேவேளை இன்று வடக்கில் ஒருகையால் கொடுத்ததை மறுகையால் இந்த இனவாத அரசு பறிக்கின்றது. பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்த வேண்டும் என்பதற்காக உலக அழுத்தத்தை உள்வாங்கி அரசு வடக்கில் தேர்தல் நடத்தி மாகாண சபையை உருவாக்கியது.

இன்று அந்த மக்கள் ஆணையைப் பெற்ற மாகாண சபையை முடக்கும் வகையில் அட்டகாசம் செய்கின்றனர்.

ஆகவே இந்த மாதிரியான இராணுவ ஆட்சியின் அலங்கோலங்களை விக்னேஸ்வரன் சர்வ தேசத்தை அழைத்துச் சொல்லத்தானே வேண்டும்- என்றார். (ஒ-5)




# துயர் பகிர்கின்றோம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர் மற்றும் வடமாகாணசபை உறுப்பினருமான

**கௌரவ அங்கஜனின் அன்பு மாமனார்**

## சிவசுப்ரமணியம் பாஸ்கரன்

(பிரபல வர்த்தகர்)

அவர்கள் காலமான செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைந்துள்ளோம். அத்துடன் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.


*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர், மாகாணசபை உறுப்பினரின் இளைஞர் அணி.**

(4087)(2.6.3)

## அப்துல்லா காலமானார்

வவுனியா, டிசெ.6
முன்னாள் வவுனியா மாவட்ட வர்த்தகர் சங்கத் தலைவரும், வவுனியா ஜும்மா பள்ளிவாசல் தலைவருமான பி.எஸ்.அப்துல்லா இந்தியாவில் காலமானார்.
பிரபல வர்த்தகரும், சுமார் 40 வருடங்களாக வவுனியா மாவட்ட வர்த்தகர் சங்கத் தலைவராகச் சேவையாற்றிய வருமான அப்துல்லா நேற்று முன்தினம் இந்தியாவில் காலமானார்.
இவர் நீண்ட காலமாக நோய் வாய்ப்பட்டிருந்தார். இவர் கடந்த வருடமே வர்த்தகர் சங்கத் தலைவர் பதவியிலிருந்து விலகியிருந்தார்.
இவரது மரணச் செய்தி கேட்டு வவுனியா நகரெங்கும் சோக மயமாகக் காட்சியளித்தது.
வவுனியா வர்த்தகர் சங்கத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அனைத்து வர்த்தக நிலையங்களும் நேற்று முன்தினம் மூடப்பட்டு வெள்ளைக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (க-421)



இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் முல்லைத்தீவுக்கிளை இரத்த வங்கியின் அனுசரணையுடன் ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் கடந்த திங்கட்கிழமை நடத்திய குருதிக்கொடை நிகழ்வில் 64 ஆம் படைப் பிரிவைச் சேர்ந்த படையினர் மற்றும் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினர். (எ-435)

## அதிபருக்கு பாராட்டு விழா

வவுனியா கோமரசன்குளம் மகா வித்தியாலயத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற பாடசாலை அதிபருக்கு பாராட்டு விழா இடம்பெற்றுள்ளது.
பல ஆண்டுகளாக கோமரசன் குளம் மகா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தின் அதிபராகப் பொறுப்பேற்றுள்ள, க.தனபாலசிங்கத்துக்கு கோமரசன்குளம் மகா வித்தியாலயத்தில் பாராட்டு விழா ஒன்று இடம்பெற்றது.
பாடசாலையின்புதிய அதிபர் பூலோகசிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு கடந்த 2 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.
இதில் கலந்துகொண்ட விருந்தினர்கள் பாடசாலையின் பிரதான நுழைவாயிலில் இருந்து பிரதான மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். இதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. அதிபரின் தலைமையுரையைத் தொடர்ந்து வரவேற்புரை இடம்பெற்றது. இதனைத்தொடர்ந்துஇடம்மாறிச்சென்ற அதிபர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். (க-421)

## கிளிநொச்சியில் நடைபெற்ற மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வு

தென்மராட்சி, டிசெ.6
கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சம்மேளனமும் கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தினநிகழ்வுகள் நேற்று முன் தினம் இடம்பெற்றன.
மாவட்ட குடும்ப புனர்வாழ்வு நிலையம் மற்றும் கன்டிகாப் இன்ரநஷனல் நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு இடம் பெற்றது.
மாவட்ட உதவிச் செயலாளர் திருமதி ப.ஜெயராணி மு.ப. 10 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நிகழ்வை ஆரம்பித்து வைக்க நிகழ்வில் கலந்து கொண்ட மாற்று வலுவுள்ளோர் ஐந்து குழுக்களாகப் பிரிந்து மாவட்டத்தில் உள்ள அரச தனியார் நிறுவனங்களில் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டனர்.
அத்துடன் அனைத்து நிறுவனத் தலைவர்களிடமும் தமது தேவைகள் தொடர்பான கோரிக்கை மனுக்களைக் கையளித்தனர்.
சம்மேளனத் தலைவர் தி. சிவமாறன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நூற்றுக்கு மேற்பட்ட மாற்று வலுவுள்ளோர் கலந்து கொண்ட தமது உரிமைகள்தொடர்பான சுலோக அட்டைகளைத் தாங்கி ஊர்வலமாக வீதிகளில் சென்றனர். (வ-9)



# கழிவுகள் அகற்றும் பணிகள் மந்தகதியில்

## மன்னார் பொலிஸார் நடவடிக்கை

மன்னார், டிசெ.6
மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கழிவுகள் அகற்றும் வேலைத் திட்டங்கள் மந்தகதியில் இடம்பெற்று வருவதால் அந்தப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள், வீட்டு உரிமையாளர்கள் மீது மன்னார் பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
மன்னாரில் டெங்கு வாரம் கடைப்பிடிக்கப்பட்டு டெங்குப் பரிசோதனைகளும் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் பல இடங்களில் உள்ள கழிவுகளை அகற்றுவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தின் காரணமாக இதனுடன் தொடர்புடைய [illegible] எதிராக பொலிஸார் [illegible] வடிக்கை எடுத்துள்ளனர்.

"_"

**கழிவுகள் அகற்றுவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தின் காரணமாக பலருக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.**

இதேவேளை மன்னார் நகர சபைக்குட்பட்ட பல வீதிகள் கொங்கிறீட் வீதிகளாக அமைக்கப்பட்டுள்ளமையால் வீட்டு வளவுகளில் தேங்கி நிற்கும் மழை நீரை வெளியேற்ற முடியாத நிலையில்தாம் உள்ளதாக வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.
இதேவேளை, டெங்கு நுளம்பு அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தவர்கள் என்ற குற்றச்சாட்டில் பலருக்கு எதிராக பொலிஸார் மன்னார் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
இந்த விடயம் சம்பந்தமாக மன்னார் நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது மன்னாரில் டெங்கு வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் தினமும் ஒவ்வொரு கிராமத்துக்குச் சென்று கழிவுகளை அகற்றி வருகிறோம். மழை காலம் ஆகையால் தொடர்ச்சியாக இந்தப் பணியை மேற்கொள்ள முடியாமல் உள்ளது. நகர்ப் பகுதியில் கழிவுகளை அகற்றிவிட்டோம். கிராமப் பகுதிகளில் தற்போது கழிவு களை அகற்றி வருகிறோம் என்றார். (எ-12)


## மோசமான நிலையில் சங்குப்பிட்டி - பூநகரி வீதி



சங்குப்பிட்டி- பூநகரி பிரதான வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் இதனூடான போக்குவரத்துக்கு இடர்கள் தோன்றியுள்ளன.
சங்குப்பிட்டிப் பாலத்திலிருந்து பூநக ரிக்குச் செல்லும் வழியில் சுமார் இரண்டு கிலோமீற்றர் நீளம் கொண்ட இந்த வீதி போக் குவரத்து மேற் கொள்ள முடியாத அளவுக்கு மோசமான நிலையில் காணப்படுகின்றது.
இரு மருங்கிலும் கடல் சூழ்ந்துள்ள இந்த வீதி கடல் நீரினால் அள்ளுண்டு வெறும் கற்கள் மட்டுமேவீதியில்காணப்படுகின்றன.
இதனால் கனரக வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் உரிய நேரத்தில் பயணிக்க முடியாத நிலையும் காணப்படுகின்றது.
இதனைத் துரிதமாகப் புனரமைக்கும் பட்சத்தில் மக்கள் சிரமமின்றித் தமது போக்குவரத்தை மேற்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப் படுகின்றது. (க-415)

# மரண அறிவித்தல்

## திருமதி சுந்தரம்மா செல்வரத்தினம்



காரைநகர், பெரிய மணலைப் பிறப்பிடமாகவும், வவுனியா, உக்குளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரம்மா செல்வரத்தினம் நேற்று(05.12.2013) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் கொக்குவில் மேற்கு காலஞ்சென்ற செல்லத்தம்பி செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும், தியாகராசாவின் (அமெரிக்கா) அன்புச் சகோதரியும், திருவருட்செல்வம், சிவஇன்பநாயகி, காரைசைவமணி சண்முகரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கிரிஜாவின் (ஆசிரியை - வ/கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயம்) அன்பு மாமியும், சிவலதா, வைஸ்ணவி, சாம்பவி, வாகீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2013) வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது உக்குளாங்குளம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வவுனியா, தட்சணாங்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருவருட்செல்வம் (மகன்).
0779213711
சைவமணி சண்முகரத்தினம் (மகன்).
0778170429

உக்குளாங்குளம்,
முனியப்பர் கோவிலடி,
வவுனியா.

(40563) (12)(3.6)

# கிழக்கில் கடும் மழை

## தாழ்ந்த பகுதிகள் வெள்ளத்தில்; நெற்செய்கை பாதிப்பு; பொருள்கள் விலை அதிகரிப்பு; மீனவர்கள் முடக்கம்

அம்பாறை,டிசெ.6
கிழக்கு மாகாணத்தில் கடந்த ஐந்து நாள்களுக்கு மேலாகப் பெய்து வரும் அடைமழையால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தொடர் மழையால் தாழ்ந்த பிரதேசங்கள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், உள்ளூர் வீதிகள் பலவற்றிலும் மழை நீர் தேங்கியுள்ளதால் மக்கள் வீதிகளூடாகப் பயணிப் பதில் சிரமங்களை அனுப வித்து வருகின்றனர்.





மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடி, காத்தான்குடி, புதிய காத்தான்குடி, ஏத்துக்கால், பாலமுனை, கிரான், கல்லாறு, பெரியகல்லாறு, துறை நீலாவணை, களுவாஞ்சிக்குடி ,பட்டிப்பளை,வவுணதீவு ஒள்ளிக்குளம், மண்முனை,சிகரம், புல்லுமலை, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, நாவலடி, வாகரை உட்பட பல பகுதிகளில் இடைவிடாது மழை பெய்து வருவதால் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடை மழையால் ஆறு, கடல், குளம் மற்றும் கிணறு,நீர்நிலைகள் அனைத்தினதும் நீர் மட்டங்களும் அதிகரித்துள்ளன.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாகவே இந்தப் பெரும் மழை பெய்து வருவதுடன், கடல் பெரும் கொந்தளிப்பான நிலையிலும் காணப்படுகின்றது.

**பொருள்கள் விலை அதிகரிப்பு**

கடற் கொந்தளிப்புக் காரணமாக கடற்றொழிலாளர்கள் தமது வீடுகளில் முடங்கிக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடல் மீனுக்குப் பெரும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. அடை மழையால் அன்றாட கூலித் தொழிலாளர்க ளும் தொழிலின் றிப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் உயர்வடைந்துள்ளன.

**நெற் செய்கை பாதிப்பு**

இலங்கையின் நெற் களஞ்சியம் என்று அழைக்கப்படும் அம்பாறை மாவட்டத்தில் அடை மழையால் நெற் செய்கை பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தின் முக்கிய விவசாயப் பிரிவுகளான நிந்தவூர், ஒலுவில், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறைப் பிரதேச விவசாயக் கண்டங்களின் பல இடங்களில் பெரும்போக நெற்பயிர்கள் மழை வெள்ளத்தில் அமிழ்ந்து காணப்படுகின்றன.

அதனால் வளர்ச்சியடையாத நெற்பயிர்கள் அழுகி நாசமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மழை தொடர்ந்து பெய்யும் காலநிலையே நீடித்து வருகின்றது. (ச-30)

## கூட்டமைப்பு வெளிநடப்பு

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் விவாதத்தை புறக்கணித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் மாலை கூட்டத்தை வெளியேறினர். கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவுக்கு மாறாக சபைத்தவிசாளர் ஆரியவதிகலப்பதி சபையை நடத்திச் செல்வதை கண்டித்து வெளி நடப்புச் செய்வதாகத் தெரிவித்தே கூட்டமைப்பு உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

மாலை ஆறுமணிக்கு சபை அமர்வை முடிப்பதாக கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதை 7 மணிக்கு முடிப்பதற்கு ஆளும் தரப்பினர் எடுத்த முடிவைக் கண்டித்தே நேற்றுமுன்தினம் 6 மணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 11 பிரதிநிதிகளும் வெளிநடப்புச் செய்தனர்.


எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இல்லாமல் ஆளும் தரப்பினருடனும், 3 ஐ.தே.க.உறுப்பினர்களுடனும் சபை நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்றது. கடந்த இரு நாள்களும் மாலை 7 மணி வரை சபை நடவடிக்கைகள் முடிக்கப்பட்டன.இந்த நிலையில் கூட்டத்தில் 6 மணிக்கு முடிக்க இணக்கம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

## வன்முறைக்கு எதிராக பேரணி

மட்டக்களப்பு.டிசெ.6
பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான 'நீதியை நோக் கிய பயணம்' எனும் தொனிப் பொருளில் ஊர்வலம் வாழைச் சேனை பிரதேசத்தில் இடம்பெற்றது.

இந்தப் பேரணியின் போது பெண்கள், வீட்டில், வேலை செய்யும் இடங்கள், வீதிகள், பஸ்ஸில், பாட சாலை செல்லும் போது ஆகிய இடங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பொது மக்களுக்கு துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (ச)

## நீரில் மூழ்கியவரின் சடலம் கரை ஒதுங்கியது



கல்முனை,டிசெ.6
கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் சாய்ந்தமருது தோணாவுக்குள் படகில் சென்ற இரு இளைஞர்கள் படகு கவிழ்ந்ததில் இருவரும் நீரில் மூழ்கினர்.

அவர்களில் ஒருவர் பொது மக்களால் காப்பாற்றப்பட்டார். மற்றைய நபர் மூன்று நாள்களின் பின்னர் நேற்று வியாழக்கிழமை சடலமாகக் கரை ஒதுங்கியுள்ளது. (ச)

# அரசியல் செயற்பாட்டில் சில கல்வி அதிகாரிகள்

## அதனால் கல்வித்துறைக்குப் பெரும் சவால் என்கிறது கூட்டமைப்பு

ஏறாவூர்.டிசெ.6
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சில கல்வி அதிகாரிகள் அரசியல் சார்ந்த நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத் திக்கொண்டு ஆளும் தரப்பு அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்தும் வகையில் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதால் மாவட்டத்தின் கல்வித்துறை பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

செங்கலடி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல்வாதிகள் சில காலத்தில் மக்களால் நிராகரிக்கப்படலாம்; அதிகாரிகளாக இருப்போர் மேலும் உயர் பதவிகளுக்கு செல்லக்கூடியவர்கள்.

அரசியலில் மாற்றம் வந்தாலும் அதிகாரிகள் எப்பவும் அதிகாரிகள்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. கௌரவத்தைக் காப்பாற்றும் வண்ணம் அதிகாரிகள் கடமைகளை செவ்வனே நிறைவேற்றவேண்டும். செங்கலடி மத்திய கல்லூரியைப் பொறுத்தமட்டில் இங்கு அரசியல் தலையீடுகள் இல்லை.

பாடசாலைக்குத் தேவையான வளங்களைப் பெறுவதற்காக மாத்திரமே அரசியல்வாதிகளை அழைக்க வேண்டும். அவர்களிடம் உரிமையுடன் தேவைகளைக் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அரசியல் சார்ந்த செயற்பாடுகளில் கல்வி அதிகாரிகள் ஈடுபட்டு அவர்களை திருப்திப்படுத்தும் வகை யில் செயற்படக் கூடாது.

கல்குடா கல்வி வலயத்திலே செங்கலடி மத்திய கல்லூரியின் கல்வி அபிவிருத்தியில் சில கண் துடைப்புக்கள் இடம்பெறுவதாக தகவல் கிடைத்துள்ளது. அந்தவகையில் இந்த விடயம் குறித்து வலயக் கல்வித் திணைக்களத்துடன் பேசவுள்ளேன் - என்றார். (ச)




**விற்பனைக்கு**

ஒரு வருடம் நிரம்பிய யேர்மன் செப்பேட் பெண் நாய் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 790 1889, 021 205 1569, 078 914 4729 (40846)(3.6.4)

**ONE DAY SERVICE**

ஆண், பெண்களுக்கான சகல விதமான ஆடைகளும் தைத்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 668 5074 (40847)(3.6.4)

**TV கள் மலிவு விலையில்**

மிக மிக மலிவு விலையில் SONY பனசோனிக் TV கள் 21"-14,000/=, 29" - 15,000/=, DVD - 3,000/= குளிர்சாதனப் பெட்டிகள், CD, ரேடியோ-கசெற், Box அம்பிளிபயர் என்பன.
தொடர்பு: 077 044 0570
பேபி ரேற் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, K.K.S. வீதி, சுன்னாகம். (40848)(7.6.5)

**தேவை**

றொசானி காமென்சுக்கு தையல் தெரிந்த பெண்கள் தேவை.
தொடர்பு: றொசானி காமென்ஸ், 263/1,இராஜகாரியார் லேன், மானிப்பாய்.
கிளை: சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம். (சி/14265)(3.6.4)

**வட இலங்கைச் சங்கீத சபை நடத்தும்**

**அமுத விழாவும் அமுத மலர் வெளியீடும் - 2013**

காலம் : விஜய வருடம் கார்த்திகை மாதம் 21ஆம் நாள் நாளை (07.12.2013) சனிக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி
இடம் : வட.இலங்கைச் சங்கீத சபையின் புதிய மண்டபம் மருதனார்மடம்.

தலைவர் : செ. உதயகுமார்
யாழ் வலயக் கல்விப் பணிப்பாளரும் வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்

பிரதம விருந்தினர்
கௌரவ கல்வி அமைச்சர் த.குருகுலராஜா
கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு வடமாகாணம்

சிறப்பு விருந்தினர் : செல்வி தில்கவதி பெரியதம்பி
முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு மாகாணம்

கௌரவ விருந்தினர்கள்:
முன்னாள் வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவர்கள்
கலாநிதி என்.துணிகாசலம்பிள்ளை
திருமதி செ.மகாலிங்கம் | ப.விக்னேஸ்வரன்
வே.தி.செல்வரட்ணம் | திருமதி அ.வேதநாயகம்
வை.செல்வராஜா | யோ.ரவீந்திரன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி.சிவராஜன் செயலாளர். | செ.உதயகுமார் தலைவர்.

(சி/14263) (7.6.3)

**அடகுப் பொருள்கள் ஏலவிற்பனைக்கான HNB அறிவித்தல்**

ஹற்றன் நஷனல் வங்கி
சாவகச்சேரி, கிளிநொச்சி தெற்கு, சங்கானை, கொடிகாமம்,

ஆகிய கிளைகளில் 15.10.2012இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 08.12.2013 தொடக்கம் 12.12.2013 (ஞாயிறு - வியாழன்) வரை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 07.00 மணி வரை இல. 212, 214, ஆஸ்பத்திரிவீதியில் அமைந்துள்ள எமது யாழ்.கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

ஹற்றன் நஷனல் வங்கி

## புத்தர்சிலையின் பாகங்களை திருடியோர் கைது

கொழும்பு,டிசெ.6

கல்கிரியாகம,வெஹேரகல புராதன விகாரையில் பெறுமதிமிக்க கற்களால் செதுக்கப்பட்ட புத்தர் சிலைகளுக்கு சேதமேற்படுத்தி அதன் பகுதிகளை திருடிச் சென்றமை தொடர்பில் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தபுல, ஹல்மில்லெவ, தேவகுவ, வெஹரகல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர்களிடமிருந்து திருடப்பட்ட பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளைக் கல்கிரியாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)




கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியில் 8 மாடி கட்டடத்துக்கான நிர்மாணப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க கட்டட வடிவமைப்பு மாதிரியைச் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கையளித்தார். அருகில் அமைச்சர்கள் பந்துல குணவர்த்தன, ஏ. எச். எம். பௌஸி உட்பட பலர் காணப்படுகின்றனர்.

## போலியான நாணயத்தாள் பயன்படுத்தியவர் சிக்கினார்

கொழும்பு.டிசெ.6

500 ரூபா போலி நாணயத்தாளைப் பயன்படுத்தி பொருள் கொள்வனவில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோகருல்ல - இப்பாகமுவ பகுதியிலுள்ள கடையொன்றில் அவர் பொருள் கொள்வனவில் ஈடுபட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைதாகியுள்ளார்.

இந்த நபர் தேஹேல்கமுவ பகுதியைச் சேர்ந்த 20 வயதான ஒருவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## பால்மா பைகளை பதுக்கினால் தண்டனை

கொழும்பு,டிசெ.6

விலை அதிகரிப்பை நோக்காகக் கொண்டு பால்மா வகைகளைப் பதுக்கிவைக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு பதுக்கி வைத்துள்ள பால்மா வகைகள் பறிமுதல் செய்யப் படும் என்று வர்த்தக, நுகர் வோர் விவகார அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் லங்கா மில்க் பூட் நிறுவனத்தில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் மூலம் 12 மெற்றிக் தொன் பால்மா வகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று அமைச்சர் தெரி வித்தார்.

சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். வர்த்தகர்கள் தன்னிச்சையாக விலை அதிகரிப்பை மேற்கொள்வதற்கும் பால்மா வகைகளைப் பதுக்கி வைத்துத் தட்டுப்பாடு போன்று காட்டுவதற்கும் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று அவர் கூறினார்.

பால்மாவகைகளின் விலையை அதிகரிக்குமாறு கடந்த ஆறு மாத காலமாக பால் மா இறக்குமதியாளர்கள் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையிடம் அனுமதி கோரி வருகின்றனர்.

உலக சந்தையில் பால்மா விலை அதிகரித்துள்ள நிலையிலும், தாம் உள்ளூர் சந்தையில் குறைந்த விலையிலேயே பால்மாவை விற்பனை செய்ததாக அவர்கள் காரணம் காட்டுகின்றனர் என்று அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். (ச)

# கல்வி மட்டத்தில் இலங்கை தெற்காசியாவில் முதலிடம்

### கூறுகிறார் கல்வி அமைச்சர்

கொழும்பு,டிசெ.6

இலங்கையின் கல்விநிலை தெற்காசியாவில் முதலிடத்திலும், சர்வதேச ரீதியில் உயர்மட்டத்திலும் இருக்கிறது என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கையின் கல்விநிலை தொடர்பில் பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி தொடர்பில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் விளக்கமளிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-



இலங்கையில் மொத்தமாக 56 லட்சம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களுள் 31 ஆயிரத்து 504 பேர் மட்டுமே பாடசாலைக்குச் செல்லாதுள்ளனர். பாடசாலை செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இது 0.55 சதவீதமாகும்.

இவர்களுள் ஆறாயிரத்து 147 பேர் வறுமையால் பாடசாலை செல்லாதுள்ளனர். இவர்களுள் ஆயிரத்து 841 பேர் மட்டுமே பொருளாதாரப் பிரச்சினையால் பாடசாலைக்குச் செல்லாதுள்ளனர். நாட்டில் ஆரம்பக் கல்விக்கு 98.3 சதவீதமான மாணவர்கள் பிரவேசிக்கின்றனர். இவர்களுள் 0.23 வீதமானோர் மட்டுமே விலகுகின் றனர். இரண்டாம் நிலைக் கல்வியை 99 சதவீதமானோர் தொடர் கின்றனர்.

இலங்கையில் 17 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் இருக்கின்றார். இது சர்வதேச மட்டத்தில் எமது ஆரம்பக் கல்வி நிலையில் உயர்மட்டத்தைக் காட்டுகிறது. ஆரம்பக் கல்வி மட்டமானது இந்தியாவில் 96 சதவீதமாக இருக்கின்ற அதே வேளை, இலங்கையிலும் அதே 96 சதவீதமே இருக்கிறது. அத்துடன், 5ஆம் தரக் கல்வியை எடுத்துக்கொண்டால் இந்தியாவில் 97 சதவீதமாகவும், ஆஸ்திரேலியாவில் 98.1 சதவீதமாகவும், ஜேர்மனி, ஜப்பான், கொரியா முதலான நாடுகளில் 100 வீதமாகவும் இருக்கின்ற அதேவேளை, இலங்கையில் 99.5 வீதமாக இருக்கின்றது- என்றார். (ச-சி)

# ஐக்கிய தேசிய கட்சி இரட்டைவேடம்

### கூட்டமைப்பு கண்டனம்

கொழும்பு.டிசெ.6

வடமாகாணசபை முதலமைச்சரின் அழைப்பை ஏற்று இந்தியப் பிரதமர் இலங்கை வருவதற்கு எதிர்ப்பை வெளியிடும் ஐக்கிய தேசியக் கட்சியின் இரட்டை வேடத்தைக் கண்டிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுமுன்தினம் சபையில் தெரிவித்தது.

வடக்கிலும், கிழக்கிலும், மலைநாட்டிலும் தமிழர்களின் பாரம்பரிய கலாசாரங்கள் அழிக்கப் படுகின்றன. பொதுபலசேனா அமைப்புக்குப் பாதுகாப்பு அமைச்சிலிருந்தே நிதி வழங்கப்படுகின்றது என்றும் அது சுட்டிக்காட்டியது.

அதேவேளை, வடக்கு, கிழக்கில் விதைப்பதற்கு வழங்கப் படும் பயிர் வகைகளில் கூட இந்த அரசு இன வாதத்தைப் பரப்புகின்றது. எனவே, இவ்வாறானதொரு சூழ்நிலையில் நல்லிணக்கம் எவ்வாறு சாத்தியப்படும் என்றும் கூட்டமைப்பு கேள்வி எழுப்பியது.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொருளாதார அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் இவ்வாறு தெரிவித்தார்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேசும்போது அதைக் குழப்புவதே அரசின் வரலாறாக இருக்கின்றது. இது இந்த உயரிய சபையின் கௌரவத்துக்கு நல்லதல்ல. நாடாளு மன்றில் பேசப்படும் உரைக்கு நகர சபையில் கண்டனம் நிறைவேற்றப்படுகின்றது. இன்று கிழக்கு மாகாண வரவு - செலவுத் திட்டத்தில்கூட இனப் பாகுபாடு காட்டப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச-சி)

# சாரதி இன்றி பயணித்த ரயில் இயந்திரம்

கொழும்பு.டிசெ.6

சாரதி இல்லாது ரயில் இயந்திரம் ஒன்று தெமட்டகொடவில் இருந்து கல்கிஸ்ஸை வரை பயணித்துள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த ரயில் இயந்திரம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 1.45 மணிக்கு கல் கிஸ்ஸை வரை சென்று கொண்டிருந்தபோது தடுத்து நிறுத்தப்பட்டது




அதனால் எவருக்கும் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்று மத்திய ரயில் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மத்திய ரயில் கட்டுப்பாட்டு நிலையம் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (ச)

# பண்டிகையை முன்னிட்டு விசேட ரயில் சேவை

கொழும்பு.டிசெ.6

எதிர்வரும் பாடசாலை விடுமுறை மற்றும் பண்டிகைகளை முன்னிட்டு விசேட ரயில்களை சேவையில் ஈடுபடுத்த ரயில் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நாளை சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விசேட ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று ரயில் போக்குவரத்து அதிகாரி எல்.ஏ.ஆர்.ரத்நாயக்க தெரிவித்தார்.

> " - "
> சனிக்கிழமை தொடக்கம் 2 ஆம் திகதி வறைர விசேட ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

கொழும்பில் இருந்து பதுளைக்கும், மருதானையில் இருந்து காலிக்கும் இரண்டு துரிதகதி ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# தமிழ்மொழி கற்பதை உடன் நிறுத்துங்கள்

### பொது பல சேனா போர்க்கொடி

கொழும்பு,டிசெ.6

இலங்கையில் சிங்கள அரச அதிகாரிகள் தமிழ் மொழியை கற் பதை கட்டாயமாக்க அரசு எடுத்துள்ள முடிவை நிறுத்துமாறு பொது பல சேனா கோரியுள்ளது.

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை அரசு மறக்கக் கூடாது என்று அந்த அமைப்பின் செயலர் கலபொட அத்தே ஞானசாரதேரர் கூறியுள்ளார்.



இலங்கையில் பெரும்பாலானவர்கள் சிங்கள மொழியைப் பயன்படுத்துவதால் அவர்களை தமிழ் மொழியை கற்றுக்கொள்ள வேண்டும் என்று அரசு கூற முடியாது என்று அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு தனது தீர்மானத்தை ரத்துச் செய்துவிட்டு, நாட்டில் அனைவரும் சிங்கள மொழியைக் கற்றுக் கொள்வதை கட்டாய மாக்க வேண்டும்.

இனங்களிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு சிங்கள அரச அதிகாரிகள் தமிழ்மொழியை கற்றுக் கொள்வது அவசியம் என்று அரசு கூறுவதை ஏற்க முடியாது.

சீனா, ரஷ்யா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் அரச அதிகாரிகள் தமது தாய்மொழியையே பயன்படுத்தி வருகின்றபோது, ஏன் இலங்கையில் மட்டுப் இவ்வாறான ஒரு சட்டப் கொண்டுவரப்படுகிறது? அரசின் முன்னெடுப்பு மூலம் சிங்கள மக்களின் உரிமைகள் மீறப்படுகின்றன-என்றார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இறுதிவரை பொலிஸார் நேர்மையுடன் இருக்கட்டும்

**யா**ழ். குடாநாட்டில் சட்டத்துக்குப் புறம்பாக – கள்ளமாக – ஆயுதங்கள் இருக்கின்றன என்பதும், அவை சட்டத்துக்குப் புறம்பான கொலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதும் இப்போது வெளிச்சத்துக்கு வந்துவிட்டது.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவரின் படுகொலைக்குப் பயன்படுத்தப்பட்டது என்று கூறப்படும் 9 எம்.எம். பிஸ்ரலைப் பொலிஸார் மீட்டு நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளனர். அந்தக் கொலையில் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) யாழ். மாவட்ட அமைப்பாளரும், வடமாகாண சபையில் எதிர்க்கட்சித் தலைவராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் (மத்திய அரசைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கட்சி) சார்பில் உள்ளவருமான கந்தசாமி கமலேந்திரன், கொலையுண்ட பிரதேச சபைத் தலைவரின் மனைவி அனித்தா உட்பட மூவர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

போர்க் காலத்தில் ஈ.பி.டி.பி. ஆயுதக் குழுவாக இயங்கி வந்தது. தமது சொந்தப் பாதுகாப்புக்குத்தான் ஆயுதங்களை வைத்திருப்பதாக ஈ.பி.டி.பியினர் கூறிவந்தாலும், இராணுவத்தினருடன் தாங்கள் சேர்ந்து இயங்கியது உண்மைதான் என்று அண்மையில்கூட 'டெய்லி மிரர்' ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் போர் முடிந்ததும் ஆயுதங்கள் அனைத்தும் திரும்ப ஒப்படைக்கப்பட்டுவிட்டன என்று ஈ.பி.டி.பியும், ஆயுதங்கள் களையப்பட்டுவிட்டன என்று அரசும் கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாகத் தெரிவித்து வந்தன. எனினும் துணைப் படைகளிடம் இருந்து ஆயுதங்களைக் களையவேண்டும் என்று அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் ஒவ்வொரு ஆண்டும் தமது அறிக்கைகளில் வலியுறுத்தி வந்தன. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவும் தனது பரிந்துரையில் ஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தது.

அரசோ தொடர்ந்தும் ஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயதங்கள் அனைத்தும் களையப்பட்டுவிட்டன என்று கூறிவந்தது. இப்போதோ, சாக்குக்குள் இருந்து வெளிப்பட்டுவிட்ட பூனையைப் போன்று ஈ.பி.டி.பியினர் வசம் சட்டவிரோத ஆயுதங்கள் இருந்தன என்பதை பொலிஸாரே நிரூபித்துள்ளனர். இதற்கு முன்னர் ஒக்ரோபர் மாதத்திலும் ஒரு தடவை ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் பிஸ்ரலுடன் யாழ். நகரில் கைது செய்யப்பட்டிருந்தார். அப்போதும் கமல் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். எனினும் ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் மேலதிக சோதனைகள் ஏதும் நடத்தப்படவில்லை.

பொலிஸார் மற்றும் சட்டம் ஒழுங்கைக் காக்கும் அதிகாரிகள் அசமந்தமாக இல்லாமல் அப்போதே, அரசியல் அழுத்தங்களைப் புறந்தள்ளிவிட்டு நேர்மையுடன் நடவடிக்கை எடுத்திருந்தால் ஒருவேளை றெக்ஷயனின் உயிர் காக்கப்பட்டிருக்கக்கூடும். எனவே பொலிஸார் இனியும் தாமதிக்காமல் ஆயுதக் குழுக்களிடம் இருந்து சட்டவிரோத ஆயுதங்களைக் களையும் நடவடிக்கைகளை, சோதனைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

அதேசமயம், இந்த வழக்கின் சாட்சிகளையும், விசாரணைக்குத் துணைபுரியும் அதிகாரிகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் பொலிஸாருக்கு இருக்கின்றன. இதுவரைக்கும் நேர்மையுடன் செயற்பட்ட பொலிஸ் இறுதி வரைக்கும் நேர்மையுடன் செயற்பட வேண்டும்.

# நம்பிக்கையீனத்தின் நிழல்

## ஈரான் மீதான பொருளாதாரத் தடை நீக்கம்

ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை அமெரிக்காவும் ஏனைய வல்லரசு நாடுகளும் தளர்த்த எடுத்த முடிவு குறித்த விவகாரம், அனைத்துலக அரங்கில் தற்போது முக்கிய இடம் பிடித்திருக்கிறது. இது அரபு நாடுகளின் இலைதுளிர் காலத்தின் ஒரு பகுதியா அல்லது பிரத்தியேகமாக எடுக்கப்பட்ட ஒரு முடிவா என்பதை ஆராய வேண்டியது முக்கியமானதாகும்.

கடந்த வாரத்தில் உலகின் மிக சக்தி வாய்ந்த ஆறு நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, ஆகிய மேற்கு நாடுகளுடன் ரஷ்யா, சீனா ஆகியனவும் இணைந்து தொடர்ச்சியாக 18 மணிநேரமாக அஞ்சலோட்ட முறையில் ஒருவரோடொருவர் நடத்திய பேச்சுகளின் பயனாக தற் காலிகமாக ஆறுமாத காலம் ஈரான் மீதான பொருளாதாரத் தடையை நீக்குவதென இணக்கம் கண்டிருக்கின்றன.

பதிலுக்கு, தமது அணு உற்பத்தி மையங்களின் அணு செறிவூட்டும் தொழிற்பாட்டை இடை நிறுத்துவதுடன், அனைத்துலக மற்றும் ஐரோப்பிய அணுசக்தி முகவர் நிறுவன நிபுணர்கள் இந்த அணு உற்பத்தி மையங்களைப் பார்வையிட ஈரானிய அதிகாரிகள் அனுமதிப்பது என்றும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

கடந்த பல பத்தாண்டுகளாக ஐக்கிய அமெரிக்காவாலும் ஐரோப்பிய ஒன்றியத்தாலும் ஈரானின் பொருளாதார நடவடிக்கைகளை முடக்கும் படிப்படியான தடைகள் போடப்பட்டு வந்தன. ஆனால் தற்போதய இடைக்காலத் தடை நீக்கம் ஈரானுக்கு 7பில்லியன் டொலர் பெறுமதியான வருவாயைப் பெற்றுக்கொடுக்க உள்ளது.

இதில் 4.5 பில்லியன் எண்ணெய் ஏற்றுமதி மூலம் ஏற்கனவே விற்கப்பட்டு முடக்கப்பட்ட நிதியை விடுவிப்பதன் மூலம் கிடைக்கவுள்ளது. அத்துடன் ஒரு பில்லியன் பெற்றோல் ரசாயனப் பொருள்கள் விற்பனை மூலமும், மேலும் இறக்குமதி செய்யப்படும் வாகன உதிரிப்பாகங்கள் ஊடாகவும், மேலைத்தேய வங்கிகளால் முடக்கப்பட்ட வெளிநாடுகளில் பயின்று வரும் ஈரானிய மாணவர்களுக்கான நிதியை கொடுக்கக்கூடிய சொத்துகளை விடுவித்தல் ஆகியவற்றுடன் பெறுமதிமிக்க உலோகங்களின் விற்பனை ஆகியன மூலமும் ஈரானிய அரசு வருவாயைப் பெற்றுக் கொள்ள உள்ளது.

ஈரானுடனான எந்த விதத் தொடர்புகளையும் மேலை நாடுகள் வைத்து கொள்வதை விரும்பாத நிலையில் இஸ்ரேல் உள்ளது. கடந்த அமெரிக்க தேர்தல் காலங்களின் போது ஈரான் மீது இஸ்ரேல் படை எடுக்குமானால் அதனுடன் சேர்ந்து படைகளை நகர்த்தவும் தனது நிர்வாகம் தயங்காது என்று கூறிய அமெரிக்க அதிபர் ஒபாமா ஈரானுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார்.

### தடைகள் தற்காலிகமானவையே

ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார பாதுகாப்பு அமைச்சர் கத்தரின் ஆஸ்டனின் முழுமுயற்சியை பல்வேறு பிரித்தானிய ஊடகங்களும் பாராட்டி உள்ளன. ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஈரான் மீதான தடை நீக்கத்தை பொருளாதார நலன் சார்ந்ததாகவே பார்க்கின்றன.

மேலைத்தேய இராஜதந்திரிகள் தற்போது எட்டி உள்ள இந்த குறைந்த பட்ச உடன்படிக்கையை உடனடியாக இருதரப்பும் நடைமுறைப்படுத்த வேண்டியதன் சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய வேண்டிய கட்டாயம் உள்ளதாக உணர்கின்றனர்.

பிரான்சிய வெளியுறவு அமைச்சர் லோரன்ற் ஃவேபியஸ், யூரோப் 1 என்ற வானொலிக்கு அளித்த பேட்டியில் ஐரோப்பிய நாடுகளின் அமைச்சர்கள் டிசெம்பரிலேயே ஈரான் மீதான ஐரோப்பிய யூனியன் இட்ட தடைகள் மீதான கட்டுப்பாடான நீக்கம் குறித்து ஆராய வேண்டிய அவசியம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும் இத் தடைகள் தற்காலிகமானவை, வரையறுக்கப்பட்டவை அத்துடன் மீள நடைமுறைப்படுத்தக் கூடியவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானின் அணு செறிவாக்கும் திறன் குறித்து அனைத்து இராஜதந்திரிகளும் மிகவும் அச்சக் கண்கொண்ட நிலையிலேயே இருந்தனர். இதனால் இந்த இடைக்கால உடன்படிக்கை தகுந்த நேரத்தில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டதாகக் கருதுகின்றனர். ஒருவேளை ஈரான் அணு ஆயுதக்குறைப்பு ஒப்பந்தங்களை ஏற்காமல் இருந்திருந்தால் ஒருசில வாரங்களுக் குள் அணு ஆயுத உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக அது மாறியிருக் கும் என்றும் கருதுகின்றனர்.

### ஈரானிய- அமெரிக்க உறவின் மைல்கல்

அமெரிக்க இராஜங்கத் திணைக்கள அதிகாரிகள் இந்த உடன்படிக்கை ஈரானின் அணு ஆயுத உற்பத்தியை நிறுத்தி உள்ளதாக கருதுகின்றனர். முப்பதாண்டு காலமாக இருந்து வந்த ஈரானிய அமெரிக்க முறுகல் நிலையை இந்த உடன்படிக்கை ஒரு முக்கிய நட்சத்திரப்புள்ளி நிலைக்கு இட்டு சென்றுள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் சில கருதுகின்றன.

பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஃகேக் நாடாளுமன்றத்தில் குறிப்பிடுகையில் இந்த உடன்படிக்கையை நலிவடையச்செய்யும் எவருக்கும் அது இஸ்ரேல் உட்பட எவராக இருந்தாலும் அவர்களை ஊக்குவிக்க மாட்டோம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஈரானிய அதிபர் ஹசன் றபாணி முதன்முறையாக தனது பதவி ஏற்புக்குப் பிற்பாடு இவ்வாண்டு செப்ரெம்பர் மாதம் இடம் பெற்ற ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத் தொடரில் பேசும் போது ஈரான் ஓர் அமைதியான நாடு. உலக நாடுகள் பொருளாதாரத் தடைகளை நீக்குமிடத்து அணு செறிவூட்டும் உற்பத்தி முயற்சிகளை நிறுத்த ஈரான் தயாராக இருக்கிறது என்று நேரடியாக தெரிவித்திருந்தார். இதனை ஒரு நல்ல சமிக்ஞையாக எடுத்து கொண்ட அமெரிக்க மற்றும் மேலைத்தேய தரப்புக்கள் பேச்சுகளுக்கு உடன்பட்டன.

### புதிய தலைமையால் வந்த மாற்றம்


மன்னராட்சிக்கு உட்பட்ட அரபுநாடுகளை தவிர ஏனைய மத்திய கிழக்கு நாடுகள் ஒவ்வொன்றாக மக்கள் புரட்சிகளால் கவிழ்ந்து வரும் இவ்வேளை ஈரான் மேலை நாடுகளின் அரங்குக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. முன்பெல்லாம் மேலைத்தேய கோட்பாடுகளை எடுத்த மாத்திரத்திலே எதிர்க்கும் மனோநிலை கொண்ட ஈரான், தற்போது புதிய தலைமையின் கீழ் மேலைத்தேயத்தை கையாளும் நிலைக்கு வந்திருக்கிறது.

-செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் எவ்வாறு முழுமனதுடன் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன என்பதிலேயே எல்லா விவகாரமும் தங்கி உள்ளதாக மேலைத்தேய அவதானி கள் கருத்துகளை வெளியே கூறி வந்த போதிலும், தடைகள் நீக்கப்படுவதன் விளைவாக இடம் பெறப்போகும் ஈரானிய உள்நாட்டு பொருளாதாரத் தளம்பல் மிக முக்கியமான தாகும். மேலும் மக்கள் மத்தியிலே பரிமாறப்படக் கூடிய தகவல்கள் ஆகியவை கூட இங்கே கவனிக்கத்தக்கவை. ஈரானிய மக்கள் மத்தியிலே மேலைத்தேய காழ்ப்புணர்வு ஏனைய மத்திய கிழக்கு நாடுகளை விட சற்று அதிகரித்த தன்மையுடன் இருப்பதை சமூக ஆய்வுகளுக்கான நிறுவனங்கள் கருத்தில் கொண்டுள்ளன. இந்தத் தடை நீக்கம், ஈரானிய மக்களை உள்ளூர் ஊடகங்களின் தொடர்ச்சியான மேலைத்தேய எதிர்ப்புவாதப் போக்குக் கொண்ட வார்த்தைகளில் இருந்து சற்று விடுதலை பெற வைப்பது, சிறையில் அடைபட்டிருக்கும் தாராளவாதிகளை விடுதலை பெற வைப்பது, அன்றாட வாழ்கையை இலகுவாக்கக்கூடிய மேலைத்தேய தொழில் நுட்பங்களின் நகர்வின் அருமையை உணர்த்துவது என பல்வேறு விடயங்களின் மாற்றம் ஈரானிய ஆளும் அதிஉயர் தலைமைப் பீடம் மீது பின் உதைப்பொன்றை ஏற்படுத்த கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்காதா என்பது கூட ஒரு கேள்வியாகத் தான் உள்ளது.

ரஷ்ய - ஈரானிய உறவில் கடந்த பல காலமாக ஒருவகை புரிந்துணர்வு இருந்து வருகிறது. செச்சினிய பிரச்சனைகள் உட்பட, தென் ரஷ்ய பகுதி மாநிலங்களில் இருக்ககூடிய இஸ்லாமிய முறுகல் நிலைகளைத் தீர்த்து வைப்பதில் ஈரான் ரஷ்யாவுக்கு பெரும் உதவியாக இருந்து வந்ததே இதற்கு காரணம். அது மாத்திரம் அல்லாது மேலை நாடுகளின் வியாபாரத் தடைகள் ரஷ்யாவுக்கு தனது உற்பத்திகளை சந்தைப்படுத்த ஏதுவாக இருக்கும் என்பது இன்னுமோர் விடயமாகும். ஈரான் மீதான தடை நீக்கம் குறித்த உலகின் நிலை இவ்வாறு இருக்க இந்தத் தடை நீக்கம் குறித்த ஒரு நம்பிக்கை அற்ற பார்வை குறித்தும் பலரது கருத்துகள் இருப்பதைக் காணலாம். .

ஆனால் உலகம் தற்போது பொருளாதார முன்னேற்றத்துக்கு முதன்மை கொடுக்கின்றது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. ஆனால் பொருளாதார முடக்க நிலையைச் சந்தர்ப்பமாக பயன்படுத்தும் மேலைத்தேய முதலாளித்துவ கோட்பாடுகளுக்கு எதிராக செயற்பட முனைவது தமது அழிவுக்கே காரணமாகி விடலாம். இந்த வகையிலே தற்போது ஈரான் மேலைத்தேய சந்திக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மாலை போடுவரா, கத்தி போடுவரா அல்லது வீரனாக்குவரா என்பதைத் தெரிந்து கொள்ளும் காலம் மிக விரைவில் வரும்.

*(நன்றி: புதினப்பலகை)*



**ரஷ்ய – ஈரானிய உறவில் கடந்த பல காலமாக ஒருவகை புரிந்துணர்வு இருந்து வருகிறது. செச்சினிய பிரச்சனை கள் உட்பட, தென் ரஷ்ய பகுதி மாநிலங் களில் இருக்ககூடிய இஸ்லாமிய முறுகல் நிலைகளைத் தீர்த்து வைப்பதில் ஈரான் ரஷ்யாவுக்கு பெரும் உதவியாக இருந்து வந்ததே இதற்கு காரணம்.**

பாதீனிய ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது



பாதீனியத்தை ஒடுக்குவதற்கு எம் முன்னால் உள்ள ஒரே தீர்வு அவை பெருமெடுப்பில் சூழ்ந்து கொள்வதற்கு முன்னர் கைகளினால் பிடுங்கி அழிப்பது தான். வடக்குக் கிழக்கிலிருந்து தென் இலங்கைக்குள் பாதீனியத்தின் பயணத்தைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை அரசு மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டு வருகிறது.

# படையெடுக்கும் பாதீனியம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தாவரவியல் துறையைச்சேர்ந்த செல்வி மஞ்சுளா செல்வராசா, அவரை இனப்பயிர்களில் பாதீனிய நஞ்சுகளின் தாக்கம் குறித்து ஓர் ஆய்வினைச் செய்திருந்தார். அதில் உழுந்து, பயறு போன்ற பயிர்களுக்கு அருகில் பாதீனியம் வளரும் வேளை பயிர்களின் வளர்ச்சி வெகு வாகத் தடைப்படுவது அவதானிக் கப்பட்டுள்ளது. அவரை இனப் பயிர்களின் சிறப்பாக, அவற்றின் வேர்களில் 'இரைசோவியம்' (Rhizobium) பற்றீரியங்களைக் கொண்ட வேர் முடிச்சுக்கள் (Root nodules) காணப் படுகின்றன. இவை நைதரசன் வாயுவை தாவரங்களால் உறிஞ்சக் கூடிய அயனி நிலைக்கு மாற்றித் தருவதுடன் வளியில் நைதரசனின் சமநிலையைப் பேணியும் வருகின்றன. பாதீனிய நஞ்சுகள் இந்த வேர்ச் சிறு கணுக்களையும் விட்டு வைப்பதில்லை என்பதும் இந்த ஆய்வின் முடிவாகி இருக்கிறது.

மனிதர்களிலும், குறிப்பாக ஒவ்வாமையால் (Allergy) அதிகம் பாதிக்கக்கூடிய தன்மையுடைய நபர்களில் பாதீனியம் சுலபத்தில் தன் குணத்தைக் காட்டி விடுகிறது. பாதீனியம் பரவி உள்ள இடங்களில் காற்றில் மிதக்கும் மகரந்தங்களில் பாதீனியத்தினுடையவைதான் பெரும் பங்கு வகிக்கின்றன. இந்த மகரந்தங்களும் தம் மீது நஞ்சைப் பூசி வைத்துள்ளன. இதனைச் சுவாசிக்க நேர்பவர்களுக்கு ஆஸ்துமா போன்ற சுவாசக் கோளாறுகள் ஏற்படுகின்றன. அத்தோடு பாதீனிய செடியைத் தொடர்ச்சியாக தொட நேர்கிறபோது பலருக்குத் தோல் அரிப்பு, தடிப்பு அவதிப்படும் அளவுக்கு ஏற்பட்டு விடுகிறது. பாதீனியம் மிகப் பெரும் அளவில் ஆக்கிரமித்துள்ள இந்தியாவில் இதன் தாக்கம் கடுமையாக உணரப்பட்டுள்ளது.

பாதீனியத்தின் தாக்கத்தால் எந்தவித சிகிச்சைக்கும் கட்டுப்படாத ஒவ்வாத விளைவுகளைப் பொறுக்க முடியாமல் பெங்களூர் மருத்துவர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாக புதுவை காஞ்சிமா முனிவர் பட்டமேற்படிப்பு மையத்தின் தாவரவியற் துறைப் பேராசிரியர் எம்.பி.இராமன் தனது கட்டுரை ஒன்றில் பதிவு செய்திருக்கிறார்.



**உயிரியல் ஒடுக்கலே பொருத்தமானது**

பாதீனியத்தின் முற்றுகைக்குள் ஆளாகியுள்ள நாடுகள் எல்லாம் அவற்றை விரட்டுவதற்குக் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்ட போதும் தொடர்ந்தும் பின்னடைவுகளையே சந்தித்து வருகின்றன. களைக் கொல்லி இரசாயனங்களின் பிரயோகம் பசுமைப் புரட்சினால் ஏற்கெனவே நொந்து போய் இருக்கும் மண்ணை மேலும் மேலும் நஞ்சில் குளிக்க வைக்கும் செயல் என்பதால் உயிரியல் ரீதியாக பாதீனியத்தை ஒடுக்குவதே (Biological Control) பெரிதும் விரும்பப் படுகின்றது. ஆஸ்திரேலியாவில் கங்காருவைப் பயிர் நிலங்களில் நுழைய விடாது தடுக்கும் வேலியாக நாக தாளி எனப்படும் முட்கள்ளிச் செடியை அறிமுகப்படுத்தினார்கள். நாகதாளி விவசாய நிலங் களையெல்லாம் மூடி வளர்ந்தது. அதனை அழிப்பதற்கு ஆர்ஜென் ரீனாவில் இருந்து ஒரு வகை அந்துப் பூச்சியை (Cactoblastis Cactorum) வரவழைத்து அதில் வெற்றியும் கண்டார்கள். நன்றிக் கடனாக இந்தப் பூச்சிக்கு குயின்ஸ்லாந்தில் நினைவுக் கல்வெட்டுக் கூட நிறுவப்பட்டுள்ளது. இப்படி உயிரியல் ரீதியான அழிப்புக்கு உலகில் பல உதாரணங்கள் இருந்த போதும், கரும்புத் தவளைகள் போன்ற பின் விளைவுகளைக் கொடுத்த படு பாதகமான உதாரணங்களே அதிகம் உள்ளன. இதனால் பாதீனியத்தை அழிப்பதற்கான போரில் பின்னோக்கித் திருப்பிச் சுடாத உயிர் ஒன்றை இறக் கிவிடுவதில் மிகுந்த நிதானம் தேவைப்படுகிறது.

பாதீனியத்தின் மீது ஏவி விடுவதற்கென இந்தியாவில் ஒரு வகை வண்டுகளை ( Chrysomelid beetle )மெக்சிக்கோவில் இருந்து தருவித்துச் சோதித்துப் பார்த்தார்கள். இவை, பாதீனியத்தோடு சூரிய காந்தி போன்ற பயிர்களையும் துவம்சம் செய்ததால் சோதனை முயற்சிகளோடு பின்வாங்க நேரிட்டது.

> பாதீனியம் பரவி உள்ள இடங்களில் காற்றில் மிதக்கும் மகரந்தங்களில் பாதீனியத்தினுடையவைதான் பெரும் பங்கு. இந்த மகரந்தங்களும் தம் மீது நஞ் சினைப் பூசி வைத்துள்ளன.

இந்த நிலையில், ஈழத்தில் பாதீனியத்தை ஒடுக்குவதற்கு எம் முன்னால் உள்ள ஒரே தீர்வு அவை பெருமெடுப்பில் சூழ்ந்து கொள்வதற்கு முன்னால் கைகளினால் பிடுங்கி அழிப்பதுதான். வடக்குக் கிழக்கிலிருந்து தென்இலங்கைக்குள் பாதீனியத்தின் பரவலைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை அரசு மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டு வருகிறது. பாதீனியச் செடிகள் வீட்டு வளவுகளிலோ, பயிர்ச்செய்கை நிலங்களிலோ காணப்பட்டால் அது தண்டனைக்குரிய குற்றம் என அறிவித்து அதனைப் பரப்புரைப் படுத்தி வருகி றது.

ஆனால் ஈழத்தில் இந்திய இராணுவம் மீளவும் இலங்கை இராணுவத்திடம் கையளித்துச் சென்றுள்ள இராணுவ முகாம்களில் இருந்தும், கண்ணி வெடி வயல்களில் இருந்துமே பாதீனியம் பெரிதும் படையெடுத்துக் கொண்டிருக்கிறது. மேலும் , பாதீனிய விதைகள் முளைப்பதற்குத் தேவையான சூழ்நிலைகள் இல்லாதவிடத்து சாதகமான சூழ்நிலை வரும் வரை 20 வருடங்கள் கூட கும்பகர்ண உறக்கத்தில் கிடந்து முளைக்கக்கூடிய தன்மை வாய்ந்தவை இதனால் இவற்றைக் கைகளினால் பிடுங்கி ஒழிப்பது என்பது இலேசானதும், ஒரே தடவையில் சாத்தியமானதும் அல்ல. மலேரியாவை ஒழித்துக் கட்டுவதற்குத் தனியான துறை இயங்கி வந்ததைப் போல வடக்கு கிழக்கில் பாதீனியத்தின் ஒழிப்புக்கும் ஒரு பசுமைப் படை அவசியம் தேவைப்படுகின்றது.

ஈழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் உட்கட்டுமானங்களில் இன்றைய இக்கட்டான சூழலில் கூட இது தவிர்க்க முடியாத ஒன்று. தவிர்க்கக் கூடாத ஒன்றும் கூட.

(முற்றும்)

*(நன்றி: ஏழாவது ஊழி)*

# தமிழர்களின் பண்பாடு விருந்தோம்பல்



விருந்தோம்பல் என்பது, வெளியில் சிரித்து, உள்ளுக்குள் திட்டிக் கொண்டு உபசரிப்பதல்ல. விருந்தோம்பல், தமிழர்களின் கலாசாரம் மட்டுமன்றி, அவர்களின் சிறப்புக் குணங்களுள் ஒன்று. வந்தாரை வாழ வைப்பது தமிழ் மக்களின் பண்பாடு, அந்த வகையில் விருந்தினரை உபசரிக்க அவர்களுக்குச் சொல்லித்தர வேண்டியதில்லை என்றாலும், இன்றைய இளைய தலைமுறையினருக்காக, சில தகவல்கள்.

வீட்டுக்கு வருபவர்களை, இன்முகம் காட்டி, வர வேற்று, உபசரி யுங்கள்.

அவர்களுக்குப் பிடித்தமான பானத்தைத் தயாரித்துக் கொடுத்து, அவர்களுடன் அமர்ந்து, அவர்களின் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

அவர்களுக்குப் பிடித்தமான உணவு சமைத்து, உங்கள் கையால் பரிமாறுங்கள்.

உங்கள் வீட்டில், அவர்கள் தங்க நேர்ந்தால், வீட்டுப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவது, குழந்தைகளைப் பேசிக் பண்டிப்பது கணவரைக் குறை சொல்வது, சண்டை போடுவது ஆகியவற்றைத் தவிர்த்து விடுங்கள்.

விருந்தினரின் குழந்தைகளிடம், பாரபட்சம் காட்டாமல், உங்கள் குழந்தைகளைப் போல்; பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் ஊரைச் சுற்றிப் பார்க்க அவர்கள் விரும்பி னால், யார் செலவு செய்வது என்பதை, முன்கூட்டியே, பேசி முடிவு செய்து கொள்ளுங்கள்.

ஒருவரை உபசரிக்க வேண்டும் என்பது உளவியல் ரீதியான விடயம். உபசரிப்பு என்பது, சொல்லித் தெரிந்து கொள்வதல்ல. சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு, விருந்தோம்பல் பண்பைச் சொல்லி வளர்ப்பது அவசியம்.

**மேடம்:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**இடபம்:** இனந்தெரியாத சின்னச் சின்னச் கவலைகள் வந்து நீங் கும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப்போய் பொல்லாப்பாக முடியும். யாருக்காகவும் பிணைக் கையொப்பமிட வேண்டாம்.

**மிதுனம்:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப் படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார்.

**கடகம்:** நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். வீண் விவாதங் களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைசுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**சிங்கம்:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். வியாபரத்தில் லாபம் உண்டு. உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.

**கன்னி:** எடுத்த வேலையைத் தடையின்றி முடிப்பீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அனபுத்தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பிரியமானவர்களைச் சந்தித்து மகிழு வீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக நடந்து கொள்வார்கள்.

**விருச்சிகம்:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அரச காரியங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். மன உளைச்சல் நீங்கும். விடாப்பிடியாகச் செயற் பட்டுப் பணிகளை முடிப்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும். யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம்.

**மகரம்:** அநாவசியச் செலவுகளைத் தவிருங்கள். உறவினர்களுடன் மனவருத்தங்கள் ஏற்படும். வியாபாரத் தில் ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர் களால் பிரச்சினைகள் ஏற்படும்.

**கும்பம்:** முன்கோபம், பதற்றம் விலகும். எடுத்த காரியங்களை முடிக்கமுடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**மீனம்:** மனதில் பட்டதைப் பளிச்சென்று பேசி அனை வரையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

தருவது வித்தியா

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## நாளை

கார்த்திகை-21 சனிக்கிழமை
07.12.2013
திதி: பஞ்சமி மு.இ.07.20 வரை
நட்சத்திரம்: திருவோணம் மு.இ.10.40 வரை
சுபநேரம்: 03.17 - 04.47 வரை
இராகுகாலம்: 09.17 - 10.47 வரை

# சந்தேகமற்ற நிலை



விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

'இரக்கம்கொள்–ஏன் என்றால் சொர்க்க அரசு அருகிலேயே இருக்கிறது.' இரக்கம் என்பதற் குக் கிரேக்கமொழியில் 'மெட னாய்ட் (metanoeite) என்ற சொல் பயன் படுத்தப்படுகிறது. (மெடனாய்ட் என்றால், வெளியில் பின்னால், அப்பால் என்று பொருள்) அதாவது அறிவுக்கு அப்பால் செல்–புலனறிவுக்கு அப்பால் செல்–என் பதாகும். 'அதாவது அறிவுக்கு அப்பால் சென்று உன் உள்ளே பார்; அங்கு சொர்க்க அரசைக் காண்பாய்' என்பது இதன் பொருள்.

சர் வில்லியம் ஹாமில்டன் (Sir William Hamilton) என்பவர், தத்துவ நூல் ஒன்றின் இறுதியில், "தத்துவ சாஸ்திரம் இங்கே முடிகிறது. மதம் ஆரம்பமாகிறது" என்று குறிப்பிட்டுள்ளார். மதம் அறிவின் எல்லைக் குட்பட்டது அன்று; உட்படுத்தவும் முடியாது. புலன்களால் அறிபவற்றைக் கொண்டே அறிவின் முடிவுகள் அமைகின்றன. ஆனால் மதத்துக்கும் புலன்களுக்கும் தொடர்பே இல்லை. கடவுளை அறிய முடியாது என்று சந்தேகவாதிகள் சொல்கின்றனர் அதுவும் சரிதான். ஏனெனில் தங்கள் புலன்களுக்கு எட்டியவரை அவர்கள் முயன்றும் அவர்க ளால் கடவுளைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆகையால் மதத்தையும், அதாவது கடவுள் இருக்கிறார் என்பதையும், மரணம் அற்ற வாழ்வையும் மற்றும் இது போன்றவற்றையும் நிரூபிப்பதற்கு புலனறி வைக் கடந்துசெல்ல வேண்டும். பெரிய தீர்க்கதரிசிகளும் மகான்களும் தாங்கள் கடவுளைப் பார்த்திருப்பதாகச் சொல்கி றார்கள். அதாவது அவர்களுக்கு ஆன்ம அனுபவம் கிடைத்திருக்கிறது. அனுபவம் இல்லாமல் அறிவு இல்லை. ஆதலால் மனிதன் தனது ஆன்மாவில்தான் கடவு ளைக் காணவேண்டும். பிரபஞ்சத்தின் அந்த மகத்தான உண்மையை நேருக்கு நேராக மனிதன் கண்ட பிறகுதான் அவனுடைய சந்தேகங்கள் எல்லாம் நீங்கும்; அவன் மனத்தில் தெளிவில் லாமல் இருந்த விடயங்கள் எல்லாம் தெளிவாகிவிடும். இதுதான் கடவுளைப் பார்ப்பது என்பது. இதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ப தில்லை. உண்மையை ஆராய வேண்டி யதுதான் நமது கடமை. மற்ற விஞ் ஞானங்களைப் போலவே மதத்திலுள்ள வற்றையும் நேருக்கு நேராக நீங்கள் காணலாம். ஆனால் ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட ஓர் அறிவு நிலைக்குச் சென்றால்தான் இது முடியும். மத உண்மைகளை ஒவ்வொருவரும் சரி பார்க்க முடியும். நமது சிறந்த ஒரு லட்சியம் கடவுளைக் காண்பதே. சக்தி பெறுவது நமது லட்சியம் அல்ல. உண்மை–அறிவு–அன்பே. லட்சியம்; அன்பே கடவுள்.

# விலங்குகளின் பழமையான பொது கழிப்பிடம்


**விலங்குகளின் மிகப் பழைமையான பொதுக்கழிப்பிடம் 24 கோடி ஆண்டு கால, வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய விலங்குகள் பயன்படுத்திய பொதுக் கழிப்பிடம் ஒன்று ஆர்ஜெண்டினாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய விலங்குகள் பயன்படுத்திய பொதுக்கழிப்பிடத்தைக் காட்டும் ஒரு கற்பனைச் சித்திரம் இது.

நவீன கால காண்டா மிருகம் போன்ற டினோ டொண்டோசோரஸ் என்ற விலங்கால் இடப்பட்ட தாகக் கருதப்படும் ஆயிரக்கணக்கான புதை படிமக் கழிவுகள் குவிந்து கிடக்கும் இந்த இடத்தை விஞ்ஞானிகள் உலகின் மிகப் பழைமையான பொதுக் கழிப்பிடம் என்று வர்ணிக்கின்றனர்.

ஊரும் விலங்கினங்கள் ஒட்டுண்ணிகளைத் தவிர்க்க வும், தங்களைக் கொல்லவரும் விலங்குகளை எச்ச ரிக்கவும் ஒரு யுக்தியாக இது போல ஒரே இடத்தில் கழிவுகளை இட்டிருக்கலாம் என்று இந்த விஞ் ஞானிகள் கூறுகின்றனர். இந்தச் சாணக்குவியல்கள், எரிமலைச் சாம்பல் திரை யால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.

இவை வரலாற்றுக்கு முந்தைய காலத்து உணவு, அக்காலத்தில் பரவிய நோய்கள் மற்றும் தாவரங்கள் குறித்த ஆதாரங்களைத் தருகின்றன என்று அவர்கள் கூறுகிறார்கள்.



# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | | | 3 | | 6 | 2 | |
| | 2 | 9 | | | | | | |
| 7 | | 6 | 4 | 2 | | | 1 | |
| | | | 2 | 6 | | 8 | 3 | |
| | | 8 | 3 | | 1 | 4 | | |
| | 4 | 3 | | 7 | 8 | | | |
| | 9 | | | 1 | 2 | 3 | | 4 |
| | | | | | | 7 | 5 | |
| | 7 | 1 | | 5 | | | 6 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டாங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 4 | 3 | 9 | 7 | 1 | 2 | 5 |
| 7 | 3 | 5 | 8 | 1 | 2 | 4 | 6 | 9 |
| 2 | 9 | 1 | 4 | 5 | 6 | 3 | 7 | 8 |
| 1 | 7 | 6 | 5 | 3 | 9 | 8 | 4 | 2 |
| 9 | 4 | 2 | 6 | 8 | 1 | 5 | 3 | 7 |
| 3 | 5 | 8 | 2 | 7 | 4 | 6 | 9 | 1 |
| 5 | 8 | 7 | 9 | 4 | 3 | 2 | 1 | 6 |
| 4 | 2 | 9 | 1 | 6 | 8 | 7 | 5 | 3 |
| 6 | 1 | 3 | 7 | 2 | 5 | 9 | 8 | 4 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண் டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் [illegible] அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம் [illegible] கோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரக பரவலாக்கியது [illegible] 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## கைபேசிகளின் செயற்பாடுகளை காட்டிக் கொடுக்கும் கைப்பட்டி

தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக பல்வேறு செயற்பாடுகளை கண்காணிக்கும் முகமாக இலத்திரனியல் கைப்பட்டிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.
இவற்றின் ஒரு அங்கமாக ஸ்மார்ட் கைபேசிகளின் செயற்பாடுகளைக் காட்டிக்கொடுக்கும் Vybc எனும் புதிய கைப்பட்டி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
50 அடி தூரத்துக்கு செயற்திறன்கொண்ட இதனை ஐபோன் 4S, ஐபோன் 5/5C/5S போன்றவற்றிலும் அன்ரோய்ட், விண்டோஸ் இயங்குதளங்களில் செயற்படும் ஸ்மார்ட் கைபேசிகளுக்கும் பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.
மேலும் இதன் விலையானது 39 டொலர்கள் ஆகும்.






## 20 மெகாபிக்சல் கமராவுடன் அறிமுகமாகும்

## சம்சுங் கலக்ஸி நோட் 4

முதற்தர மொபைல் சாதன உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றாக விளங்கும் சம்சுங் நிறுவனம் சம்சுங் கலக்ஸி நோட் 4 சாதனத்தை வடிவமைக்கும் பணியில் மும்முரமாக இறங்கியுள்ளது.
20 மெகாபிக்சல்களை உடைய கமராவை உள்ளடக்கியதாக இது வடிவமைக்கப்படுகின்றது.
இதேவேளை முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட சம்சுங் கலக்ஸி நோட் 3 ஆனது 13 மெகாபிக்சல்களை உடைய கமராவையும், எதிர்வரும் பெப்ரவரி மாதம் அறிமுகப்படுத்தப்படவுள்ள சம்சுங் கலக்ஸி நோட் எஸ்.5 ஆனது 16 மெகாபிக்சல்கள் உடைய கமெரா வையும் கொண்டிருக்கும்.




## அமேசான் தளத்தின் புதிய தொழில்நுட்பம்




ஒன்லைன் மூலமாக பல்வேறு பொருள்களை விற்பனை செய்துவரும் பிரபலமான நிறுவனங்களில் ஒன்றான அமேசான், தற்போது புதிய யுக்தி ஒன்றைக் கையாள முற்பட்டுள்ளது.
இதன்படி கொள்வனவு செய்யப்படும் பொருள்களை குறித்த வாடிக்கையாளருக்கு விநியோகம் செய்வதற்காக ஒக்டோகொப்ரர் (Octocopter) என்ற சாதனத்தைப் பயன்படுத்தவுள்ளது. இச்சாதனமானது 8 விசிறிகளைக் கொண்டுள்ளதுடன் 60 நிமிடங்களுக்கு தொடர்ச்சியாக பறக்கக்கூடியது. இதனால் இந்த பறப்பு எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களிலேயே அமேசான் தனது புதிய சேவையை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நோட்பாட்டைப் பயன்படுத்தியும் போல்டர்களை லொக் செய்யலாம்!

folderlock போல்டர் லொக் செய்வதற்கு முதலில் ஒரு நோட் பாட்டை திறந்து அதில் பின்வருமாறுரைப் செய்யவும். ren tamil tamil. 21EC 2020-3 AEA-1069-A2DD-08002 B30309D பின் அந்த நோட் பாட்டை லொக்.பாற் (lock.bat) என பெயர் கொடுத்து Save செய்யவும். பின்னர் இன்னொரு நோட்பாட்டை திறந்து அதில் பின்வருமாறுரைப் செய்யவும் ren tamil. 21EC2020-3 AEA-1069- A2DD-08002 B30309ம் tamil அதன் பின்னர் அந்த நோட் பாட்டை கீ.பாற் என பெயர் கொடுத்து Save செய்யவும். இங்கு tamil என்பது நீங்கள் லொக் செய்ய வேண்டிய போல்டரின் பெயர் ஆகும்.
இனி குறிப்பிட்ட அந்த tamil என்ற போல்டரை லொக் செய்வதற்கு லொக். பாற் என்ற கோப்பை double click செய்தல் வேண் டும்.
லொக் செய்த கோப்பை மீண் டும் Unlock செய்வதற்கு கீ.பாற் என்ற கோப்பை doub le click செய்தல்வேண்டும்.
நீங்கள் போல்டரை லொக் செய்யும் போது போல்டர் டி லொக்.பாற் என்ற கோப்பு டி ஒரே இடத்தில் இருக்க வேண் டும்.
அதே போல Unlock செய் யும் போது unlock செய்யும் போல்டர் டி கீ.பாற் என்ற கோப்பு டி ஒரே இடத்தில் இருக்க வேண்டும். அந்த கீ.பாற் என்ற வேறொரு Drive இல் சேமித்து விடுங்கள். அந்த கோப்பை இல்லாமல் உங்கள் போல்டரை யாரும் திறக்க முடியாது.

அதே போல Unlock செய்யும் போது unlock செய்யும் போல்டர் டி கீ.பாற் என்ற கோப்பு டி ஒரே இடத் தில் இருக்க வேண்டும். அந்த கீ.பாற் என்ற வேறொரு Drive இல் சேமித்து விடுங்கள்.



பயணங்களின் போது

## ஸ்மார்ட் கைபேசியை சார்ஜ் செய்ய நவீன சார்ஜர்

கார்களில் பயணிக்கும்போது ஸ்மார்ட் கைபேசி களை இலகுவாக சார்ஜ் செய்துகொள்ளும் வகையில் நவீன சார்ஜர் ஒன்று அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது.
R2dD2 என்ற இச் சார்ஜர், யு.எஸ்.பி. இணைப் பானைக் கொண்டுள்ளதுடன் ஒரே நேரத்தில் இரு சாதனங்களை சார்ஜ் செய்துகொள்ளத்தக்க வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
2.1 அம்பியர் மின்னோட்டத்தைப் பிறப்பிக்க வல்ல இச்சாதனத்தின் பெறுமதி 49.99 அமெ ரிக்க டொலர்கள் ஆகும்.



# மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.6
கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் நடத்தும் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
நிலையத் தலைவர் க.தர்மசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன், யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர். (ந-14-9)

* * *

வவுனியா, டிசெ.6
மாற்றுவலுவுள்ளோருக்கான வலுவூட்டல் அமையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வுகள் இன்று தொடக்கம் மூன்று நாள்கள் வவுனியாவில் இடம்பெறவுள்ளன.
இந்த நிகழ்வுகள் வவுனியாவில் அமைந்துள்ளவரோட் தலைமை அலுவலகத்தில் "குழு வலுவூட்டத்தில் வளம் பெற ஒன்றிணைவோம்" என்ற தொனிப்பொருளில் இடம் பெறவுள்ளன.
இந்த நிகழ்வில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள மாற்றுவலுவுள்ளோர் சமூகம் சார் வலுவூட்டல் குழுக்களின் 300க்கும் மேற்பட்ட தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# பரிசளிப்பு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.6
கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
கல்லூரி அதிபர் வி. ஞானகாந்தன் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மத்திய வங்கியின் பொருளியல் ஆய்வு நிலைய பிரதிப் பணிப்பாளரும், கல்லூரியின் பழைய மாணவருமாகிய கே.பாலசுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினராக சட்டத்தரணியும் பழைய மாணவியுமான செல்வி ஞானலோஜினி சிவஞானமும் கலந்துகொள்வர். பரிசில்களை திருமதி சாந்தேவி பாலசுப்பிரமணியம்வழங்குவார். (த-400)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.6
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் நடத்தப்பட்ட இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற வுள்ளது. நிகழ்வில் தேசிய, மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக் கான பரிசளிப்புக்கள் இடம்பெறும். (ந-7)

* * *

வடமராட்சி, டிசெ.6
தேசிய பாடசாலையான நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி கலை அரங்கில் அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள் ளது.
இந்த நிகழ்வில் வித்தியாலய பழைய மாணவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான மு.சிற்றம்பலம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ந-8)

* * *

தென்மராட்சி,டிசெ.6
அல்லாரை ஐங்கரன் முன்பள்ளியின் ஆண்டு விழாவும் பரிசில்நாள் நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை முன்பள்ளி மண்டபத்தில் இடம் பெறும்.
ஐங்கரன் சனசமூக நிலையத் தலைவர் க.தம்பு தலைமையில் நடைபெறும்நிகழ்வுக்குமுதன்மை விருந்தி னராக சாவகச்சேரி பிரதேசசபைத் தலைவர் ச.துரைராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக பிரதேச சபை செயலாளர் செல்வி தி.தர்சினி, அல்லாரை அ.த.க பாடசாலை அதிபர் திருமதி க.யோகநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ந-9)

# திறப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ.6
யாழ்.வர்த்தகர்களின் நிதி உதவியுடன் யாழ்.வணிகர் கழகத்தால் நிர்மாணிக்கப்பட்ட மகாதேவ ஆச்சிரமச் சைவச் சிறுவர் இல்லத்தின் மகளிர் விடுதித் திறப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11மணிக்கு கிளிநொச்சி ஜெயந்தி நகரில் இடம்பெறவுள்ளது.
சிறுவர் இல்லத் தலைவர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந-14)

* * *

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய நுழைவாயில் திறப்பு விழாவும் மதிப்பளித்தல் நிகழ்வும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் சின்னத்தம்பி மண்டபத்தில் அதிபர் கி.கிருஷ்ணாகரன் தலைமையில்நடைபெறவுள்ளது. பிரதமவிருந்தினராக வித்தியாலயத்தின் பழைய மாணவர் மா.சிவபாலன் கலந்து கொள்வார். (ந-35)

# ஒளி விழா

கொழும்புத்துறை,டிசெ.6
பாஷையூர் புனித அந்தோனியார் பகல்பராமரிப்பு நிலைய முன்பள்ளி சிறார்களின் ஒளி விழா நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.
பாஷையூர் புனித அந்தோனியார் பெண்கள் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் ஒளிவிழாவில் பிரதமவிருந்தினராக யாழ்.மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்திரு ஏ.அகஸ்ரின் அடிகளார் கலந்து கொள்வார். (ந-135)

* * *

வடமராட்சி, டிசெ.6
குடத்தனை, காரையூர் அ.மி.த.க. பாடசாலை வருடாந்த ஒளி விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் மு.கதிர்காமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மணற்காடு பங்குத் தந்தை அருட்திரு.எல்மோ அருள்நேசன் கலந்து கொள்வார். (ந-8)

# கலை விழா

யாழ்ப்பாணம், டிசெ.6
பாலர் கல்விக் கழகத்தின் 10 பாலர்பாடசாலைகள் இணைந்து நடத்தும் 48 ஆவது வருடாந்த கலை விழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இராமநாதன் வீதி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
பாலர் கல்விக் கழகத் தலைவர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சத்ய சாயி சேவா நிலைய வட பிராந்திய இணைப்புக் குழுத் தலைவர் மருத்துவர் ஆர்.கணேசமூர்த்தி கலந்து கொள்வார். (ஒ-400)

* * *

வடமராட்சி, டிசெ.6
கற்கோவளம், புனிதநகர் புரட்சி முன்பள்ளியில் இருந்து விலகிய மாணவர்கள் கௌரவிப்பு விழாவும், கலை நிகழ்வும் முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் ந.இராசரத் தினம் தலைமையில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணசபைஉறுப்பினர்களான ச.சுகிர்தன், வி.சிவயோகன், எஸ்.சர்வேஸ்வரன், பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர்கள் எஸ்.மதியழகன், எஸ்.தவயோகநாதன் ஆகி யோர் கலந்து கொள் வார்கள். (ந-8)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.6
கோப்பாய் பாலர் பகல் விடுதிக் கலைவிழாநாளைசனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாலர் பகல்விடுதிவிளையாட்டுமண்டபத்தில்க.பரமானந்தராஜாதலைமையில் நடை பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்ரீசோமஸ் கந்தா கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரன், சிறுவர் நன்னடத்தைஅலுவலர்தஹரிசாந், ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் பத்மராசா பத்மகுமரா ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

# நிர்வாகம் தெரிவு

வவுனியா மாவட்ட முதியோர் சங்கக் கூட்டம் வவுனியா பிரதேச செயலாளர் உதயராசா தலைமையில் அண்மையில் நடை பெற்றது. இந்த நிகழ்வில் நிர்வாக உறுப்பினர் தெரிவும் இடம் பெற்றது. புதிய நிர்வாகிகளாக தலைவர் வைத்தியர் எம்.இ. ராமச்சந்திரன், செயலாளர் அ. யேசுநேசன், பொருளாளர் ரி. சலசலோசன் உட்பட மேலும் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இந்தக் கூட்டத்தில் வவுனியா பிரதேச செயலக முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி பிரகாஷினியும் கலந்து கொண்டார். (ஐ-402)

# ஆன்மிக நிகழ்வு

வடமராட்சி, டிசெ.6
தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இன்னிசை நிகழ்வு இடம் பெறும்.
நுண்கலைமாணி எஸ். விக்கினேஸ்வரன் பக்கவாத்தியங்கள் சகிதம் இன்னிசையை நிகழ்த்துவார். (வ-8)

# அந்தியேட்டி அழைப்பு



## Dr. (திருமதி) ருக்மணி உதயகுமார் (MBBS)

அன்னை மடியில் 13★04★1954 — ஆண்டவன் அடியில் 08★11★2013

கடந்த 08.11.2013 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு **Dr.ருக்மணி உதயகுமார்** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.12.2013) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிரியைகள் (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:**
அன்னாரின் மரணச் சடங்கு நிகழ்வில் பங்கு பற்றியவர்களில் எமது குடும்பத்துக்குத் தெரியாத அன்பர்களுக்கு எம்மால் நேரடியான அழைப்பு வழங்கமுடியவில்லை. எனவே இத் தவறினை மன்னித்து எமது இல்லத்தில் நடைபெறும் நிகழ்வில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


## நன்றி நவிலல்

08.11.2013 வெள்ளிக்கிழமை காலமான
**Dr. (திருமதி) ருக்மணி உதயகுமார்**
அவர்களின் பூதவுடலைப் பெறுவதற்கு சகல வழிகளிலும் உதவி புரிந்த தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சகல ஊழியர்கள் அனைவருக்கும், சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் காவல் உத்தியோகத்தர்கள், மல்லாகம் நீதிமன்றத்துக்கும், மரண விடயம் அறிந்தவுடன் வந்து சட்ட ரீதியான உதவிகள் அனைத்தையும் செய்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாணசபை உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களுக்கும், அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றி உதவிபுரிந்த உறவினர்கள், நண்பர்கள், ஏனையோர் அனைவருக்கும் உள்நாட்டு, வெளிநாட்டில் இருந்து மின்னஞ்சல் மூலம், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த சகலருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
மேற்குறிப்பிட்ட விடயத்தில் எவருக்கேனும் நன்றி சொல்ல மறந்திருப்பின் இந் நன்றியை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

V. உதயகுமார் (கணவர்)
U.அர்ச்சனா (மகள்)

அர்ச்சனா கிளினிக்,
மயிலணி, சுன்னாகம்.

(40861) (2.6.3)



சாவகச்சேரி இந்துக் கல்லூரி சித்திரப் பாட ஆசிரியர் செ.செல்வரமணனால் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் வரையப்பட்ட திருவள்ளுவர் உருவப் படத்தினை இந்திய துணைத் தூதுவர் திரைநீக்கம் செய்து வைத்தார். (ந-9)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ.6
யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட வைத்தீஸ்வராக் கல்லூரி தரம் 'ஏபி' பாடசாலையின் அதிபர் பதவி வெற்றிடமாகியுள்ளது. அதற்கு இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2 ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிக்கு யாழ்.மாவட்டத்துக்குட்பட்ட வலயங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், மாதிரி விண்ணப்பப் படிவத்தை மாகாண கல்வித் திணைக்களத்தில் பார்வையிட்டு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி மாகாண கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கு மாறுகேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ந)

## துயர் பகிர்கின்றோம்



ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் சமூக சேவை உத்தியோகத்தராகக் கடமை புரியும் கதிரவேலு சிதம்பரநாதன் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி **கதிரவேலு சின்னப்பிள்ளை**

அவர்கள் 04.12.2013 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாண மாவட்ட சமூக சேவை திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரி சங்கம், யாழ்ப்பாணம்.
(40872) (7.6.3)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட சிறிலங்கா சுதந்திர கட்சியின் பிரதான அமைப்பாளரும், வடமாகாணசபை உறுப்பினருமான கௌரவ அங்கஜன் அவர்களின் மாமனார்

**சிவசுப்ரமணியம் பாஸ்கரன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

றஜீவன் (உரும்பிராய்),
காந்தன் (அச்சுவேலி) (40866) (12.3.6)

# மாணவப் பருவத்திலேயே தமிழ் மக்களின் கலாசார பண்பாடுகளைப் புகட்ட வேண்டும்

## இந்தியத் துணைத் தூதுவர் தெரிவிப்பு

தென்மராட்சி,டிசெ.6
மாணவப் பருவம் மறக்க முடியாத பருவமாகும். இந்த மாணவ இளம் சந்ததியினருக்கு அறிவுரை வழங்குவது கடினமானது. எந்த வகையான கருத்துக்களைத் தெரிவித்தாலும் அதனை ஏற்றுக் கொள்வதென்பது அவர்களுக்குக் கடினமான விடய மாகும். மாணவப் பருவத்திலேயே அவர்களுக்கு தமிழ் மக்க ளின் கலாசார பண்பாடுகளைபுகட்ட வேண்டியஅவசியம்எமக்குண்டு. இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் புதன்கிழமை நடைபெற்ற பரிசில் நாள் நிகழ்வுக்கு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவராலய துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவப் பருவத்தில் ஆறு நோக்கங்களை வேதவாக் காகக் கொண்டு செயற்பட்டால் நாட்டில் சிறந்த கல்வி மானாக, நற்பிரஜையாக வரமுடியும். பெற்றோரை நேசிப்பது. ஆசிரியர்களை நேசிப்பது. புத்தகங்களை நேசிப்பது. நல்ல நண்பர்களைத் தேடுவது. கனவு காண்பது. தாழ்வு மனப்பான்மை யைத் தூக்கியெறிவது போன்ற நல்ல நோக்கங்களை மனதில் நிறுத்தி கல்வியைத் தொடருங்கள். அவை நிச்சயம் ஒரு நல்ல நிலைமைக்கு உங்களைக் கொண்டு செல்லும்.

எந்த விடயத்திலும் மனந் தளராமல் மீண்டும் மீண்டும்முயற்சிப்பீர்களாயின்உங்களுக்குவெற்றி கிட்டும்.

ஒவ்வொரு விடயத்திலும் விடா முயற்சி எடுங்கள். யாரும் யாருக்கும் சளைத்தவர்களல்லர் என்ற எண்ணத்துடன் சாதாரணமாக வாழப் பழகுங்கள். ஆசையே சகல துன்பங்களுக்கும்காரணமாக அமைகிறது.

தண்ணீருக்குள் காணப்படும் புழு பிடிக்க மீனும்கும், அந்த மீனைப் பிடிக்க மனிதனும், மனிதன் மண்ணுக்குள் புதைக்கப்படும் நாளை எதிர்பார்த்து புழுவும் காணப்படுவது இயற்கை.

அழிவை எதிர் நோக்கும் எந்தவொரு செயலிலும் ஈடுபடா மல் ஆக்கத்திறனாய் உலகுக்கு நன்மை ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடுங்கள் - என்றார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூது வராலய துணைத்தூதுவர் வி.மகாலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான கே.சயந்தன், ப.அரியரத்தினம், சாவகச்சேரிகோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம், சாவகச்சேரிநகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ந-9)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**செல்லையா வேலாயுதபிள்ளை**
(ஓய்வுபெற்ற பிராந்திய முகாமையாளர், தேசிய உப்புக்கூட்டுத்தாபனம், ஆனையிறவு)

பிறப்பு 10.10.1932 இறப்பு 01.12.2008

திதி: கார்த்திகை மாத பூர்வபக்க சதுர்த்தி (06.12.2013)

அப்பா! அம்மப்பா!
நீங்கள் மறைந்து ஆண்டுகள் ஐந்தின் பின்
இன்று; உங்கள் இல்லத்தில்
உங்களை அஞ்சலிக்கின்றோம்
என்றும் எங்களுக்குத் துணையிருங்கள்

"திருவதிகை",
அளவெட்டி.
(40873)(2.3.6)

உங்கள் நினைவுடன்:
அன்பு மகளும், ஆசைப் பேரன்களும்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **நாகலிங்கம் தங்கராசா**

திதி: 06.12.2013 (சதுர்த்தி)



எம் உயிரிலும் மேலான
உங்களை வருடம்
ஒன்று சென்றாலும்
எம் உயிர் உள்ள வரை
மறக்கமுடியாது.
உங்கள் ஆத்ம
சாந்திக்காக பிரார்த்திக்கும்

அன்பு மனைவி,
சகோதரர் மற்றும்
சகோதரிகள்.

அரசடிப் பிள்ளையார்
கோயிலடி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(c/11604)(45.3.6)

# மரண அறிவித்தல்கள்

## சுந்தரம் செல்வராசா



நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் செல்வராசா 04.12.2013 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்-பொன்னரியம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும், பாக்கியராணியின் அன்புக் கணவரும் இராசமணி (கொலன்ட்), மல்லிகாதேவி (கனடா), யோகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், துசியந்தி (ஜேர்மனி), சுகிந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷ்ணதாசன் (ஜேர்மனி), கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், கெவின், மார்பின், வனஜா (ஜேர்மனி), கார்த்திகன், டிலக்சன், கிசாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சபாரத்தினம் மற்றும் புஸ்பராணி, தேவராணி, இந்திராணி (யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியை), கமலராணி (கி/கனகாம்பிகைக்குளம் ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.12.2013 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகன் கோயிலடி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
(சி/2799) (7.6.3)
தகவல் : குடும்பத்தினர்.

## சந்தியோ அந்தோனிப்பிள்ளை எட்வேட்ஸ்

[அகில இலங்கை சமாதான நீதிவான்,
இளைப்பாறிய டிப்போ அத்தியட்சகர்-வடபிராந்திய
போக்குவரத்துச் சபை - NRTB]



குருநகர் மவுண் கார்மேல் வீதியைப் பிறப்பிடமாகவும், உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியோ அந்தோனிப்பிள்ளை எட்வேட்ஸ் நேற்று (05.12.2013) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியோ அந்தோனிப்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிமியோன் ஞானப்பிரகாசம்-பார்பரம்மா (குணம்) தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை, றோ.க. பாடசாலை, ஆனைக்கோட்டை) அவர்களின் அன்புக் கணவரும், ஆன் ஜேட்றூட் (டோட்டி), அன்ரன் (லண்டன்), அன்ரன் அல்பியூஸ் (கனடா), ஆன் றெஜினி (ஐடா), யேசுதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம், ஆனைக்கோட்டை.
T.P. : 021 221 3192 (40867)(7.6.3)
தகவல் : குடும்பத்தினர்.

## நூல்கள் வெளியீடு

தென்மராட்சி, டிசெ. 6

சாவகச்சேரி கல்வயல் வேதவன விநாயகர் மீது 'வயலூரான்' செ.சுதாகரன் பாடிய பிள்ளையார் தமிழ் நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

மருத்துவர் எஸ்.எஸ்.அருளானந்தம் தலைமையில் நடை பெறும் விழாவில் ஆசியுரையை சிவஸ்ரீ கி.சோமசுந்தரக் குருக்கள் செ.பரராஜசேகரக் குருக்கள் ஆகியோர் நிகழ்த் துவர்.

விளக்கவுரையை ஓய்வு நிலை விரிவுரையாளர் க.தர்மராஜாவும் வெளியீட்டுரையை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலனும், நயப்புரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் நிகழ்த்துவர்.

நூலின் முதற்பிரதியை மட்டுவில் கிழக்கு கந்தசாமி சிவரூபனும், இணைப் பிர தியை மடுப் பிரதேச செயலக கணக்காளர் நா.ரூபகரனும் பெற்றுக் கொள்வர். (ந-7-9)

### சைவப் பெருவள்ளலார் சேர் பொன். இராமநாதன் அவர்களின்

### குருபூசை தின விழா அழைப்பு



நிகழும் விஜய வருடம் கார்த்திகைத் திங்கள் 21ஆம் நாள் திருவோண நட்சத்திரம் கூடிய நாளை (07.12.2013) சனிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அத்திபாரமிட்டவரான சேர் பொன்.இராமநாதன் அவர்களின்

### குருபூசைத் தினமாகும்

இதனையொட்டி அன்று காலை 7.00 மணி தொடக்கம் 8.30மணி வரை பல்கலைக்கழகத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் அருள்மிகு பார்வதி சமேத ஸ்ரீ பரமேஸ்வரப் பெருமானுக்கு அஷ்டோத்தரசத (108) சங்காபிஷேகமும், விஷேட பூசையும் நிகழவுள்ளன. அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். அன்று காலை 8.30 மணிக்குப் பல்கலைக்கழக வளவிலுள்ள சேர் பொன்.இராமநாதன் அவர்களின் சிலைக்கும், பல்கலைக்கழக சபா மண்ட பத்திலுள்ள (Board Room) அவரின் உருவப் படத்துக்கும், துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம் அவர்கள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செய்யும் நிகழ்வும் இடம்பெறும்

**கலை நிகழ்ச்சி**

நாளை (07.12.2013) சனிக்கிழமை 4.00 மணிதொடக்கம் 5.00 மணிவரை யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறையினர் மற்றும் நடனத் துறையினர் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் இராமநாதன் நுண்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பரமேஸ்வராக் கல்லூரி, இயக்குநர் சபை, ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம், பரிபாலன சபை, இந்து மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(C/40865)(10.6.3)

## தென்னம் கன்றுகள் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.6

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் தென் னங்கன்றுகளைப் பெற விரும்பும் பயனாளிகள் தமது பிரிவு கிராம அலுவலர், பொருளாதார அபி விருத்தி மற்றும்சமுர்த்தி அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந் தில்நந்தனன் அறிவித்துள்ளார். (ந-7)

## இலக்கிய மன்ற ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ்ப்பாணத்தில் தற்போது வீழ்ச்சி கண்டுவரும் இலக்கியத்துறையை எழுச்சி காண வைக்க திசைகாட்டி தனியார் நிறுவனம் தனது சொந்த நிதி ஊட்டத்தில் திசைகாட்டி கலை இலக்கிய மன்றம் என்ற அமைப்பைத் தோற்றுவித்துள்ளது. சுதந்திர மாக இயங்கவுள்ள மேற்படி அமைப்புக்கு வருடம் தோறும் 2 லட்சம் ரூபா நிதி ஊட்டம் திசை காட்டியிடம் இருந்து கிடைக்குமெனவும், இது தொடர்பான கலந்தாய்வு எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு திசைகாட்டி அலுவலகத்தில் நடைபெறவுள்ள தாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கலந்துகொள்ள ஆர்வமுள்ளவர்கள் 021 221 9016, 021 568 9090 என்ற தொலைபேசி இலக் கங்களூடாகத் தொடர்பு கொண்டு முற்பதிவு செய்ய லாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

**அகரம்**
கல்வி நிலையம்

மல்லாகம் — தமிழ் மொழிமூலம் பி.ப 4.30மணி

கொக்குவில் — தமிழ், English மொழிமூலம் பி.ப 3.00மணி

வகுப்புக்கள் ஆரம்பம் 06.12.2013

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

**தொழிற்சாலை மேற்பார்வையாளர் (WORKSHOP SUPERVISOR)**

மேற்குறித்த பதவிக்கு தகைமையுள்ளோர் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:

* தச்சுவேலை (Carpentry), உலோக வேலை (Steel Fabrication) மற்றும் அலுமினிய வேலை (Aluminium work) போன்றவற்றினை மேற்பார்வை செய்வதில் முன்னனுபவம் இருத்தல் வேண்டும்.
* ஆவணப்படுத்தல் மற்றும் பதிவுகளைப் பேணும் திறமைவாய்ந்தவராகவிருத்தல் வேண்டும்.

தகைமையுடையோர் முழு விவரங்களும் அடங்கிய விண்ணப்பத்துடன் 10.12.2013ஆம் திகதிக்கு முன்பாகக் கீழ்வரும் முகவரிக்கு நேரில்வரவும்.

யூரோவில்
இல.45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

(கி14279) (12.3.6)

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
**ரமணி அம்மா தேவபாலசர்மா**

உதிப்பு 16.12.1957

உதிர்வு 16.11.2012

*திதி : பூர்வபட்ஷ சதுர்த்தி (06.12.2013)*


தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

துர்க்கை அம்மன் கோயிலடி,
கல்வயல், சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(கி/2798)(7.6.3)

## 6ஆம் மாத நினைவஞ்சலி



தோற்றம் 29.07.1951

மறைவு 13.06.2013

வாழ்வாங்கு வாழ்ந்து
வளம் கண்ட பேராளர்
வையத்து மாந்தரிடை
வள்ளலென திகழ்ந்த மகன்
நல்லவராய், வல்லவராய்
தொல்லுலகில் தொழிலுலகில்
புகழ்வென்ற பரம்சோதி
எல்லார்க்கும் வழிகாட்டி..
எம் வாழ்வுக் கொளியூட்டி
பலவோரும் புகழ்ந்தேற்ற
பாரினிலே சிறந்த மகன்
இவ்வுலகின் சுமை துறந்து
இறைபணியைத் தொடர்ந்திடவே
குஞ்சரித்தாய் அடியொற்றி
குவலயத்து வாழ்வகற்றி
வெங்கடேசன் அருள் மழையில்
அமைதி கண்டார். ஓம் சாந்தி...!
பங்கமிலாப் பெரும் வாழ்வில்
பணிமுடிந்து நிறைவுகண்ட
பரம்சோதிப் பெருங்கருணை
பாருள்ளவரை வாழும்..!
பாருள்ளவரை வாழும்...!

அமரர்
**சரவணமுத்து பரம்சோதி**
(இடைப்பிட்டி-காரை நகர்)
திதி: சதுர்த்தி

354/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
(வெங்கடேஸ்வரா)

(C/14280)(10.6.3)

# சிங்கி இறால்களின் உற்பத்தியை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை

*வியட்நாமிலிருந்து துறைசார் நிபுணர் வருகிறார்*

வலி.தென்மேற்கு, டிசெ.6
வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கும் சிங்கி இறால்களின் பாதுகாப்பையும் உற்பத்தியையும் விருத்தி செய்யும் நோக்கில் துறை சார்ந்த வெளிநாட்டு நிபுணரின் உதவியுடன் சிங்கி இறால் குஞ்சுகளைப் பிடித்துக் கூட்டில் விட்டு வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை றெக்ரா நிறுவனம் மேற்கொண்டுள்ளது.
இந்தத் திட்டம் முதற்கட்டமாக வலைப்பாடு கடற்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதால் அதற்கான சகல ஒழுங்குகளும் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

"_"
**சிங்கி இறால் குஞ்சுகளைப் பிடித்து கூட்டில் விட்டு வளர்ப் பதற்கான நடவடிக்கைகளை றெக்ரா நிறுவனம் மேற்கொண்டுள்ளது.**

பெறுமதியான கடல் உணவுகளில் பெறுமதியான வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சிங்கி இறால்களில் அவற்றைக் குஞ்சுகளை வளர்ச்சியடைய முன்பே கடலிலுள்ள பெரிய மீனினங்கள் பிடித்து உண்பதால் சிங்கி இறால்களின் உற்பத்தியும் இனப்பெருக்கமும் நாளுக்குநாள் அருகி வருகின்றன. இதனால் சிங்கி இறால்களுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன் அவற்றின் விலையும் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது.
எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு சிங்கி இறால்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் சிங்கி இறால் குஞ்சுகளைப் பாதுகாக்க முன்வந்துள்ள குறித்த நிறுவனம், வியட்நாம் நாட்டைச் சேர்ந்த துறைசார்ந்த நிபுணரை வரவழைத்து அவரின் ஆலோசனையுடனும் உதவியுடனும் குஞ்களைக் கூட்டில் விட்டு வளர்ப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரியிலுள்ள வலைப்பாடு கடற்பரப்பில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட கூடுகளை வைத்துக் குஞ்சுகளைப் பிடித்து வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப் பட்டுள்ளன. (வ-115)

## சுயவிவரக் கோவையை அனுப்பி வைக்கவும்

யாழ்ப்பாணம், டிசெ.6
யாழ்.வலிகாமம் வடக்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கலைஞர்கள் தமது சுயவிவரக் கோவையைப் பிரதேசசெயலக கலாசாரப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் கே.சிறீமோகன் அறவித்துள்ளார்.
அதாவது சிற்பம், ஓவியம், இசை (வாய்ப்பாட்டு, இசைக் கருவிகள்), நடனம், நாடகம், இலக்கியம், சித்த மருத்துவம், தவில், நாதஸ்வரம், சமூகசேவையாளர் ஆகிய துறை சார்ந்த வர்கள்தமதுசுயவிவரக்கோவையை அனுப்பி வைக்கலாம். (எ)

## ஊழியர் பணிக்கொடை

யாழ்ப்பாணம், டிசெ.6
லங்கா சிமெந்து நிறுவனம், இலங்கைப் போக்குவரத்துச் சபை ஆகியவற்றில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கான பணிக்கொடை கொடுப்பனவுகள் யாழ்.மாவட்டத் தொழில் துறைத் திணைக்களத்தால் வழங்கப்படுகிறன.
இதில் சிமெந்து நிறுவனத்தில் பணிபுரிந்தவர்களுக்கான கொடுப்பனவுகள் கடந்த 29 ஆம் திகதி முதல் வழங்கப் பட்டு வருகின்றது. இதுவரை இந்தக்கொடுப்பனவைப்பெற்றுக் கொள்ளாத எஸ்.பாலசிங்கம், வி.அருளாந்தம் மற்றும் என். இராசலிங்கம் ஆகிய மூவரையும் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்டத் தொழில் அலுவலகத்தில் வந்துபெற்றுக்கொள்ளுமாறும்- இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையில் பணிபுரிந்தவர்களுக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளாத எஸ்.ஜெயபாலன், எஸ்.சிறீதரன், ரி.தவநேசராசலிங்கம், கே.கங்காதரன், எம்.பரஞ்சோதி, ஆர்.கணேசன், கே.சிவராஜா, ஐ.துரைரத்தினம், எஸ்.செல்வரத்தினம், ஏ.செல்வராசா, ரி.தனபாலசிங்கம், கே. கணேசன் ஆகியோரை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் இந்தக் கொடுப்ப னவைப் பெற்றுக்கொள்ளுமாறு உதவித் தொழில் ஆணையாளர் நீலலோஜினி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (த-400)

## யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் பாரதி விழா

யாழ்ப்பாணம், டிசெ.6
யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுக்கும் பாரதி விழா வும் இணையத்தளத் தொடக்க நிகழ்வும் பாரதி பிறந்ததின மான எதிர்வரும் 11 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப் பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழ்ச் சங்க உபதலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வின் அனுசரணையாளர்களான கிருபா லேணேர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன் தம்பதியரும் திருநெல்வேலி தேனு களஞ்சிய உரிமையாளர் தி.ஸ்ரீமோகன ராஸ் தம்பதியரும் மங்கல விளக்கேற்றுவர். யாழ். கல்வி வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் கௌரி முகுந்தன் தமிழ்த்தெய்வ வணக்கம் இசைப்பார். வரவேற்புரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சுகந்தினி ஸ்ரீமுரளிதரனும் தொடக்க வுரையை தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல் நம்பியும் வாழ்த்துரையைத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் வழங்குவர்.
தமிழ்ச்சங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத் தைத் (www.thamilsan gam.org) துணைவேந்தர் ஆரம்பித்து வைப்பார். இதன் அறிமுகவுரையை மருத்துவ பீடப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா வழங்குவார். தொடர்ந்து இணையத்தளத்தை வடிவமைத்த தங்கராஜா தவரூபனுக்கான மதிப்பளிப்பு இடம் பெறும்.
'பாரதி யார்?' என்ற தலைப்பில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவின் சிறப்புரை. இராமநாதன் நுண்கலைத் துறையினர் வழங்கும் புதுமைப் பெண்கள் என்ற பொருளில் அமைந்த நாட்டிய நாடகம், யாழ். முன்னணிக் கலைஞர்கள் பல்வகையான பக்கவாத்தியங்களுடன் இணைந்து வழங்கும் நல்லதோர் வீணை என்ற பொருளில் அமைந்த பாரதி பாடல்களால் ஓர் இசை அர்ச்சனை ஆகிய நிகழ்வு களும் இடம்பெறவுள்ளன. (வ)

## சங்கத்தின் சொத்துக்களை பாதுகாத்தல் ஊழியர் கடமை

*யாழ்.மாவட்ட கூ.ஆணையாளர் தெரிவிப்பு*

அச்சுவேலி, டிசெ.6
கூட்டுறவுச் சங்கங்களின் சொத்துக்கள் பொதுமக்களின் சொத்துக்களே. அவற்றை பாதுகாத்து மேல் நிலைப்படுத்த வேண்டியது ஊழியர்களின் மேலான கடமை. இதில் துஷ்பிரயோகத்துக்கு இடமில்லை. நிதி இழப்பு ஏற்படும் இடத்து சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை, கூட்டுறவுத் திணைக்களம் மேற் கொள்ளும். இதில் சலுகைகள் விட்டுக் கொடுப்புகளுக்கு இடமே இல்லை.
இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் கே.அருந்தவநாதன்.
கோப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் சங்கத்தின் தலைவர் மு.சிவசுந் தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஆணையாளர் தொடர்ந்தும் உரையாற்றும் போது:-
கூட்டுறவுச் செயற்பாடுகள் ஜனநாயகம் சார் நிலையில் தனித்தும் ஒருமித்தும் மேற்கொள்ளப்படுகின்றன.
சங்கத்தின் செயற்பாடுகள் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களின் நலனைக் கருத்தில் கொண்டே முன்னெடுக்கப் படுகின்றன.
கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெறப்படும் இலாபம் ஊழியர்கள், உறுப்பினர்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படுகின்றது. இந்த நிலையில் ஊழியர்கள் மிக நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். கூட்டுறவுச்சங்கங்களின் சொத்து பொதுமக்களின் சொத்து. அதனை பாதுகாக்க வேண்டியது பணியாளர்களின் மேலான கடமை.
ஊழியர்களால் ஏற்படக்கூடிய நிதி இழப்பு உரிய வேளையில் செலுத்தப்பட வேண்டும். இல்லாவிடில் கூட்டுறவுத் திணைக்களம் அவர்களைச் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கிஅதனை அறவிடுவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளும். இந்த விடயத்தில் சலுகைகள், விட் டுக் கொடுப்புக்களுக்குஇடமேஇல்லை - என்றார். (வ-11)

"_"
**சங்கத்தின் செயற்பாடுகள் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களின், நலனைக் கருத்தில் கொண்டே முன்னெடுக்கப்படுகின்றன.**

## இறைச்சிக் கோழிகளின் கழிவுகளால் துர்நாற்றம்

வடமராட்சி, டிசெ.6
துன்னாலை வடக்கு சோழியவத்தைப் பகுதியில் பராமரிப்பு அற்ற நிலையில் உள்ள காணியில் இறைச்சிக் கோழிக் கழிவுகள் கொட்டப்படுவதால் பொது மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.
மந்திகையில் இருந்து சோழிய வத்தை வீதி ஊடாக துன்னா லைப் பகுதியில் உள்ள கிராமங்களுக்கும் அந்தக் கிராமங்களிலிருந்து மந்திகைக்கும் சென்று வருவோர் இறைச்சிக் கோழிக் கழிவுகளின் துர்நாற்றத்தின் மத்தியில் பயணிப் பதாகத் தெரிவித்தனர்.
கழிவுகளை அப்புறப்படுத்த பருத்தித்துறை பிரதேச சபை நடவடிக்கை எடுக்குமா என்று அந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (வு-8)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை - 2013



இவ்வருடம் நடைபெற்ற தரம் - 05
புலமைப்பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த எமது பாடசாலை மாணவி
செல்வி
**ஜெஸ்லி அன்ரன்
ஜெயராசா குயிலினி**
[164–புள்ளிகள்] அவர்களையும்
**100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**
ஜெ. நிதுசன் (145) வி. தனுசாந் (145)
எ. எமசன் (142) கௌ. மரியஸ்ரலா (136)
தி. ரம்மியா (125) ஜெ. சானினி (119)
ம. நிக்ஷன் (118) ர. அபிரதன் (117)
ச. சரின்சியா (105)
ஆகிய மாணவர்களையும் இவர்களுக்கு கற்பித்த ஆசிரியை திருமதி யோ. மரியசோபனா அவர்களையும் பாடசாலையின் அதிபர் திரு. ஞா. ஜெபநேசன் அவர்களையும் மனதார பாராட்டுவதோடு அவர்கள்
சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.
Congratulations
பாடசாலைச் சமூகம்
மு/இரணைப்பாலை றோ. க.ம.வி

## Uduvil Girls' College

Invitation

"O HOLY NIGHT"

(A Christmas Musical)

*Please join us as we celebrate the birth of Christ on Friday, December 6th, at 4.00 pm in the college' hall.*

Principal,
Staff & Students.

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் பட்டதாரிப்பயிலுனராகக் கடமையாற்றிய **செல்வி சிறீதரன் கேமலதா** அவர்களினதும் அவரது தாயார் **சறோஜினி சிறீதரன்** அவர்களினதும் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும்
சகல நலன்புரிசங்க அங்கத்தவர்களும்.

நலன்புரிசங்கம்
பிரதேச செயலகம் தெல்லிப்பழை

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
02.09.1948

உதிர்வு
09.12.2010

அமரர் **தம்பிஐயா
இணுவை சுப்பிரமணியம்**
(கடவுள் - இளைப்பாறிய அதிபர்)

திதி : கார்த்திகைச்சதுர்த்தி

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவதுண்டோ - இவ்வையகத்தே
என்று தான் எம்மை ஆற்றமுடியுமோ - அப்பா

என்றும் உங்கள்
நினைவோடு
குடும்பத்தினர்.

துரை அகம்
வட்டுவினி இணுவில் மேற்கு, சுன்னாகம்.

## வீடு வாடகைக்கு

யாழ்.நல்லூர் வைமன் வீதியில்
அமைந்துள்ள மூன்று அறைகளுடன்
கூடிய வீடு வாடகைக்குண்டு.
அலுவலகப் பாவனைக்கு அல்லது
அதிகாரிகளின் வதிவிடத்திற்கு
உகந்தது. பார்வையிடவும்.

தொடர்பு: 077 104 6141

# காணாமற்போனோர் புள்ளிவிவரம் சர்வதேசத் தரமானது

## அமைச்சர் பஸில் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.6

"காணாமற்போனோர், இறந்தோர் தொடர்பான இலங்கையின் புள்ளிவிவரங்கள் சர்வதேச தரத்துக்கு அமைவானவை. அதனால்தான் சர்வதேசமும், பொதுநலவாயமும் இலங்கையின் புள்ளிவிவரங்களை ஏற்றுக்கொண்டுள்ளன".

இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் உரை யாற்றிய அவர், மேலும் தெரி வித்ததாவது:-

வாழ்வின் எழுச்சி சட்டம் உயர் நீதிமன்ற வியாக்கியானத்துக்கு எதிராகவே நிறைவேற்றப்பட்டது எனக் கூறுகின்றனர்.

இந்த விடயத்தில் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகள் அனைத்தும் உள்ளடக்கப் பட்டே அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

தனிநபர் ஒருவர் வாழ்வைக் கொண்டுநடத்துவதற்கு நாளொன் றுக்கு 3 டொலர் தேவை என்றனர். ஆனால்,



சாதாரண கூலித்தொழில் செய்பவரே நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா வருமானம் பெறுகிறார். அதாவது அது 7.4 டொலர்களாகும்.

தனி மனித அபிவிருத்தி - குடும்ப அபிவிருத்தி - கிராம அபிவிருத்தி - நாட்டின் அபிவிருத்தி என்ற திட்டங்களின் அடிப்படையிலேயே நாம் பயணிக்கிறோம். - என்றார். (ச-சி)

# உடன்படிக்கை கைச்சாத்து

கொழும்பு,டிசெ.6

இந்து சமுத்திரத்தில் கடற் கொள்ளையர்களது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தியாவும் இலங் கையும் உடன்பட்டிருக்கின்றன.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனுக்கும் இடையில் அண்மையில் இடம் பெற்ற சந்திப்பின் போது இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலுள்ள பொதுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இந்த உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

# மஹிந்தவும் – மன்மோகனும் தமிழர்களை வைத்து வியாபாரம் நடத்துகின்றனர்

## விக்கிரமபாகு காட்டம்

கொழும்பு,டிசெ.6

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கையை வைத்து வியாபாரம் செய்துகொள்கிறார்கள்.

இவ்வாறு நவசமசமாஜக் கட் சியின் பொதுச் செயலர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.

"மன்மோகன் சிங் இங்கு வருகை தருவதால் தமிழர்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை. ஆனால், இதன் மூலம் தமிழர்களுக்கு ஒரு விடிவு காலம் பிறக்குமானால் அது சிறப்பானதே" என்றும் அவர் கூறினார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்து வோம் அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்றுமுன் தினம்நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றி போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாடு தற்போது பல்வேறுபட்ட அழுத்தங்களுக்கு மத்தியில் பயணிக்கிறது. அமைச்சர் திஸ்ஸ விதாரணவும் சில விடயங்களில் அரசை அழுத் தியுள்ளார். இந்தநிலையில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நாட்டுக்கு வருகை தந்து வடக்குக்கு பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனால், இந்தப் பயணத்தில் நன் மைகள் கிடைக்குமா என் பது தற்போது சந்தேகமாகவே உள்ளது. இங்குள்ள தமிழர்களை வைத்து வியாபாரம் செய்வதிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் குறியாகவுள்ளனர். அவர்களுக்கு வடக்கு ரயில் பாதையும், சம்பூர் அனல் மின்நிலைய முமே முக்கியமாகும். அப்படியிருக்கையில் எப்படி தமிழர்கள் நன்மையை எதிர் பார்க்க முடியும்? -என்றார். (ச-சி)

**போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்**

கமநலதிணைக்கள விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் (சனி 1.00 மணி) SLEAS திறந்த பரீட்சை (ஞாயிறு 10.00 மணி) ஏனைய பரீட்சைகளுக்கான பொது அறிவு பொது உளச்சார்பு (சனி ஞாயிறு 1.00 மணி) மற்றும் பதவி உயர்வு வினைத்திறன்கான் தடைப்பரீட்சை திறந்த பல்கலைக்கழக சட்டமாணி கற்கைநெறி (சனி ஞாயிறு 9.30 மணி) என்பவற்றுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

T.P : 075 4164564

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டபடிப்புகள் பிரிவு யாழ்.நகர்

## காணவில்லை



புகையிரத ஒழுங்கை யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த **ஞானசீலன் கௌதினி (யான்சி)** வயது 29 என்பவரை நேற்று முன்தினம் (04.12.2013) மு.ப. 10.30 மணிக்கு ஊர்காவற் துறையில் உள்ள தனது மாமனார் வீட்டிலிருந்து யாழ்ப்பாணம் வரும் பஸ்ஸில் பயணம் செய்தவர் பின் காணவில்லை இவரைக் கண்டவர்கள் பின்வரும் T.P மூலம் அறியத் தரவும்.

தொடர்பு :

021 2224083, 077 7245207, 077 3620817, 077 8285375

**Vacancies**

எமது யாழ்.நகர் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Computer Lecturer (Part time)- Male / Female**

(The applicant should possess B.Sc Computer Science or BIT Degree, Age between 24-30 and minimum 2 years experience in similar field.

**Lecturer for C, C++, Java - Male / Female**

**Instructor for C, C++, Java - Male / Female**

(The applicant should possess Recognized Higher Diploma,HND or HNDIT, Ability to take Batch Class, Part time or Full time Faculties can apply).

Please forward your Bio data with in 7 days

**ASIAN COMPUTER EDUCATION**

e-mail : asianedu@dialogsl.net

# பண்டிகைக் காலத்தில் திடீர் சோதனைகள்

கொழும்பு,டிசெ.6

பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் அதிகார சபை திடீர்ப் பரிசோதனைகளை மேற் கொள்ளவுள்ளது. இந்தக் காலங்களில் 3000 திடீர்ப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பொருள்கள் காலாவதியா கும் தினம், லேபல் இல்லாத பொருள்கள், உற்பத்தியா ளர்முகவரி இல்லாதபொருள் கள் தொடர்பாக அவதா னம் செலுத்தப்படும். உணவுப் பொருள்களில் அடங்கியுள்ள கலவைகள், அவற்றின் போஷாக்குத் தன்மை போன்றவை குறிப்பிடாத பொருள்களும் கடைகளில் இருந்து அகற்றப்படும் என்று பாவனையாளர் அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்தார்.

அன்பளிப்புப் பொருள்கள், அலங்காரப் பொருள்கள், வாண வேடிக்கைப் பொருள்கள் ஆகியவைக் கடும் சோதனைக்குட்படுத்தப் படும். பண்டிகைக் காலத்தில் கேக் தயாரிப்புக்கான பொருள்கள், இனிப்புப் பதார்த் தங்கள் போன்றவை குறித்தும் விசேட அவதானம் செலுத்தப்படும் என்று அவர் மேலும் கூறினார். (ச)

# வெடிபொருள் வைத்திருந்த நபருக்கு சிறை

கொழும்பு,டிசெ.6

பெரும் தாக்கம் விளைவிக்கக் கூடிய ஆர்.டி. எக்ஸ் என்னும் ரகத்தைச்சேர்ந்த வெடி பொருள்களை வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்ட ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் புதன் கிழமை 3 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்ததுடன் தண்டமாக 5000 ரூபாவை செலுத்து மாறும் உத்தரவிட்டுள்ளது.

இந்தநபர் கொழும்பில் 2001 ஆம் ஆண்டில் 11கிலோகிராம் வெடி பொருளை வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## யாழ். வணிகர் கழகத்தினருக்கு எமது இதயம் கனிந்த நன்றிகள்

கிளி/பூனகரியின் மண்ணின் மைந்தனும் ஓய்வு நிலை அரசாங்க அதிபருமாகிய உயர்திரு. திருநாவுக் கரசு இராசநாயகம் அவர்களின் தலைமையில் போர்க் காலச் சூழ்நிலையால் பாதிக்கப்பட்டு புத்துயிர் பெற்று வரும் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமச் சைவச் சிறுவர் இல்லத்தின் ஆதரவற்ற மகளிர்க்கு தங்கியிருந்து கல்வி கற்க வசதியான புதிய விடுதியை பெருநிதியிட்டு நிர்மாணித்துக் கொடுத்துள்ள மதிப்பிற்குரிய யாழ்.வணிகர் சங்கத்தினருக்கு எமது சிரம் தாழ்த்தி நன்றியினை தெரிவிப்பதுடன், நாளை (07.12.2013) சனிக்கிழமை நடைபெறவுள்ள யாழ். வணிகர் சங்க புதிய மகளிர் விடுதி திறப்பு விழா இனிதே நிறைவுற இறைவனை வேண்டுகின்றேன்.

எஸ்.எஸ்.சின்னத்தம்பி J.P,
முன்னாள் கிராம சேவை அலுவலர்,
கி.சே.சங்க முன்னாள் தலைவர் (வட்டக்கச்சி).

(37597)
(10,14)

## 30ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04.01.1927

மறைவு
08.12.1983



அமரர் ஆறுமுகம் பொன்னம்பலம்
(மாஸ்ரர்)

கருணையின் கடலைக் காணோம்
கனவிலும் கனதி கொண்டோம்
காலத்தின் சக்கரத்தில் அகவைகள்
முப்பது உருண்டிட்டாலும் விழிகளில்
உணர்வு பொங்க நாங்கள்
நிணைந்துருகும் தெய்வம் நீங்கள்

சம்பியன் லேன்,
கொக்குவில்.

பிள்ளைகள்,
மருமக்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வானில் உதித்த நாள்
22.11.1957

பூமி பறித்த நாள்
17.11.2012

**நடராசா பத்மநாதன்**

திதி: சதுர்த்தி

அன்புள்ளம் கொண்ட எம் அன்பு அப்பாவே!
ஆசையுடன் எம்மை அரவணைத்துக் கொண்டீரே
இன்னல் பல வந்தாலும்
இன்முகம் கொண்டீரே!

ஆண்டொன்று ஆனதப்பா
உம் பிரிவு வாட்டுதப்பா
மீண்டும் நீர் வாரீரோ
மீளாத் துயர் துடைப்பீரோ

(40880)(10.14)

இல. 17, அச்சுக்கூட வீதி,
தலையாளி, கொக்குவில்.

குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்







திரு. இராமச்சந்திரன் சந்திரதாஸ்
(B.com.P.G.D in Ed SLACS III)

திரு. தியாகராசா ஜெகதீஸ்வரன்
(J.P whole Island, M.A. PGD inTamil, PGD in Ed Dip in Hp)

எமது கல்லூரியிலிருந்து இலங்கை கணக்காளர்சேவை தரம் III போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து வடமராட்சி கல்வி வலயத்தில் கணக்காளராகக் கடமையாற்றும் ஆசிரியர் திரு. இ. சந்திரதாஸ் அவர்களையும் 28.05.2013 அன்று அகில இலங்கை சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட எமது கல்லூரி ஆசிரியர் திரு. த. ஜெகதீஸ்வரன் அவர்களையும் அகமகிழ்ந்து பாராட்டுவதுடன் அவர்களின் சேவை சிறப்புற வாழ்த்துகின்றோம்

ஆசிரியர் கழகம். யா/கொக்குவில் இந்துக்கல்லூரி கொக்குவில்

# இராணுவ ட்ரக் - மோ. சைக்கிள் விபத்தில் இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 06

யாழ். ஸ்ரான்லி வீதியுத் மணிக் கூட்டு வீதியும் சந்திக்கும் இடத்தில் நேற்று இரவு இடம்பெற்ற இராணுவ வாகனம் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

நேற்று இரவு 9.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.


கற்பகப்பிள்ளையார் கோவில் வீதி, உடுவிலைச் சேர்ந்த தில்லைநாதன் சாந்தரஞ்சன் (வயது - 24) என்ற இளைஞரே படு காயமடைந்தவராவார்.

இராணுவ வாகனத்தின் வலது பக்க பின் சில்லுடன் இளைஞர் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் தூக்கி வீசப்பட்டு இளைஞர் படுகாயமடைந்தார். மோட்டார் சைக்கிளின் முன் பக்கம் மிகமோசமாக சேத மடைந்தது. படுகாய மடைந்த இளைஞர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். அவரது நிலை கவலைக் கிடமாக இருந்தது.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாரும் படையினரும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

விசாரணைகளின் பின்னர் இராணுவ வாகனமும் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

(த-4-400)



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஈ.பி.டி.பி

சபையின் தலைவருமாகிய டானியல் றெக்ஷியன் படுகொலை செய்யப்பட்டிருப்பதனை மருத்துவமனை ஆதாரங்களை வைத்து நீதிமன்ற விசாரணைகள் நடத்திவருகின்றன.

ஈவிரக்கமற்ற இப்படுகொலை குறித்து சந்தேகத்தின் பேரில் எமது கட்சியின் உறுப்பினர் கந்தசாமி கமலேந்திரன் கைதாகி நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார். நீதிமன்ற விசாரணையில் இருக்கும் இவ்விடயம் குறித்து நாம் தற்போது எவ்வித கருத்துக்களும் கூற முடியாது.

ஆனாலும், இது குறித்து மக்களுக்கு கட்சியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும்.

வன்முறைகள், அச்சுறுத்தல்கள் மற்றும் படுகொலைகள் போன்ற ஜனநாயக விரோத செயற்பாடுகளால் எமது மக்கள் கடந்த காலங்களில் பேரவலங்களையே சந்தித்து வந்திருக்கின்றார்கள்.

இது போன்ற படுகொலைச் சம்பவங்களை எமது கட்சியின் தலைமை ஒருபோதும் அனுமதித்திருந்ததும் இல்லை. நியாயப்படுத்தியிருந்ததும் இல்லை. கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலான முரண்பாடுகள் எந்த கட்சிக்குள்ளும் இல்லாமல் இல்லை. ஆனாலும் அப்படியான முரண்பாடுகள் கட்சியின் கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட்பட்டே தீர்க்கப்படல் வேண்டும்.

எமது கட்சியின் கட்டுப்பாட்டு விதிகளில் இருந்து மீறுவோர் எவராயினும் கட்சியில் இருந்து நிரந்தரமாகவே விலக்கப்படுவார்கள் - என்றுள்ளது. (ஐ)

### துப்பாக்கிச்

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் வவுனியா வேப்பங்குளம், யாழ் ஐஸ்கிறீம் வீதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் சற்குணசேயோன் பாலசுந்தரி (வயது 60) என்பவரே காயமடைந்துள்ளார்.

இவரின் மகன் நிகழ்வொன்றுக்கு சென்றிருந்த நிலையில் குறித்த பெண் தனியாக வீட்டில் இருந்துள்ளார். இதன் போது இரவு 8.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரிகள் குறித்த பெண் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அயலவர்கள் உதவியுடன் இவர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பெண் ஓய்வுபெற்ற கிராம சேவகர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-402-422)

### போரழிவு மதிப்பீடு

கப்பட்டுள்ளன. குடும்பமாக உயிரிழந்து அல்லது காணாமற் போயிருந்தால் அவர்கள் தொடர்பான தகவல்களை அவர்களின் உறவினர்கள் வழங்க முடியாது.

இதனால் வடக்கில் கணக்கெடுப்பு நடத்தும் கிராம சேவையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முரண்பாடுகள் உருவாகின்றன. பல இடங்களில் மக்கள் கிராம சேவையாளர்களுடன் வாக்குவாதப்பட்டுள்ளனர்.

அண்மையில் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் காணாமற் போன தனது சகோதரனின் பெயர் விவரங்களைக் கிராம சேவையாளர் பதிவு செய்ய மறுத்துள்ளமை தொடர்பில் சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த தபேந்திரன் அரசகுமாரி என்பவர் மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் இணைப்பாளர் த.கனகராஜிடம் கேட்ட போது, முறைப்பாடுவாய்மொழி மூலம் கிடைக்கப்பெற்றதாக வும் இது தொடர்பில் சம்பந்தப் பட்ட பிரதேச செயலரிடம் விளக் கம் கேட்டதாகவும் கூறினார்.

அத்துடன் இது இரு திணைக்களங்களால் முன்னெடுக்கப்படும் பணி என்பதால், பிரதேச செயலர்களைப் பொறுப்புச் சொல்ல முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். (த-5-86)

### காணாமற்

களை விதித்துத் தகவல்கள் வெளிவராமல் இருட்டடிப்பு செய்ய முயல்கின்றது. காணாமற் போனோரின் விவரங்களை மறைக்கவும் எத்தனிக்கிறது.

எனவே இந்தச் செயற்பாட்டைக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ள காணாமற் போனோரைத் தேடியறியும் குழு, ஐ.நா மனித உரிமைகள் சபையின் அனுசரணையுடன் சுயாதீன விசாரணை வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் குறித்த குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சர்வதேச அழுத்தம் காரணமாகக் காணாமற் போனவர்கள் தொடர்பில் எதையாவது செய்ய வேண்டிய நிலையில் ஆட்சியாளர்கள் உள்ளனர் எனவே தான் தொகை மதிப்புப் புள்ளி விபர திணைக்களத்தின் ஊடாக காணாமற் போனவர்களை மதிப்பீடு செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

காணாமற் போனவர்களுடன் நேரடியாக உறவு உள்ளவர்களே தகவல்கள் வழங்க முடியும் என்று தெரிவிக்கின்றனர். தமிழ்த் தேசத்தில் முற்றாக குடும்பங்கள் அழிக்கப்பட்ட நிலையே அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே இரண்டாவது தரப்பினரே தகவல்களைக் கொடுக்க வேண்டிய நிலை உள்ளது.

அரசு தகவல்களை இருட்டடிப்புச் செய்யவே புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாக எண்ணத் தோன்றுகின்றது.

அண்மையில் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் கணக்கிடும் வேளையில் ஒரு குடும்பத்தில் தாய், தந்தை இருவருமே உயிரிழந்துள்ளனர். அவர்களின் மகள் தனது சகோதரனைக் காணவில்லை என்று முறைப்பாடு கொடுக்க முனைந்த போது அந்த முறைப்பாட்டை ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளனர். அதற்கான காரணத்தைக் காணாமற் போனவரின் சகோதரி கேட்டபோது, சகோதரி திருமணம் முடிந்துள்ளதனால் முறைப்பாட்டை ஏற்க முடியாது என்று கூறியுள்ளனர்.

எனவே இவ்வாறான செயற்பாட்டினை காணாமற்போனோரைத் தேடியறியும் குழு வன்மையாகக் கண்டிப்பதோடு காணாமற் போனவர்கள் தொடர்பாக அவர்களின் எந்த உறவுகளாலும் முறைப்பாடு செய்யும் முறைமையை ஏற்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. (த-5)

### போரழிவு

ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணிகள் எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளன.

இதன் போது திரட்டப்பட்ட தகவல்கள் உண்மையானவையா என்பதை மேற்பார்வை செய்வதற்காகத் தென்னிலங்கையிலிருந்து விசேட குழுவினர் வடபகுதிக்கு வருகை தரவுள்ளனர்.

இவர்கள் நேரடியாக திரட்டப்பட்ட தகவலின் உண்மைத் தன்மையை மதிப்பீடு செய்யவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-5)

### அடுத்த

தொடர்பிலும் இதில் சுட்டிக் காட்டப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்ட வடக்கு மாகாண சபையைக் கொண்டு நடத்துவதில் தொடர்ச்சியாக மத்திய அரசு முட்டுக்கட்டை போட்டு வருகின்றது. வடக்கு மாகாணசபைக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்படாமையால் அதன் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் தடங்கல்கள் நிலவுகிறது. இவை தொடர்பிலும் அமெரிக்க அதிகாரிகளுக்கு எடுத்து விளக்கினோம் - ஏன்றார் சுமந்திரன்.

இலங்கை அரசுக்கு எதிராக அடுத்த ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் மற்றுமொரு பிரேரணை முன்வைப்பதற்குரிய முன்னாயத்த நடவடிக்கைகளுக்காக மேற் படி குழுவினர் இங்கு வந்துள்ளனர்.

இன்று திருகோணமலைக்கு செல்லும் இந்தக் குழுவினர், வடக்கு - கிழக்கு உட்பட சகல பகுதிகளையும் நேரடியாகப் பார்வையிட்டு நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கையிடவுள்ளனர் என்றும் சுமந்திரன் மேலும் கூறினார். (த-5)

### வடக்கில்

திருந்ததாகவும், இதனால் 8 மணி நேரம் தரை வழியாகப் பயணம் செய்தே தான் யாழ்ப்பாணம் சென்றதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவிலுள்ள தமிழ் ஊடகங்களுடன் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்துக்கான வான் வழிப்பாதை மூடப்பட்டதால், 8 மணிநேர தரைவழியூடான பயணத்தின் மூலம் யாழ்ப்பாணம் செல்வதைத் தவிர எனக்கு வேறு வழி இருக்கவில்லை.

யாழ்.மறை மாவட்ட ஆயர், வட மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் 'உதயன்' பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஆகியோருடன் வேறு யார் யாரைச் சந்தித்தேன் என்பதை வெளியிட முடியாது. இதனால் அவர்களின் உயிருக்கு ஆபத்து எற்படலாம்.

போர் இல்லாத போதிலும் கூட வட பகுதியில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை.

வடக்கு மாகாண ஆளுநராக இருக்கின்ற ஒய்வுபெற்ற இராணுவ அதிகாரி சந்திரசிறி மற்றும் மத்திய அரசின் அதிகளவான தலையீடுகளால் வடக்கில் உள்ள மக்கள் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான க.வி. விக்னேஸ்வரன் தெரிவித் தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்பும் போது வன்முறைகளில் உயிரிழந்த எல்லாப் பொதுமக்களினதும் நினைவாக ஆனையிறவில் மலர்வளையம் வைத்தேன். ஆனையிறவு ஒரு நடுநிலையான இடம் - என்றார்.

இதேவேளை - ஆனையிறவில் மலர்வளையம் வைப்பதற்காகவே தீபக் ஒப்ராய் தரை வழியாக யாழ். சென்றார் என்று பாதுகாப்பு அமைச்சு குற்றம் சுமத்தியுள்ளது.

ஆனையிறவு நடுநிலையான இடம் என்பதன் பொருள் என்னவென்று தீபக் ஒப்ராய்க்கு மட்டும் தான் தெரியும் என்று அது மேலும் குறிப்பிட்டுள்ளது.

'ஆனையிறவில் வைக்கப் பட்ட மலர் வளையத்தின் எழுதப்பட்டிருந்த சிங்கள, ஆங்கில வாசகங்களுக்கும் தமிழ் வாசகத்துக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது.

தமிழில் எழுதப்பட்ட குறிப்பில், போரில் உயிரிழந்த எல்லாச்சிறுபான்மையினப் பொதுமக்களின் நினைவாக, என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பொதுநலவாய மாநாட்டின் போது, வடக்குக்கான வான் வழிப்பாதை மூடப்பட்டிருந் தது என்ற குற்றச்சாட்டை, விமா னப் படைத் தளபதி எயர் மார் சல் ஹர்ச் அபேவிக்கிரம நிராகரித்துள்ளார்.

போர் நடந்த பகுதிக்கு செல்ல விரும்பிய வெளிநாட்டு பிரதிநிதிகளுக்குப் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்க அரசு தயாராகவே இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். (த-5)

### தந்தைக்கும்

பெண்ணும் கொள்ளையர்களால் தாக்கப்பட்டார்.

படுகாயமடைந்த மூவரும் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

உடுவில் லவ்லேனிலுள்ள தோட்ட வெளியில் அமைந்துள்ள வீடொன்றுக்குள் நள்ளிரவில் கொள்ளையர்கள் புகுந்துள்ளனர்.

அப்போது வீட்டிலுள்ள நாய் வழக்கத்திற்கு மாறாக குரைத்ததுடன், மாடுகளும் ஒலி எழுப்பின. இதனால் விழித்துக் கொண்ட வீட்டு உரிமையாளர் வீட்டின் கதவைத் திறந்து வெளியே வர முயன்றார். இதன் போது கதவுடன் மறைந்திருந்த கொள்ளையர்கள் அவரைக் கோடரியால் வெட்டியுள்ளனர்.

தந்தையின் அலறலைக் கேட்டு மகன் ஓடி வந்த போது மகனையும் அவர்கள் கோடரியால் வெட்டிக் காயப்படுத் தினர்.

தொடர்ந்து வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டிலிருந்த ஏனையோரைச் சரமாரியாகத் தாக்கி ஓர் இடத்தில் அமருமாறு சிங்களத்தில் கூறியுள்ளனர்.

இதன் பின்னர் வீட்டுக்குள் பணம், நகை என்பன இருக்கும் இடங்களைச் சல்லடை போட்டுத் தேடி வீட்டை அலங்கோலப்படுத்தினர்.

இந்த நேரத்தில் அயலில் உள்ளவர்கள் விழிப்படைந்து தமது வீட்டு மின் குமிழ்களை ஒளிரச் செய்ததும் பதற்றமடைந்த கொள்ளையர்கள் கொள்ளையிடும் முயற்சியைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-4-86-400)

### தொண்டுப்

லும் நடத்தப்படும் என்று நினைக்கவில்லை. எனவே தான் நாங்கள் ஒரு சர்வதேச விசாரணையைக் கோருகின்றோம். இலங்கை ஆட்சியாளர்களுடன் பல ஆண்டுகள் ஒத்துழைத்த பின்னரே இந்த முடிவுக்கு வந்துள்ளோம்' என்று 'அக் ஷன் பார்ம்' அமைப்பின் மனித நேயச் செயற்பாட்டு ஆலோசகர் பாலின் செட்குவிட் பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதி குறித்த நிறுவனத்தின் பணியாளர்கள் 17 பேர், திருகோணமலை மூதூரிலுள்ள அவர்களின் அலுவலகத்தில் வைத்துச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

இவர்கள் முழங்காலிடப்பட்டு விசாரணையின்றிச் சுடப்பட்டனர். இவர்களைச் சுட்டவர்கள் இலங்கை இராணுவத் தினர் தான் என்பதற்குத் தம்மி டம் ஆதாரங்கள் இருப்பதாக 'அக் ஷன் பார்ம்' அமைப்பு தெரிவித்திருந்தது.

இந்த நிறுவனம் நீண்ட காலத்தின் பின்னர் இதை ஏன், இப்போது வெளியிட்டது என்று இலங்கை இராணுவம் கேள்வி எழுப்பியிருந்தது.

இந்த நிலையில் குறித்த நிறுவனத்தின் மனித நேயச் செயற்பாட்டு ஆலோசகர் பாலின் செட்குவிட் இது குறித்துக் கூறுகையில், இந்த விடயத்தில் எங்களுக்குக் கிடைத்த சாட்சியங்கள் மிகவும்எளிமையானவை.

இவைகள் முழுமையாக வெளியிட்டால் அது யார் இந்த சாட்சியங்களைத் தந்தார்கள் என்ற அடையாளத்தைக் காட்டிக் கொடுத்துவிடும். அது அவர்களுக்குப் பாதுகாப்பானதாக இருக்காது என்று அஞ்சுகின்றோம்.

எனவே தான் தெளிவாக மேற்கோள் காட்டத் தேவையில்லாத எந்த ஒரு வாக்கு மூலத்தையும் நாங்கள் நேரடியாக மேற்கோள் காட்டவில்லை. மாறாக, ஏற்கனவே பொது வெளியில் இருக்கும் வாக்கு மூலங்களை, இந்த வாக்கு மூலங்களுடன் வைத்துச் சரி பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

இது, யார் எங்களுக்குத் தகவலைத் தந்தார்கள் என்பதை வெளியிடாமல், எங்களுக்கு வந்த தகவலைச் சரிபார்த்துக் கொள்ள கிடைத்திருக்கும் ஒரு வழி என்றார். (த-5)

### நாடாளு

இந்தியப் பிரதமர் இலங்கை வரலாம், யாழ்ப்பாணம் செல்லலாம். அதில் எமக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் அதற் கான ஒழுங்கு மரபுகள் பின் பற்றப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று சிறப்புரிமைப் பிரச்சினையின் கீழ் கருத்துகளை முன்வைத்த போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் இலங்கை பயணம் தொடர்பில் அண்மையில் நான் இந்தச் சபையில் முன்வைத்த கருத்தை ஆங்கிலப் பத்திரிகை ஒன்று இந்தியப் பிரதமரின் இலங்கை பயணத்தை ஐ.தே.க. எதிர்க்கின்றது என பெரிய எழுத்துகளில் பிரசுரித்துள்ளது. இந்தியப் பிரதமரின் இலங்கை பயணத்தை ஐ.தே.க. எதிர்க்கவில்லை.

வடமாகாண முதலமைச்சரின் அழைப்பை ஏற்று அவர் இலங்கை வரலாம். யாழ்ப்பாணம் செல்லலாம். எமக்குப் பிரச்சினையில்லை. ஆனால் அவரின் இலங்கை பயணத்துக்கு உரிய ஒழுங்கு மரபுகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதையே கூறினேன். இந்தியப் பிரதமரின் இலங்கை பயணத்தை ஐ.தே.க. எதிர்க்கவில்லை" என்றார் ஜோன் அமரதுங்க. (சி)

# மைலோ கிண்ண உதைபந்தாட்டம் நேற்று வடமராட்சியில் ஆரம்பமானது

யாழ்ப்பாணம், டிசெ.6

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுத் துறையினரால் நடத்தப்படும் மைலோ வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று வியாழக்கிழமை இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் தமது அணிக்காகக் கோல்களைப் பெற வேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்தனர்.

இதன்போது ஆட்டத்தின் 3 ஆவது நிமிடத்தில் டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் பிறேம்குமார் தனது அணிக்கான முதல் கோலைப் போட்டார்.

இதனை அடுத்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் கோல்களைப் பெறுவதற்காக எதிரணியின் கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.

ஆட்டத்தின் 9 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணி வீரர் குகரதன் தனது அணிக் கான் முதல் கோலைப் போட் டார்.

இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணிவீரர் பிரகாஸ் தனது அணிக்கான இரண்டாவது கோலைப் போட்டார்.

ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டபோது யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.



இரண்டாம் பாதி ஆட்டத்தின் 46 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் குகரதன் மீண்டும் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தனது அணிக்கான மூன்றாவது கோலைப் போட்டார்.

ஆட்டத்தின் 50 ஆவது நிமிடத்தில் டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் மதுசுதன் தனது அணிக்கான இரண்டாவது கோலைப் போட்டார்.

மீண்டும் 58 ஆவது நிமிடத்தில் டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணிவீரர் துசிகரன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி மூன்றாவது கோலைப் போட்டார்.

ஆட்டம் முடிவடைந்த போது இரு அணியினரும் தலா 3 கோல்களைப் பெற்றிருந்தமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி, தோல்வி காண்பதற்காக 5 சமநிலை உதைகள் வழங்கப்பட்டன.

இதில் டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரு தரப்பினரும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இரு அணியினுடைய பின்கள வீரர்களின் தடுப்பாட்டத்தால் கோல் பெறும் முயற்சிகள் தடுக்கப்பட்டன.

இதனால் முதற்பாதி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் போது 31 ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் அணி வீரர் விஸ்ணுதரன் தனது அணியினுடைய முதலாவது கோலைப் போட்டார்.

கலைமதி விளையாடடுக் கழக அணி தமது அணிக்காக கோல்களைப் பெறுவதற்குக் கடும் முயற்சி மேற்கொண்டது.

மீண்டும் 55 ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் அணி வீரர் பிரவின்குமார் தனது அணிக்காக இரண்டாவது கோலைப் போட்டார்.

மீண்டும் 56 ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் அணி வீரர் அனுஷன் 3 ஆவது கோலை அடித்தார்.

ஆட்ட முடிவில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், டிசெ.6


முல்லைத்தீவு 591 ஆவது இராணுவப் படைப்பிரிவு நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித்தொடரில் லீக் முறையிலான ஆட்டங்களில் இன்று வெள்ளிக்கிழமை அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் சென்.யூட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளம் பறவை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அதில் இன்று வெள்ளிக்கி ழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத் தில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)



கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த வாரம் இடம்பெற்ற வடக்கு மாகாண சபையின் 4 ஆவது வர்ண இரவு நிகழ்வில் பாடசாலைகளுக்கான தேசிய மட்டப் போட்டியில் 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரம் போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்ற வவுனியா அல். இக்பால் மகா வித்தியாலய அணியினர் கௌரவிக்கப்பட்டனர். கௌரவம் பெற்ற வீராங்கனைகள் விருந்தினர்களுடன். (த-23)

## திருக்குமரன் வென்றது

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இரு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## சென்ஸ்ரார், வானவில் அணிகள் வெற்றி

வலி.வடக்கு, டிசெ.6

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளையொட்டி வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் துணைவி சென்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் வானவில் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுள்ளன.

போட்டிகள் அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றன.

அராலி வானவில் விளையாட்டுக் கழகத்துக்கும் கலைவாணி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்ற நிலையில் சம நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.


“-”

சென் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சம நிலை தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து வானவில் விளையாட்டுக் கழகம் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

துணைவி சென்.ஸ்ரார் அணிக்கும் வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் சென் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-86)

## கோப்பாய், வேலணை அணிகள் இறுதிக்கு



யாழ்ப்பாணம், டிசெ.6

அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான யாழ்.மாவட்ட செயலகங்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்துக்கு கோப்பாய் பிரதேச செயலக அணி, வேலணை பிரதேச செயலக அணி ஆகியன தகுதி பெற்றுள்ளன. (த-23)

## மின்னொளி உதைபந்தாட்டம் வவுனியாவில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.6

வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் மின்னொளியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் நாளை




சனிக்கிழமை வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இந்தச் சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்று ஆட்டங்கள் லீக் முறையிலான ஆட்டங்களாகவும், இரண்டாம் சுற்று ஆட்டங்கள் விலகல் முறையிலான ஆட்டங்களாகவும் இடம் பெறவுள்ளன எனவும், இந்தச் சுற்றுப்போட் டித் தொடரில் 20 விளை யாட்டுக் கழகங்கள் பங்கு கொள்கின்றன எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

# கோஹ்லி ஏமாற்றம்

மும்பையில் அறிவிக்கப்பட்ட ஐ.சி.சி ஒருநாள் போட்டி மற்றும் டெஸ்ட் அணியில் கோஹ்லியின் பெயர் இடம் பெறாததால் அவர் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளார்.
ஆண்டு முழுவதும் வீரர்கள் கலந்துகொள்ளும் போட்டிகளில், அவர்களுடைய விளையாட்டுதிறனை அடிப்படியாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச கிரிக்கெட் சபை, ஒரு நாள் போட்டி மற்றும் டெஸ்ட் அணிகளைத் தேர்வு செய்கிறது. இந்த ஆண்டுக்கான அணிதேர்வு சமீபத்தில் நடைபெற்றது. இதன் விவரத்தை ஐ.சி.சியின் முதன்மை செயற்குழு அதிகாரி டேவிட் ரிச்சர்ட்ஸன் வெளியிட்டார்.
இதில் சமீபகாலமாகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்பத்தி வரும் இந்திய வீரர் விராட் கோஹ்லியின் பெயர் இடம்பெறும் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. ஆனால், அவருடைய பெயர் இடம் பெறவில்லை. ஆனால், இந்திய வீரர்கள் ஷிகர் தவன் மற்றும் ரவீந்திர ஜடேஜா ஆகியோர் ஒருநாள் அணியில் இடம்பிடித்துள்ளனர். அதேபோல டெஸ்ட் அணியில் புஜாரா மற்றும் 12ஆவது வீரராக அஸ்வின் தேர்வாகி உள்ளனர்.
கடந்த ஆண்டு ஓகஸ்ட் முதல் இந்த ஆண்டு ஓகஸ்ட் வரை இரண்டு சதங்கள் உள்பட 689 ஓட்டங்கள் குவித்து, சராசரி 40.52 என்ற நிலையில் உள்ள கோஹ்லி, ஐ.சி.சி அணியில் தேர்வாகாமல் போனதால் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளார்.
கோஹ்லி இடம்பெறாதது குறித்து கருத்து தெரிவித்துள்ள ரிச்சர்ட்ஸன், அணியில் இடம் கிடைக்காத அதிர்ஷ்டமில்லாத வீரர்களில் தானும் ஒருவர் என்பதை கோஹ்லி நினைத்துக் கொள்ள வேண்டும். அடுத்த ஆண்டுக்கான அணியில் கோஹ்லியின் பெயர் இடம்பெறவில்லை என்றால் தான் ஆச்சரியம் என்று தெரிவித்துள்ளார். (த)





# இங்கிலாந்து தயார்

சொந்த மண்ணில் அபாரமாக விளையாடி வரும் ஆஸ்திரேலிய அணிக்கு பாடம் புகட்ட இங்கிலாந்து அணி காத்திருக்கிறது.
இரு அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடர் ஆஸ்திரேலியாவில் நடந்து வருகிறது. இங்கிலாந்தில் நடந்த கடந்த தொடரில் அடைந்த தோல்விக்கு பழி தீர்க்கும் விதமாக சொந்த மண்ணில் அவுஸ்திரேலியா அணி துடிப்புடன் செயல்படுகிறது.
அதற்கேற்ப பிரிஸ்பேன் கபா மைதானத்தில் நடந்த முதல் டெஸ்டில் ஆஸ்திரேலிய அணி 381 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.
இதே உற்சாகத்தில் அடுத்தடுத்த போட்டிகளில் வெற்றிபெறும் முனைப்பில் அந்த அணி உள்ளது. மிச்செல் ஜோன்சன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறும் இங்கிலாந்து எழுச்சி பெறக் காத்திருக்கிறது.
இது குறித்து இங்கிலாந்தின் துடுப்பாட்ட பயிற்சியாளர் கிரஹாம் கூச் கூறுகையில், வார்த்தைப் போரையும் ஆட்டத்தின் ஓர் அங்கமாகக் கருதிச் சாதிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (த)

# பாடசாலைப் போட்டிகளில் 15 பேர் விளையாட வேண்டும்



ஒவ்வொரு வீரருக்கும் தங்களது திறமையை நிருபித்துக்காட்ட குறைந்த பட்சம் 3 போட்டிகளில் வாய்ப்பு கொடுக்க வேண்டும்

பாடசாலைப் போட்டிகளில் 15 வீரர்களுடன் ஆட அனுமதிக்க வேண் டும் என்று சச்சின் டெண்டுல்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற டெண்டுல்கருக்கு மும்பை கிரிக் கெட் சங்கம் சார்பில் நேற்று முன்தினம் பாராட்டு விழா நடந்தது.
இந்த விழாவில் கலந்து கொண்டு பேசிய டெண்டுல்கர், இளம் வீரர்களுக்கு அதிகமான வாய்ப்பு களை உருவாக்க வேண்டும். ஐ.பி.எல் போட்டியை அறிமுகப் படுத்தியதன் மூலம் சிறிய நகராங் களில் கிரிக்கெட் வேகமாக பரவி யது. இன்று சிறிய நகரங்களில் இருந்து ஏராளமான வீரர்கள் வந்து கொண்டு இருக்கிறார்கள்.
மும்பை கிரிக்கெட் சங்கத்துக்கு நான் இந்த நேரத்தில் ஒரு வேண்டு கோளை வைக்கிறேன். பாடசாலைகளுக்கு இடையேயான போட்டிகளில் 11 பேருக்கு பதிலாக 15 வீரர்களை விளையாட அனுமதிக்க வேண்டும் என்றார். (த)

# உலகக் கிண்ண மைதானங்கள் இன்னும் தயாராகவில்லை



2014 உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான மூன்று விளையாட்டரங்குகளின் நிர்மாணப் பணிகள் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் நிறைவடையாது எனச் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.
காலதாமதமடையும் ஷாவ் போலோவிலுள்ள விளையாட்டரங்கின் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருந்த இருவர் கடந்த மாதம் உயிரிழந்திருந்தனர்.
இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபத்தை தெரிவித்த சம்மேளனத்தின் தலைவர் செப் பிளட்டர் முதலாவது போட்டிக்கு விளையாட்டரங்கு தயாராகும் எனவும் சுட்டிக்காட்டினார். விளையாட்டரங்குகள் தொடர்பான பிரச்சினை மிகவும் சிறிய ஒன்றெனவும் அது குறித்து கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




எனினும் இந்த விளையாட்டரங்குகள் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் தயாராகும் என சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் ஜேரோம் வல்ஹி கூறியுள்ளார். (த)

# கோபத்தில் காம்பிர்



டில்லி அணியில் தனக்கு தேவையான வீரர்களை தெரிவு செய்யாத கோபத்தில் காம்பிர் உள்ளதாகத் தெரிகிறது.
இந்திய அணி வீரர் காம்பிர் உடற்தகுதி இல்லாமல் தவித்ததால், ரஞ்சி தொடரில் விளையாடி வருகிறார். டில்லி அணியின் தலைவராக உள்ளார். இந்நிலையில், இன்று தொடங்கும் ஐந்தாவது லீக் போட்டியில் ஒடிசாவைச் சந்திக்கிறது டில்லி.
இதற்கான அணி தேர்வுக்கூட்டத்தில் காம்பிர் பங்கேற்கவில்லை என கூறப்படுகிறது.
இது குறித்து டில்லி கிரிக்கெட் சங்கத்தின் நிர்வாகி ஒருவர் கூறுகையில், தலைவர் காம்பிர் கூடுதல் சுழற்பந்து வீச்சாளர்களைக் கேட்டார்.
மனோஜ் சவுகான் இடம்பெற வேண்டும் என விரும்பினார். தேர்வாளர்களோ, மோகித் சர்மாவுக்கு வாய்ப்புத் தந்ததாகத் தெரிகிறது. இதனால், காம்பிர் கோபத்தில் உள்ளார்," என்றார்.

# இலங்கைக்கெதிரான தொடரில் மொஹமட் இர்பான் இல்லை?



இலங்கை அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் இர்பான் பங்குபற்ற மாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவருக்கு இடுப்பில் சிறியளவிலான என்பு முறிவு ஏற்பட்டுள்ளதாலேயே அவரால் டெஸ்ட் தொடரில் பங்குபற்ற முடியாது போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் தென்னாபிரிக்க அணிக்கெதிராக இடம்பெற்ற தொடரின் போது காயமடைந்த மொஹமட் இர்பான், அதன் பின்னர் தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற தொடரில் பங்குபற்றியிருக்கவில்லை.

இலங்கை அணி 2, 20/20 சர்வதேசப் போட்டிகள், 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 3 டெஸ்ட் போட்டிகளுக்காக ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் செல்ல வேண்டியிருந்த நிலையில், 20/20, ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான குழாமில் மொஹமட் இர்பான் இடம்பெற்றிருக்கவில்லை.

எனினும் டிசெம்பர் 31ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள டெஸ்ட் போட்டியில் அவர் பங்குபற்றுவார் என்ற நம்பிக்கை காணப்பட்டது. ஆனால் அவரது உபாதை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவருக்கு 6 வாரங்கள் ஓய்வு தேவைப்படும் எனவும், அதன் காரணமாக டெஸ்ற் தொடரில் அவர் பங்குபற்ற மாட்டார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (கு)

# நியூசிலாந்து வீரர்களிடம் விசாரணை




கிரிக்கெட் ஆட்ட நிர்ணயச் சதிகள் தொடர்பில் நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்கள் சிலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் மோசடிகளுக்கு எதிரான மற்றும் பாதுகாப்புக் குழு இந்த விசாரணைகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களாகத் தொடர்ந்து இந்த விசாரணைகள் இடம்பெறுகின்றன. நியூநிலாந்து கிரிக்கெட் சபையின் அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள வீரர்கள் குறித்த விபரங்கள் வெளியாகவில்லை எனினும், இது நியூசிலாந்து கிரிக்கெட்டுக்கு ஏற்பட்டுள்ள துரதிஸ்டவசமான சம்பவம் என்று, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# அதிக பதக்கங்களை பிரிட்டன் வெல்லும்




2016ஆம் ஆண்டு ரியோ ஒலிம்பிக் போட்டிகளில் அதிக பதக்கங்களை வெல்ல முடியும் என பிரிட்டன் விளையாட்டு சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் பிரிட்டன் குறிப்பிடத்தக்க அளவு சோபிக்கவில்லை என்ற கருத்து நிலவுகிறது.

எனினும் இந்த பின்னடைவு, 2016ஆம் ஆண்டு ஒலிம்பிக்கைப் பாதிக்காது என்று, பிரிட்டனின் விளையாட்டுத்துறை சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (கு)

# ஆஸ்திரேலியா முன்னிலையில்



அவுஸ்திரேலியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆசஷ் தொடரில் பிரிஸ்பேனில் நடந்த முதல் டெஸ்டில் ஆஸி. 381 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்தநிலையில், இரு அணிகள் மோதும் 2

ஆவது டெஸ்ட் போட்டி அடிலய்டில் நேற்று தொடங்கியது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா முத லில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது.

தொடக்க வீரர் வார்னர் 29 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். மற்றொரு தொடக்க வீரர் ரோஜர்சும், வாட்சனும் சிறப்பாக ஆடினார்கள். இருவரும் அரை சதத்தை கடந்தனர்.

வாட்சன் 51 ஓட்டங்களுடனும், ரோஜர்ஸ் 72 ஓட்டங்களுடனும் ஸ்டீவன் சுமித் 6 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழந்தனர்.

அதன்பின் வந்த பெய்லி 53 ஓட்டங்களுடன் வெளியேறினார். தலைவர் கிளார்க் நிதானமாக நின்று விளையாடினார். அவுஸ்திரேலியா முதல் நாள் ஆட்ட முடிவில் 5 இலக்குகள் இழப்பிற்கு 273 ஓட்டங்களை எடுத்துள்ளது.

கிளார்க் 48 ஓட்டங்களுடனும் ஹடின் 7 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இங்கிலாந்து தரப்பில் பிராட் 2 இலக்குகளை வீழ்த்தினார். (400)


**சிவந்த மேனியராக மாற விளையும் உங்கள் எண்ணம் ஈடேற**

**குளுமை மிக்க பொன்னான தேசம்.............**

பல இலட்சம் எங்கள் உறவுகள்,
எங்கள் தமிழர் கலாசாரம் போற்றிக்காக்கப்படும்................

வளம் மிக்க கனடா தேசத்தில்
நீங்களும் படித்து உழைக்க

கனடா சென்று சிவந்த மேனியராகும் உங்கள் எண்ணம் நனவாக்க நாங்கள் இருக்கின்றோம் நம்பி வாருங்கள் எதிர்வரும் (15 ஆம் திகதி) வரை விசேடஆலோசனைகளும், (30 % கட்டணக்) கழிவுகளும் உண்மையிலேயே வழங்கப்படும். விரைந்து வாருங்கள், முன்னர் எம்மோடு இது பற்றிப் பேசியவர்களும் சில நிபந்தனையோடு மீண்டும் இலவசமாக எம்மோடு கருத்துப் பரிவர்த்தனை செய்யலாம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016, 0215689090
WWW. thisaivisa.com



26 ஆவது வருட கல்விச் சேவையில்...
புதிய
**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

**புதிய கல்வியாண்டு - 2014**
தரம் 1 முதல் O/L வரை
● தமிழ் மொழிமூலம் ● English Medium

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**
07.12.2013 சனி பி.ப. 3.00 மணி
**புதிய அனுமதிகள் இன்று முதல்**

பெப்ரவரி - 01 இல் நடைபெறவுள்ள திறந்த பல்கலைக்கழக LLB போட்டிப் பரீட்சைக்கான
**விசேட கருத்தரங்கு தொடர்**
(ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நடைபெறும்)
ஆரம்பம்:- 07/12/2013
சனிக்கிழமை -9.00-2.00
விரிவுரையாளர் P. உமாசங்கர்
வழமையான ஆசிரியர்

நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
T.P 0774696695



**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

A/L 2014, 2015 கலைப்பிரிவு

**அரசியல் திரு. ஸ்ரீரங்கநாத்**
2014 - துரித மீட்டலும், Paper Class (9-10 மணி)
2015-ஒப்பீட்டு அரசியல் (10-11 மணி)

**புவியியல் திரு. சர்மா**
2014 - கனிப்பொருள் வளங்கள் (10-11 மணி)
2015-சனத்தொகை (11-12 மணி) (C/14271) (10.6.3)

**ஆரம்பம் - 07.12.2013**



**SUBRA சித்தன்கேணி**
**கிளை - வட்டுக்கோட்டை**
தரம் 1 முதல் O/L வரை
(தமிழ் - ஆங்கில மொழிமூலம்)
புதிய பிரிவுகள் ஆரம்பம்
**07.12.2013 சனி மாலை 3.30 மணி**
வலி. மேற்கில் கல்விக்குத் தனியிடம் பெற்ற ஓரே நிறுவனம்
**SUBRA**
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
40 மாணவர்களுக்கு மட்டும் ஒரு வகுப்பில் அனுமதி
* மாதாந்தம் பயிற்சிப் பரீட்சைகள்
* நவீன கற்பித்தல் சாதனங்களுடன் புதிய பிரவேசம் (C/14261) (10.6.3)
* மாணவர்களுக்கான இலவச நூலக வசதி
* கடமை - கண்ணியம் கட்டுப்பாட்டுடனான தனித்துவமான நிறுவனம்



தரம் 6 முதல் O/L ற்கு
யாழ் நகரின் No: 1 கல்வி நிறுவனம்
**எடிசன் அக்கடமி**
யாழ் | கலட்டி | நல்லூர் | கொக்குவில் | வட்டுக்கோட்டை | சுன்னாகம்
புதிய கல்வி ஆண்டு 2014
**தரம் 6 முதல் O/L வரை**
(தமிழ் மொழி மூலம் & English Medium)
ஆரம்பம் T.P 0777737926
09/12/2013 திங்கட்கிழமை



**மலேசியா நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**

(3 Years Contract (Work Permit) Furniture Factory மரத்தளபாட உற்பத்தி உதவியாளர் Helpers -Nos 20 அதி உயர் சம்பளம் +OT+ மேலதிக உற்பத்திக்கு Commission 3வருட முடிவில் கை நிறைய சம்பளத்துடன் தொழில் ஒன்றையும் கற்றுக்கொள்ள அரியதோர் சந்தர்ப்பம் வயதெல்லை 22 - 38 ( ஒரு மாதத்துக்குள் பயணம் விரையுங்கள்)

உங்கள் Passport சகிதம் எதிர்வரும் 7 ஆம் திகதி இல. 24 Station Road வவுனியா Lanka Voice இலும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் Hospital வீதி ஆசிர்வாதம் ஒழுங்கையில் அமைந்துள்ள Green Grass Hotel இலும் காலை 9.00 மணி முதல் பி.ப. 1.00 மணி வரை உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

வீட்டுப்பணிப்பெண்களும் உடன்தேவை. ( 2 Years work permit செய்து கொடுக்கப்படும்)
தொடர்பு: Lanka Voice 075 0650084, 024 5615610



**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.021.222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)



**விக்னா**
கல்வி நிறுவனம். 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
**புதிய கல்வியாண்டு 2014**
தரம் 6 தொடக்கம் **O/L** பிற்பகல்
ஆரம்பம் 12.12.2013 3.00 மணி
எமது நிறுவனத்தின் தன்னிகரில்லா தனித்துவமான ஆசிரியர் குழாம் (C/14272) (10.6.3)

| | |
|---|---|
| கணிதம் - விக்கி ரூபன் | விஞ் - தேவா, நிரோஜன் ஜெயவதனன் |
| ஆங்கிலம் - விஸ்வநாதன் செல்வரட்ணம் | தமிழ் - சபேஷன் சசிரூபன் |
| வரலாறு - பார்த்தீபன் கமல் | சமயம் - N.T. தரன், பாபு |
| புவியியல் - கமல் | வர்த்தகம் - சுரேந்திரன் |


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.